பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 ஆடி 20, சனிக்கிழமை 05.08.2017 கதிர் 272

## தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுக்கூட்டமும் தேசிய மாநாடும்

யாழ்ப்பாணம்,ஓக.05

தமிழர் விடுதலைக் கூட்டணியின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் தேசிய மாநாடும் நாளையும் நாளைமறுதினமும் முற்பகல் 10 மணிமுதல் யாழ்ப்பாணம் நீராவியடியில் உள்ள இலங்கைவேந்தன் கலைக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

கட்சியின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமையும், தேசிய மாநாடு நாளை மறுதினம் திங்கட்கிழமையும் நடைபெறும். (உ)

### விக்னேஸ்வரனின் கடிதத்தை அடுத்து

# கூட்டமைப்புத் தலைவர்கள் கூட்டத்தை இன்று யாழில் கூட்ட சம்பந்தன் முயற்சி



## முதல்வரின் இல்லத்தில் மாலையில்



யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 05

“ஏற்கனவே நாமிருவரும் நடத்திய பேச்சுக்களின் போது இணக்கம் காணப்பட்டபடி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களுடனான நமது கூட்டத்தை இயன்ற விரைவில் கூட்டுங்கள்.” - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தனைக் கடிதம் மூலம் கோரியிருக்கின்றார் வடக்கு மாகாண முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன் என அறியவந்தது.

இதனையடுத்து, இன்று மாலை 4.30 மணிக்கு வடக்கு மாகாண முதல்வரின் யாழ்ப்பாணம், கோவில் வீதி இல்லத்தில் இந்தக் கூட்டத்தைக் கூட்டுவதற்கான ஏற்பாடுகளைச் சம்பந்தன் நேற்றிரவு முன்னெடுத்தார் என்றும் தெரியவந்தது.

பக்கம் 18 »

## ஈ.பி.ஆர்.எல்.எவ். பகிஷ்கரிக்க முடிவு! ரெலோ, புளொட்டும் கூட பங்குபற்றா?

யாழ்ப்பாணம்,ஓக.05

இன்று மாலை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ள கூட்டமைப்புத் தலைவர்களின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஈ.பி.ஆர். எல்.எவ். பங்குபற்றாது என அதன் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் 'காலைக் கதிர்' நாளிதழுக்கு நேற்றிரவு தெரிவித்தார்.



இந்தக் கூட்டத்தில் ரெலோ, புளொட் ஆகிய கட்சிகளின் தலைவர்களும் பங்குபற்றுவதற்கான வாய்ப்புக்கள்

பக்கம் 18 »

## சமஷ்டி கேட்கும் தமிழரசுக் கட்சி பிரிவினை கோரும் அமைப்பல்ல!

### உயர்நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பு

கொழும்பு, ஓக.05

இலங்கைத் தமிழரசுக் கட்சி பிரிவினையைக் கோரும் அமைப்பு என்பதனால் அதனைத் தடை செய்யு மாறு கோரித் தாக்கல் செய்யப்பட்ட விசேட மனுவை நீண்டகால விசாரணையின் பின்னர் உயர் நீதிமன்றம் நேற்று தள்ளுபடி செய்து தீர்ப்பளித்தது.

பிரதம நீதியரசர் பிரசாத் டெப், நீதியரசர்கள் உபாலி அபேரட்ண, அனில் குணரட்ன ஆகியோரைக் கொண்ட ஆயமே இந்தத் தீர்ப்பை நேற்று வழங்கியது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி அரசமைப்பின் ஆறாவது திருத்தஏற்பாடுகளுக்க

பக்கம் 18 »

### உள்ளூராட்சித் தேர்தலை எதிர்கொள்வது எப்படி?

## தனித்தா? கூட்டாகவா? முடிவு தமிழரசு கையில்!

### விசனத்துடன் கூறுகிறார் சித்தர்



கொழும்பு, ஓக. 05

விரைவில் நடக்கக் கூடிய உள்ளூராட்சித் தேர்தலில் நாங்கள் கூட்டமைப்பாக ஒற்றுமையாகத் தேர்தலில் குதிப்பதா? அல்லது பிரிந்து நின்று கேட்பதா? – இதனை இலங்கைத் தமிழரசுக்கட்சியே முடிவு செய்ய வேண்டும். அக்கட்சியினரின் செயற் போக்கில்தான் இந்த விடயத்தில் நாம் எடுக்கும் முடிவு தங்கியுள்ளது.

– இவ்வாறு புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன் எம்.பி.

பக்கம் 18 »

## மீண்டும் வடக்கில் புலிகள் யுத்தம் நடத்த முடியாது!

### எதையும் எதிர்கொள்ள படையினர் தயார்; இராணுவத் தளபதி உறுதி

கொழும்பு, ஓக.05

தமிழீழ விடுதலைப் புலிகள் வடக்கில் மீண்டும் ஒரு யுத்தத்தை நடத்துவதற்கு இடமளிக்கப்படமாட்டாது என, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

வடக்கில் சில இளைஞர் குழுக்கள் தமது தேவைகளுக்காக சமூக விரோதச் செயல்களில் ஈடுபடலாம். அதன் அர்த்தம் முழுமையாக விடுதலைப் புலிகள் என்பது அல்ல என்று தெரிவித்த அவர், அதற்காக வடக்கில் விடுதலைப் புலிகள் இல்லை



பக்கம் 18 »

## புலிகளின் கோரிக்கையை ஏற்றிருந்தால் 2005 இலேயே ஜனாதிபதி பதவியில் ரணில்

### இப்படி நாடாளுமன்றில் ஹக்கீம் விளக்கம்

கொழும்பு,ஓக.05

விடுதலைப்புலிகளின் இடைக்கால அரசு யோசனையை ஏற்றிருந்தால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க 2005ஆம் ஆண்டே ஜனாதிபதியாகியிருப்பார் என்றும், எனினும், நாட்டு நலனைக் கருத்தில் கொண்டு அத்திட்டத்தை அவர் நிராகரித்தார் என்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற அரசியல்

பக்கம் 18 »

## தமிழ்க் கூட்டமைப்பில் ஒன்றுபட்டு செயற்படுவது காலத்தின் கட்டாயம்

### ரெலோ திட்டவட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.05

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகள் நான்கும் கூட்டமைப்பில் ஒன்றுபட்டுச் செயற்படுவது காலத்தின் கட்டாயம் என்று ரெலோ திட்டவட்டமாகவும் தெளிவாகவும் தெரியப்படுத்தியிருக்கின்றது.

இது தொடர்பில் அக் கட்சியின் செயலாளர் நாயகம் என். சிறிகாந்தா நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டு கட்சியின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தினார்.

பக்கம் 18 »

அளப்பு அருணாசலம்




## ஜெயசேகரத்தை மாகாண சபை உறுப்பினராக நியமித்தமையை நியாயப்படுத்தி மாவை கடிதம்



யாழ்ப்பாணம், ஓக.05

வடக்கு மாகாண சபையின் போனஸ் ஆசனத்துக்கு சுழற்சி முறையில் தமது கட்சிப் பிரதிநிதியை நியமிக்காதமையை ஆட்சேபித்து புளொட் தலைவர் த.சித்தார்த்தன் எழுதிய கடிதத்துக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா பதிலளித்துள்ளார்.

அந்தப் பதவிக்கு ஜெயசேகரம் நியமிக்கப்பட்டமையை நியாயப்படுத்தும் விதத்தில் அந்தப் பதில் அமைந்துள்ளது.

பக்கம் 03 »

# நல்ல சமூகத்தை உருவாக்கக் கூடிய பண்பாளர்களாக நீங்கள் மாறவேண்டும்

## காக்கைதீவு பொதுச்சந்தை திறப்பு விழாவில் முதலமைச்சர்



நாளுக்கு நாள் முன்னேற்றமடைந்து வரும் சமுதாய வளர்ச்சியில் பங்குதாரர்களாக இணைந்து கொண்டு ஒரு பண்பட்ட சமூகத்தை உருவாக்குவதற்கும் தவறுகளை தட்டிக் கேட்கக் கூடியஅல்லது தடுத்துநிறுத்தக் கூடிய வல்லமை உள்ளவர்களாகவும் நீங்கள் மாறவேண்டும். அது உங்களால் முடியும்.

-இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் நேற்று காக்கைதீவுப் பொதுச் சந்தைக் கட்டடத் திறப்பு விழாவில், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

முதலமைச்சர் அங்கு உரையாற்றுகையில் கூறியவை வருமாறு:-

விற்பனைக்கு உகந்த மேசை வடிவமைப்புக்களுடன் சுமார் 40 வியாபாரிகள் வரைதங்கள் மீன் வியாபாரங்களை இலகுவாகவும்,சுத்தமாகவும் மேற்கொள்வதற்கு வசதியாக சலவைக் கல் பதிக்கப்பட்ட, இலகுவில் கழுவிச் சுத்தம் செய்யக்கூடிய இந்தத் தொகுதி மானிப்பாய் பிரதேச சபையின் நிதியில் இருந்துபெற்றசுமார் 22 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

காக்கைதீவு பொதுச் சந்தையில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற வியாபாரிகள் தமது வியாபார நடவடிக்கைகளை புதிய சந்தையில் ஒற்றுமையாக மேற்கொள்ளுவார்கள் என நம்புகின்றேன். இந்த இலத்திரனியல் யுகத்தில் மாற்றங்கள் என்பது தவிர்க்க முடியாததாகின்றன. இந்த மாற்றங்களுக்கு ஏற்ப நாமும் எமது விற்பனை நடவடிக்கைகளில் முன்னேற்றகரமானமாற்றங்களைக் கொண்டு வருவதுடன் சுற்றுச்சூழலுக்கு பாதிப்புக்கள் ஏற்படாத வகையில் விற்பனை நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு எம்மை நாம் தயார்ப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.எந்த ஒரு தொழிலையும் எடுத்துக் கொண்டாலும் மாற்றம் என்பது தவிர்க்க முடியாதது. மாற்றங்கள் என வரும்போது பழக்கங்களுக்கு,பரீட்சயங்களுக்குப் பழக்கப்பட்ட நாங்கள் சினமடைகிறோம்; சீறிவிழுகின்றோம். ஆனால், ஆறஅமர ஆறுதலாய் இருந்து சிந்தித்தால் மாற்றங்கள் வாழ்க்கையில் மறுக்கமுடியாதவை என்பது புலனாகும்.

புதிய சந்தைக் கட்டடத்தில் முன்பு போல குந்தி இருந்து வியாபாரம் செய்யமுடியாது, மீன் கழிவுகளை இருந்த படியே வீசி எறிய முடியாது என்று கூறுவதாய் இருந்தால் அது நியாயமாகாது. சுத்தம் செய்து அழகாக மேடைகளில் அடுக்கி வைத்து நாகரிகமான முறையில் வாடிக்கையாளர்களுக்கு உங்கள் வர்த்தக சேவைகளைவழங்கவேண்டும் என்பதுதான் மானிப்பாய் பிரதேச சபையினதும் எமதும் எதிர்பார்ப்பாகும்.

கடந்த காலத்தில் இப் பகுதியில் விற்பனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தவர்கள் தமக்கிடையே கருத்து மோதல்கள்,வீண் வாக்குவாதங்கள்ஆகியவற்றில் ஈடுபட்டமையும் பிரதேச சபையின் அறிவுறுத்தல்களுக்குக் கட்டுப்படாது தமது எழுந்தமானப் போக்கில் விற்பனை நடவடிக்கைகளை தீர்மானிக்க முயன்றமையும் பொருத்தமான செயல்களாகக் கொள்ளப்பட முடியாது. நாங்கள் அண்மைக் காலங்களில் பலாத்கார நடவடிக்கைகளுக்கு அடிமையாகி விட்டோம். இன்றைய ஜனநாயக யுகத்தில் பலாத்காரத்திற்கு இடமளிக்காதுபங்குபற்றிபங்கு சேர்ந்து வாழ நாம் பழகிக்கொள்ளவேண்டும்.

நாளுக்கு நாள் முன்னேற்றமடைந்து வரும் சமுதாய வளர்ச்சியில் நீங்களும் பங்குதாரர்களாக இணைந்து கொண்டு ஒரு பண்பட்ட சமூகத்தை உருவாக்குவதற்கும் தவறுகளை தட்டிக் கேட்கக் கூடியஅல்லது தடுத்து நிறுத்தக் கூடியவல்லமை உள்ளவர்களாகவும் நீங்கள் மாறவேண்டும் என எதிர்பார்க்கின்றேன். அது உங்களால் முடியும்.

உங்கள் பகுதிகளில் ஏற்படக்கூடிய தீய செயல்கள், போதைப் பொருள் பழக்க வழக்கம், களவுநடவடிக்கைகள் ஆகியவற்றில் ஈடுபடக் கூடிய மிகக் குறுகிய தொகுதியினரை அடையாளம் கண்டு அவர்களுக்கு அறிவுரை கூறி திருத்த முயலுங்கள்.அது முடியாவிட்டால் சட்ட ரீதியாகவாவது அவர்களைத் திருத்தி அவர்களையும் இச் சமுதாய நீரோட்டத்தில் பங்குதாரர்களாக இணைத்துக் கொண்டு எமது பயணத்தைத் தொடர ஆவன செய்வீர்களாக.- என்றார் முதலமைச்சர். (இ)

## பொலிஸ் அதிகாரிகள் 58 பேருக்கு நேற்று உடனடி இடமாற்றம்

கொழும்பு, ஒக 05

உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள், பிரதான பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் மற்றும் இன்ஸ்பெக்டர்கள் உள்ளடங்கலாக, 58 பேர் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில், இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் நேற்று அறிவித்துள்ளது.

பொலிஸ்மா அதிபரின் பரிந்துரைக்கு அமைவாக, தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதியுடன் மேற்படி 58 பேரும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு இட மாற்றம் செய்யப்பட்டவர்களில் உதவிப்பொலிஸ் அத்தியட்சகர்கள் 5 பேர், பிரதான பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் 21 பேர், பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் 32 பேர் உள்ளடங்குகின்றனர் என்று பொலிஸ் தலைமையகம் மேலும் குறிப்பிட்டது. (எ)

## ஆஸியிலிருந்து இலங்கையர் 15 பேர் நாடு கடத்தப்பட்டனர்!

ஆஸ்திரேலியாவில் இருந்து 15 இலங்கையர்கள் நாடு கடத்தப்பட்டுள்ளனர். அந்த 15 பேர் நேற்றுக் காலை கட்டுநாயக்க பண்டார நாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

அவர்கள் சட்டவிரோதமாக ஆஸ்திரேலியாவுக்கு நுழைந்திருந்த சந்தர்ப் பத்தில், அந்த நாட்டு பாதுகாப்புப்பிரிவினால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட அனைவரும் ஆண்களாவர். அவர்கள் அங்குள்ள தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

15 பேரும் நேற்றுக் காலை 7.30 மணியளவில் ஆஸ்திரேலியாவுக்கு சொந்தமான SND1 ரக ஸ்கைட்ரேடஸ் என்ற விசேட விமானத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்துக்குஅனுப்பப்பட்டுள்ளனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தின் குடிவரவு குடியகல்வு அதிகாரிகளிடம் அவர்கள் ஒப்படைக்கப்பட்ட பின்னர் விமான நிலைய குற்ற விசாரணை திணைக்கள அதிகாரிகளால் வாக்குமூலம் ஒன்றுபெறுக் கொள்ளப்பட்ட பின்னர் அவர்கள்விடுவிக்கப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

# வெளிநாட்டு நடவடிக்கைகளுடன் ரவியை தொடர்புபடுத்த வேண்டாம்

### விசாரணை முடிவடையும் வரை என்கிறார் கம்மன்பில



கொழும்பு, ஒக.05

வெளிவிவகார அமைச்சர் ரவிகருணாநாயக்க மீதான விசாரணைகள் முடிந்து தீர்வு எட்டப்படும் வரையில் அவரை எந்தவித வெளிநாட்டு நடவடிக்கைகளுடனும் தொடர்பு படுத்த வேண்டாம் என்று கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அமைச்சர் ரவி கருணாநாயகவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்ப்பித்தது தொடர்பாக நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டு எதிர்க்கட்சியின் ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

இந்த விசாரணையின் போது அமைச்சரிடம் கேட்கப்பட்ட கேள்விகள் தொடர்பாக கருத்து வெளியிட்ட கம்மன்பில, 'எதிர்கால வெளிநாட்டு நடவடிக்கைகளில் அவர் இலங்கையை பிரதிநிதித்துவப் படுத்துவது எமது நாட்டுக்கு பிரச்சினையாகும்' என்று குறிப்பிட்டார். (எ)




யாழ்ப்பாணம், ஒக. 05

இலங்கை இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவ காலத்தை ஒட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று சனிக்கிழமை மாலை 6.45 மணிமுதல் இரவு 8 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெறும்.

இன்றைய நிகழ்வில் பாட்டு: ரஜீந்திரன் சுரசாகித்தியன், வயலின்: ப.சியாமகிருஷ்ணன், மிருதங்கம்: எஸ்.கமலதாஸ், முகர்சிங்: எஸ்.பாலாஜி.

***

நல்லூர் உற்சவத்தில் உலக சைவத் திருச்சபை இலங்கை நடத்திவரும் தெய்வீகச் சிறப்பு நிகழ்வு நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் மாலை 6.45 மணிமுதல் 7.45 மணிவரை நடைபெற்று வருகிறது. அந்த வகையில் இன்று இந்து தர்மாசிரியர் சைவநெறிச் சன்மார்க்கர் த.மனோச்குமார் 'சங்க இலக்கியங்களில் முருக வழிபாடு' எனும் தலைப்பில் ஆன்மீக உரையாற்றுவார். (இ)

## தறிகெட்டு ஓடிய டிப்பர் மரத்துடன் மோதியதில் சாரதி காயம்



வவுனியா, புளியங்குளத்தில் டிப்பர் வாகனம் ஒன்று நேற்றுக்காலை வேகக் கட்டுப்பாட்டை மீறி மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. இதில் சாரதி படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-

மல்லாவியிலிருந்து வவுனியா நோக்கிப் பயணித்த டிப்பர் வாகனம் புளியங்குளம், இராமனூர் பகுதியில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரத்தில் இருந்த மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை புளியங்குளம் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (எ-100)

காலைக்கதிர்
Kalaikkathir



### ஜெனரலை குண்டுக் வைத்துக் கொல்ல முயன்ற குற்றச்சாட்டு:

# 11 ஆண்டுகளாக சிறையிருந்தவரை விடுதலை செய்தது விசேட நீதிமன்று

மேஜர்ஜெனரல்பாரமிகுலதுங்காவையும் மேஜர் மஜீத்தையும் சதி செய்து குண்டு வைத்துக் கொலை செய்யத் திட்டமிட்டார் எனப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் குற்றம்சுமத்தப்பட்டு 2006 ஆம்ஆண்டு முதல்கடந்த 11 ஆண்டுகளாக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினரான வாசுகோபாலை கொழும்பு விசேட மேல் நீதிமன்ற நீதிபதி பியசேன ரணசிங்க கடந்த புதன்கிழமையன்று விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

மேற்படி இருவரையும் 2005 இல் கொல்லத் திட்டமிட்டார் என்று 2009 இல் இவருக்கு எதிராக இரண்டு குற்றப்பத்திரங்கள் கொழும்பு விசேட நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த வழக்கின் விசாரணைகளின் முதலில் எதிரித் தரப்பு சிரேஷ்ட சட்டத்தரணி ஜே.வி.தவராசா தனது சமர்ப்பாகத்தில் பின்வரும் விடயங்களைச் சுட்டிக்காட்டினார்.

அரசுத் தரப்பு சாட்சியங்களில் பல முக்கிய முரண்பாடுகள் குறுக்கு விசாரணையில் நிரூபணமாகியுள்ளன.

உதவிபொலிஸ் அத்தியட்சர் முன்பு குற்றஒப்புதல்வாக்குமூலம் பதிவுசெய்யப்படவில்லை என்பது சாட்சியத்தில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை வழங்க வருபவருக்கு அவ்வாறு குற்ற ஒப்புதல் வாக்குமூலம் வழங்கினால் ஏற்படும் சட்டவிளைவுகளைத்தான் விளங்கப்படுத்தவில்லை என்பதை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் குறுக்கு விசாரணையில் ஒப்புக் கொண்டுள்ளார். மேலும் தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த காலப் பகுதியில் பயங்கரவாதத் தடைப்பிரிவுப் பொலிஸாரினால் எதிரி மிகக் கடுமையாக சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டுள்ளமையினால் ஏற்பட்ட பல காயவடுக்கள் சட்ட வைத்திய அதிகாரியின் சட்டவைத்திய அறிக்கையிலும் சாட்சியத்திலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

எதிரி இந்த நீதிமன்றில் சாட்சியம் வழங்கிய பொழுது பயங்கரவாதத் தடைப்பிரிவுப் பொலிஸார் தன்னை சித்திவதைப்படுத்தி வாக்குமூலத்தைபெற்றுக்கொண்டார்கள் என்பதுடன் தனது சொந்த விருப்பத்தில் தான் எந்த வாக்குமூலங்களையும் பொலிஸாருக்கு வழங்கவில்லையென தெரிவித்துள்ளார்

சிரேஷ்ட அரச சட்டத்தரணி எதிரியை நீண்ட நேரம் குறுக்கு விசாரணை செய்த போதிலும் எதிரியின் சாட்சியத்தின் நிலைப்பாட்டில் எந்த முரண்பாட்டையும் அரச தரப்பால் முன்வைக்க முடியவில்லை. மேலும் வேறு சாட்சிகளையும் அரச தரப்பு முன்வைக்கவில்லை. எனவே எதிரியை சகல குற்றச் சாட்டுக்களிலிருந்தும் விடுதலை செய்ய வேண்டும். – என்றார்.

அதனை ஏற்று நீதிமன்றம் எதிரியை விடுதலை செய்தது.

அரச தரப்பில் சிரேஷ்ட அரச சட்டத்தரணி வசந்த பெரேராவும் எதிரியின் சார்பில் சட்டத்தரணிகளான தர்மஜா தர்மராஜா, அனோமாபிரியதர்சினி ஆகியோரின் அனுசரணையில் சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி.தவராசாவும் ஆஜரானார்.

# சைவ இளைஞர் மாநாட்டுக்கான ஒருங்கிணைப்புக் கூட்டம் இன்று

### நல்லை. திருஞானசம்பந்தர் ஆதீனத்தில்




யாழ்ப்பாணம், ஓக.05

சைவ இளைஞர் மாநாட்டுக்கான முன்னாயத்த ஒருங்கிணைப்புக் கூட்டம் இன்று பிற்பகல் 3 மணியளவில் நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வீதியிலுள்ள நல்லை. திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

சைவத்தமிழ் மறுமலர்ச்சியில் இளைஞரின் பங்கும் பணியும் என்ற தொனிப்பொருளில் எதிர்வரும் 11,12,13 ஆம் திகதிகளில் சைவ இளைஞர் மாநாடு யாழ். இலங்கைவேந்தன் கலைக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

குறித்த மாநாடு தொடர்பான இறுதித் தீர்மானங்களை எடுப்பதற்கான ஒருங்கிணைப்புக் கூட்டம் நல்லை. திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச் சார்ய சுவாமிகள், தென்கயிலை ஆதீனகுருமகா சந்நிதானம்தவத்திரு அகத்தியர்அடிகளார்இணைத் தலைமையில்நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் அனைத்து மாவட்டங்களிலும் இருந்து மாநாட்டுக்கானமாவட்ட இணைப்பாளர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

எனவே, இந்தகூட்டத்தில் இளைஞர் அமைப்புகளைச் சேர்ந்தவர்கள், சைவத்தமிழ்ஆர்வலர்கள் அனைவரையும்கலந்துகொண்டு ஆக்கபூர்வ மான கருத்துக்களை வழங்கு மாறு மாநாட்டு ஏற்பாட்டாளர் களான அகில இலங்கை சைவமகாசபையினர்அறிவித்துள்ளனர். (ம)

## ஜெயசேகரத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

த.சித்தார்த்தன் தமது ஆட்சேபனைக் கடிதத்தை கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு அனுப்பி வைத்திருந்தார். அதன் பிரதிகள் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியின் தலைவர்களுக்கும், வடக்கு மாகாண முதலமைச்சருக்கும், வடக்கு மாகாண தவிசாளருக்கும் அனுப்பட்டிருந்தன.

இப்போது மாவை சேனாதிராசாவின் கடிதமும் அதேமாதிரி அனுப்பப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தின் விவரம் வருமாறு:–

வட மாகாணசபை மேலதிக ஆசனத்திற்கான அங்கத்தவர் நியமனம் தொடர்பாக மேற்படி விடயத் தலைப்பிலான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் த.சித்தார்த்தன் அவர்கள் எமக்கும் ஏனையோருக்கும் பிரதியிட்டு தங்களுக்கு மின்னஞ்சல் மூலம் எழுதிய 2017.07.28 ஆம்திகதி அனுப்பிய கடிதம் சார்பானது. இக் கடிதம் பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

முதலிலே நாமும், இலங்கைத் தமிழரசுக் கட்சியும், சித்தார்த்தன் அவர்களும் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியும் எமக்கு வழங்கி வரும் ஒத்துழைப்பையும் ஆதரவையும் மதிக்கின்றோம் என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறோம்.

வடக்கு மாகாணசபைத் தேர்தல் முடிந்த பின்பு கூட்டமைப்புக் கட்சிகளுக்கிடையில் நடைபெற்ற கலந்துரையாடல்களின் இறுதியில் மேலதிகமாகக் கிடைக்கப் பெற்ற (போனஸ்) ஆசனப் பகிர்வு தொடர்பாகப் பரிசீலிக்கப்பட்டு அதில் ஓர் ஆசனம் நல்லாட்சிக்கான மக்கள் இயக்க(முஸ்லிம்)ப் பிரதிநிதிக்கு வழங்குவதென முடிவு செய்யப்பட்டது. அதில் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் ஒத்துழைப்பு உதவியாகவிருந்தது.

எஞ்சிய இரண்டாவது ஆசனம் தொடர்பாக வீ.ஆனந்தசங்கரியின் பெயர் முன்வைக்கப்பட்ட போது அது பற்றிய உடன்பாடு எட்டப்படாத நிலையில் ந.சிறிகாந்தாவின் ஆலோசனையின் பெயரில்தமிழர்விடுதலைக்கூட்டணி சார்பில்முல்லைத்தீவுமாவட்டத்தில் போட்டியிட்ட பெண் வேட்பாளர் திருமதி மேரி கமலா அவர்களை சுழற்சி முறையில் முதலாவதாக நியமிப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது. அவரது சமூகப் பின்புலத்தில் மாகாணசபை நிதியைப் பயன்படுத்த அவகாசம் தரவேண்டும் என்பதற்காக ஆறு மாதம் வரை உறுப்புரிமை நீடிக்கப்பட்டது. அதற்கு எல்லோரும் இணங்கியிருந்தனர்.

இதனையடுத்து ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பில் போட்டியிட்ட, வடக்கில் மலையகத் தமிழ் மக்களைப் பிரதி நிதித்துவப்படுத்தும் எம்.பீ. நடராஜ் என்பவரை நியமிப்பது என்றும் தனக்கு ஒதுக்கப்பட்ட மாகாணசபைநிதியைபயன்படுத்தி முடிக்காத நிலையில் மேலும் மூன்று மாதமேனும் உறுப்பினராயிருக்கும் அவகாசம் தரக் கோரியதாலும் மூன்று மாத அவகாசம் வழங்கப்பட்டது. அடுத்து ரெலோவுக்கு ஒரு வருடம் வழங்குவதென ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டவாறு வழங்கப்பட்டது.

அந்தக் கால அவகாசத்தில் வன்னி மாநிலத்தில் கமலேஸ்வரனை நியமிக்கத் தீர்மானம் இருந்த பொழுது பொதுத் தேர்தலில் மருத்துவ கலாநிதி சிவமோகன் வெற்றி பெற்றதால் கமலேஸ்வரன் மாகாணசபைக்குத் தெரிவு பெற்றதால் நாம் அவரை சுழற்சி முறையில் நியமிக்கத் தேவையிருக்கவில்லை.

அவ்வேளை சிவகரன் நியமிக்கப்பட எமது கட்சி நிர்வாகத்தினால் நடவடிக்கை எடுத்த பொழுதும் ஏற்கனவே தீர்மானித்தது போல மயூரனுக்கே நியமனம் வழங்கப்பட்டது. இறுதி நியமனத்தில் முன்பே தீர்மானித்தவாறு சிவகரன் நியமிக்கப்படவிருந்த போது அந்த நியமனம் அவர் மீது ஒழுங்கு நட வடிக்கை காரணமாக வழங்கப்பட் டிருக்கவில்லை. அப்பொழுதும் புளொட் எந்தக் கோரிக்கையையும் முன் வைக்கவில்லை.

இறுதியாக நியமிக்கப்படும் உறுப்பினருக்குஒன்றரைஆண்டு காலம் கொடுப்பது என்று ஏற்கனவே எடுத்த தீர்மானத்தின்படி தான் தமிழரசுக் கட்சிக்கு உரித்தான சிவகரன் இடத்திற்கு இறுதி நியமனத்திற்கு ஜெயசேகரம் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் நீண்ட காலம் தமிழரசுக் கட்சிக்காரராகவும் வர்த்தக சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தி மாகாண சபைத் தேர்தலில் வேட்பாளராக நிறுத்தப்பட்டிருந்தபடியாலும் ஜெயசேகரம் தற்போது நியமிக்கப் பட்டிருக்கின்றார்.

ஆக எஞ்சிய ஒன்றரை வருட காலத்திற்கு மன்னார் மாவட்டத்தின் தமிழரசுக் கட்சி வேட்பாளரை நியமிப்பது என்றுமே தீர்மானிக்கப்பட்டதேயன்றி நாமறிந்த வரையில் இறுதியான ஐந்தாவது வருடம் புளொட் அமைப்பிற்கு வழங்கப்படுவதாக முடிவெடுத்ததாகத் தெரியவில்லை. இதுவே உண்மை நிலையாகும்.

மயூரனின் பதவிக்காலம் 01.07.2017 ஆம் திகதி நிறைவு பெறுவதாக இருந்த போதும் அவர் முழு ஜூலை மாதமும் உறுப்பினராக செயற்பட பேரவைத் தலைவரால் ஏற்பாடு செய்யப்பட்டது. மயூரன் உறுப்பினருக்கு அந்தச் சந்தர்ப்பம் தெரிந்தேயிருந்தது. வடக்கு மாகாணசபை உறுப்பினர்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதங்களுக்கும் உரித்துடையவரானார்.

இந்த ஆசனப் பங்கீட்டில் முல் லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களுக்கு ஆசனம் வழங்கப் பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இதனடிப்படையிலேயே யாழ்ப்பாண மாவட்ட வேட்பாளர் இ.ஜெயசேகரனின் பெயர் முன்மொழியப்பட்டு 25.05.2017ஆம் திகதிய வர்த்தமானி பிரசுரம் மூலம் நியமிக்கப்பட்டிருக்கிறது.

ஜெயசேகரம் அவர்களுடைய குடும்பம் ஒரு பாரம்பரியம் வாய்ந்த தமிழரசுக் கட்சிக் குடும்பமாகும். அவரைத் தேர்தலில் நிறுத்துகையில் அவர் ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியின் உறுப்பினராக இருக்கவில்லலை என்பதை அக் கட்சியினரே ஒப்புக் கொள்வர் . எனவே அந்தக் கட்சிக்கு இரண்டாவது ஆசனம் வழங்கப் படுகின்றது என்ற கருத்துப் பொருத்தமற்றது.

தேர்தலில் இவ்வாறான நிலை எழுதுவது சாதராணமாக காணப்படு கின்றது. உதாரணத்திற்கு தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் பா.கஜதீபன், சித்தார்த்தனுடன் உடன்பட்டவாறு பொதுவாகப் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளார்.

முல்லைத்தீவில் கனகசுந்தரசுவாமிதமிழரசுக்கட்சியைச்சார்ந்தவராயினும் அவரை ரெலோ தேர்ந்து தமக்குக் கிடைத்த வேட்பாளராக நியமித்தது. அவர் மறைந்த பொழுது ரெலோவின் தலைமை அடுத்து தங்கள் சார்பு வேட்பாளருக்கே இடம் தரவேண்டுமென வற்புறுத்தியது. இதனால் பிரச்சினைக்குத் தீர்வு காண இணக்கமில்லாததால் தமிழரசுக் கட்சிப் பொதுச் செயலாளர் ரெலோ வுக்குச் சாதகமாக நியமனத்தைச் செய்யாமல் க.சிவநேசனை நியமிப்பதற்கு வழிவிட்டிருந்தார். இதனையும்வலிந்து குற்றமாகச் செல்லலாமா?

அடுத்து புளொட் தலைமை தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவப்பண்புகள்தொடர்பிலும்விமர்சனத்துடன் கருத்துரைத்துள்ளது. நல்லவை நல்லதாக இருக்கட்டும். இவ் விமர்சனங்கள் பொருத்தமற்றவை; ஏற்றுக்கொள்ளக் கூடியவையல்ல. இச் சந்தர்ப்பத்தில் ஏனைய கூட்ட மைப்புப் பங்காளிக் கட்சிகள் தலை மைப் பண்புகள் பற்றி நாம் தற்போது விமர்சிக்க விரும்பவில்லை.

முல்லைத்தீவில் வடமாகாண சபை அமைச்சராக வர வேண்டுமென மாகாணசபை உறுப்பினர்கள் ஜெகநாதனைப் பிரேரித்த போதும் அவர் காலமானதன் பின் அந்த இடம் தமிழரசுக் கட்சிக்குத் தான் வரவேண்டுமென தமிழரசுக் கட்சி வாதாடியிருக்கவில்லை என்பதையும் நினைவூட்டுகின்றோம்.

கூட்டமைப்புப் பதிவு செய்யும் விடயத்தில் பதிவுக்குப் பதிலாகப் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றை கைச்சாத்திட இணங்கிய நான்கு கட்சிகளும் நடவடிக்கையெடுத்த பொழுது, தமிழரசுக் கட்சி கைச்சாத்திட முன்வந்த பொழுதும் அதனை கூட்டுக் கட்சிகளே தாமதப்படுத்தி விட்டதால் அவ்வுடன்படிக்கை நடைமுறைக்கு வரவில்லை. இருப்பினும் இப்பொழுதும் அந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை பொருத்தமானதாக இருக்கும் என நம்புகிறோம்.

எவ்வாறெனினும் புளாட் தலைமையின் கோரிக்கைக்குத் தீர்வு காணும் வகையில் ஒரு புதிய அணுகல் முறையை கடைப்பிடிக்கலாம் என நம்புகிறோம். நாம் நேரில் சந்தித்துப் பேசுவதன் மூலம் முரண்பாடுகளிருப்பின் தீர்த்துக் கொள்ள முடியும் எனவும் நம்புகிறோம்.

வரலாற்றில் தமிழரசுக் கட்சி காத்து வந்திருக்கின்ற பொறுமை, தலைமையின் ஜனநாயகப் பண்புகள், பொறுப்புக்கள் பற்றியும் மக்கள் அறிவார்கள் என்பதையும் நினைவூட்ட விரும்புகிறோம்.– என்றுள்ளது.







# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## உயர்நீதிமன்றின் முக்கிய அவதானம்

இலங்கையின் உயர் நீதிமன்றம் நேற்று ஒரு முக்கியமான தீர்ப்பை வழங்கியிருக்கின்றது. பிரதம நீதியரசர் பிரசாத் டெப் உள்ளிட்ட மூன்று நீதியரசர்களைக் கொண்ட ஆயமே இத் தீர்ப்பை வெளியிட்டிருக்கின்றது. நீதியரசர்கள் உபாலி அபேரட்ண, அனில் குணரட்ண ஆகியோரே மற்றைய இரு நீதியரசர்கள்.

அதிலும் ஒரு முக்கியத்துவம் உண்டு. நீதியரசர் உபாலி அபேரட்ண நேற்றுடன் உயர்நீதிமன்ற நீதியரசர் பதவியிலிருந்து ஓய்வு பெறுகின்றார். ஓய்வு பெறுவதற்கு முன்னர் உயர் நீதிமன்றத்தில் ஒரு முக்கிய - வரலாற்றுச் சிறப்புடைய - ஒரு தீர்ப்பை வழங்கி விட்டே அவர் சேவையில் இருந்து விலகுகின்றார்.

பத்தொன்பது வருடங்களாக இணைக்கப்பட்டிருந்த தமிழர் தாயகத்தை - அவர்களின் பாரம்பரிய பூமியான வடக்கு, கிழக்கை - சட்ட நுணுக்கங்களைக் காட்டி துண்டாடும் உத்தரவைப் பிறப்பித்ததன் மூலம் இலங்கைத் தமிழர்களின் பேரதிருப்திக்கு உள்ளாகிய அதே உயர் நீதிமன்றம்தான் இப்போது இந்தத் தீர்ப்பையும் வழங்கியிருக்கின்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி நாட்டின் பிரிவினையைக் கோரும் கட்சி, அரசமைப்பின் ஆறாம் திருத்தத்தின் அடிப்படையை மீறிச் செயற்படும் கட்டமைப்பு. ஆகவே, அதனைத் தடை செய் வதுடன் அது தொடர்பில் நடவடிக்கைகளும் எடுக்கப்படவேண்டும் எனக் கோரி உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த ஆறு வெவ்வேறு மனுக்களில் ஒன்றை விரிவாக விசாரணை செய்த உயர்நீதிமன்றம், அந்த மனுவைத் தள்ளுபடி செய்து தீர்ப்பளித்திருக்கின்றது.

இந்த மனுத் தொடர்பில் மனுதாரர் தரப்பிலும், எதிர்மனுதாரரான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் தரப்பிலும் முன்வைக்கப்பட்ட எழுத்து மூலமான சமர்ப்பணம் மற்றும் வாய்மூலமான வாதங்களைச் செவிமடுத்த பின்னர் இந்த மனுவை நிராகரிக்கும் முடிவுக்குத் தாங்கள் வந்தனர் என நீதியரசர்கள் தமது தீர்ப்பில் தெரிவித்திருக்கின்றனர்.

அரசமைப்பிற்குக் கொண்டுவரப்பட்ட ஆறாவது திருத்தத்தின் படி, நாட்டைப் பிரிக்கும் கோரிக்கையை வைக்க முடியாது என்று சுட்டிக்காட்டிய மனுதாரர் தரப்பு, அதனால் நாட்டின் பிரிவினையைக் கோரும் இலங்கைத் தமிழரசுக் கட்சி தடை செய்யப்பட வேண்டும் என்று வற்புறுத்தியிருந்தது. இதற்கு ஆதாரமாக அக் கட்சித் தலைவர்களின் பேச்சுக்களை மனுதாரர் முன்வைத்திருந்தனர்.

ஆனால், எதிர் மனுதாரர் தரப்பில் வாதாடிய ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் இந்தக் கருத்தை மறுத்துரைத்திருந்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி கோருவது சமஷ்டி அடிப்படையிலான தீர்வு ஒன்றையே எனச் சுட்டிக்காட்டிய அவர், சமஷ்டிக் கோரிக்கை நாட்டின் பிரிவினை அல்ல என்ற வாதத்தை முன் வைத்திருந்தார்.

அதனை - சமஷ்டிக் கோரிக்கை பிரிவினை அல்ல என்ற வாதத்தை - தாங்கள் ஏற்கின்றார்கள் என உயர்நீதிமன்ற நீதியரசர்கள் குறிப்பிட்டுள்ளமை இந்தக் கட்டத்தில் மிக மிக முக்கியமானதாக அமைகின்றது.

அதுவும், புதிய அரசமைப்பு ஒன்றை அமைக்கும் முயற்சியில் நல்லாட்சி அரசும், அதனுடன் சேர்ந்து தமிழர்களின் பிரதான அரசியல் கட்டமைப்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ஏனைய சிறுபான்மை இன மக்களின் கட்சிகளும் கூட்டுச் சேர்ந்து ஈடுபட்டிருக்கையில், இந்தத் தீர்ப்பு முக்கியமானதாக வந்திருக்கின்றது.

சமஷ்டி என்றால் பிரிவினை எனக் காட்டி, தென்னிலங்கை இனவாதிகள் எண்ணிக்கையில் பெரும்பான்மையினரான சிங்கள மக்களை உசுப்பேத்தி வருகையில், சமஷ்டிக் கோரிக்கை பிரிவினை அல்ல என்ற உயர்நீதிமன்றத்தின் அவதானிப்பு மிக மிக முக்கியத்துவம் பெறுகின்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி 1949 இல் ஸ்தாபிக்கப்பட்ட காலத்தில் இருந்து சமஷ்டிக் கோரிக்கையையே முன்வைத்து வந்திருந்தது.

எனினும், அதனைத் தமிழ் மக்கள் ஆரம்பத்தில் ஏற்கவில்லை. 1952 தேர்தலில் தமிழரசுக் கட்சியின் சமஷ்டிக் கோரிக்கையைத் தமிழ் மக்கள் அங்கீகரிக்கவில்லை. அதனை ஏற்க மறுத்தனர்.

ஆனால், 1956 முதல் தமிழ் மக்களால் அது பெருமளவான வாக்குகளால் ஒவ்வொரு தேர்தலிலும் மீண்டும் மீண்டும் அங்கீகரிக்கப்பட்டே வந்தது.

1976 இல் இலங்கைத் தமிழரசுக் கட்சியும் சேர்ந்து உருவாக்கிய தமிழர் விடுதலைக் கூட்டணி 'தமிழீழத் தனியரசு' எனும் வட்டுக் கோட்டைத் தீர்மானத்தை அறிவித்தபோது பிரிவினை என்ற முடிவுக்குத் தமிழரசுக் கட்சி வந்தது.

1983 ஆடிக் கலவரத்தை அடுத்து, நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் தொடங்கி, எம்.பி. பதவிகள் வரை பலவற்றை இந்தப் பிரிவினைக் கோரிக்கையைப் பற்றி நின்றமையால் - தமிழர் விடுதலைக் கூட்டணியும் அதில் உள்ளடங்கிய இலங்கைத் தமிழரசுக் கட்சியும் இழந்தன.

எனினும், இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை 1987 இல் ஏற்ற பின்னர் - அல்லது அது வல்வந்தமாக இலங்கைத் தமிழர்கள் மீது திணிக்கப்பட்ட பின்னர் - பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட்டு விட்டே 1989 இல் மீண்டும் நாடாளுமன்றத்தில் காலடி எடுத்து வைத்தது தமிழர் விடுதலைக் கூட்டணி.

அப்போது தொட்டு, நட்டின் பிரிவினைக்கு எதிராகச் சத்தியப் பிரமாணம் செய்து உறுதிப்படுத்திக் கொண்டுதான் வேட்பு மனுச் செய்து நாடாளுமன்றத்துக்கு எம்.பிக்களை அனுப்பிக் கொண்டிருக்கின்றது தமிழரசுக் கட்சி.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆரம்ப காலப் பெயர் கூட Fedaral Party (சமஷ்டிக் கட்சி) என்பதுதான்.

அந்த சமஷ்டிக் கோரிக்கை பிரிவினை என்று சிங்களம் கருதுமானால், அது மொட்டந் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவது போன்ற அபத்த வேலையன்றி வேறில்லை.

# இறைவரிச் சட்ட மூல சரத்துக்கள் அரசமைப்புக்கு முரணானவை

## உயர் நீதிமன்றம் அதிரடி அறிவிப்பு

கொழும்பு, ஓக. 05

புதிய உள்நாட்டு இறைவரிச் சட்டமூலத்தின் சில சரத்துக்கள், அரசமைப்புக்கு முரணானவை என்று உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது.

உயர்நீதிமன்றத்தின் இந்த அறிவிப்பை, நேற்றைய நாடாளுமன்ற அமர்வில் சபாநாயகர் கரு ஜயசூரிய அறிவித்துள்ளார்.

இந்தச் சட்டமூலம் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமாயின் விசேட பெரும்பான்மையுடன் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட வேண்டும் என்று உயர் நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது. அவ்வாறில்லாவிட்டால் சட்டமூலத்தில் உரிய திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.

நாட்டின் வரி அறவீட்டு நிர்வாகத்தை வினைத்திறனாக மேற்கொள்வதற்காகவே இந்தச்சட்டமூலத்தை கொண்டுவருவதாக அரசு குறிப்பிட்டிருந்தது. எனினும், சர்வதேச நாணய நிதியத்தின் தேவைக்கு அமைவாகவே இந்தச் சட்டமூலம் கொண்டுவரப்படுவதாக மஹிந்த அணி குற்றஞ்சாட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ)

## உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் சர்வதேச மாநாட்டின் 2 ஆம் நாள் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக.05

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து நடத்தும் 13 ஆவது சர்வதேச மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு ரில்கோ ஹோட்டலில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனும், கௌரவ விருந்தினராக இந்திய துணைத் தூதரத்தின் தூதுவர் ஏ.நடராஜனும், சிறப்பு விருந்தினராக மகளிர் விவகார இராஜங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், வடமாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறிதரன், ஈ.சரவணபவன், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.கோடீஸ்வரன் ஆகியோரும் கலந்துகொள்வர்.

இந்த நிகழ்வில் வாழ்த்துரைகளை இலங்கைக் கிளைத் தலைவர் அ.சத்தியானந்தனும், கனடாவைச் சேர்ந்த தி.சௌந்தரராஜனும் வழங்குவர்.

தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம்பெறும். ஈழ நல்லூர் பாலமுருகன் குழுவினரின் மங்கல இசையும், விரிவுரையாளர் ஆரூரன் அருநந்தியின் தமிழிசையும், கலாநிதி உஷாந்தினி நேசகாந்தனின் மாணவிகள் வழங்கும் நடனமும், ராகம்ஸ் இசைக்குழுவினருடன் தமிழகத்தின் பின்னணிப் பாடகர் புதுவைச் சித்தன் சிறப்புப் பாடகராகக் கலந்து சிறப்பிக்கும் இன்னிசை நிகழ்ச்சி என்பனவும் இடம்பெறும். (ச)

## உயிரிழந்த சார்ஜண்டின் மனைவியை பொலிஸில் மீளச் சேர்க்க அனுமதி

நீதிபதி இளஞ்செழியனின் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த போது துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த பொலிஸ் சார்ஜண்ட் ஹேமச்சந்திரவின் மனைவியை மீண்டும் பொலிஸ் சேவையில் இணைத்துக்கொள்வதற்கு தேசிய பொலிஸ் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

பொலிஸ் சார்ஜண்டின் மனைவியான கெ.ஜீ.பி. குமுதுனி முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர். அவர் 5 ஆண்டுகளுக்கு முன்னர் பொலிஸ்சேவையிலிருந்து விலகியிருந்ததாகக் கூறப்பட்டுள்ளது.

பொருளாதாரப் பிரச்சினை காரணமாகத்தான் மீண்டும் பொலிஸ் சேவையில் இணைந்து கொள்ள விரும்புகிறார் என அவர் விடுத்த கோரிக்கையை ஆராய்ந்த பின் பொலிஸ் மா அதிபரின் பரிந்துரைப்படி பொலிஸ் ஆணைக்குழு இந்த அனுமதியை வழங்கியுள்ளது.

## நீரைச் சிக்கனமாக பயன்படுத்தக் கோரிக்கை

கிளிநொச்சி மாவட்டத்தில் குடிதண்ணீர் தட்டுப்பாடான பகுதிகளில் நீரை வீண் விரயம் செய்ய வேண்டாம் என்று அனர்த்த முகாமைத்துவப் பிரிவு அறிவித்துள்ளது.

நாட்டில் நிலவும் தற்போதைய வறட்சி காரணமாக மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் குடிதண்ணீர் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

இந்தநிலையில், குடி தண்ணீர் தட்டுப்பாடான பகுதிகளுக்கு அது விநியோகம் மேற்கொள்ளப்படுகின்ற போதும், சில இடங்களில் குடிதண்ணீர் வீண்விரயம் செய்யப்பட்டு வருகின்றது.

குடி தண்ணீரைப் பெற்றுக் கொள்கின்ற நீர் நிலைகளிலும் தேவையான நீரைப்பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது. எனவே, விநியோகிக்கப்படுகின்ற நீரைச் சிக்கனமாக பயன் படுத்துமாறும், வீண் விரயத்தைத் தடுக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட் டுள்ளது.

## முல்லையில் அரசியல் நோக்கம் கருதிய குடியேற்றங்களை அனுமதிக்கமாட்டோம்

### திருமதி சாந்தி எம்.பி. தெரிவிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் அரசியல் நோக்கம் கருதிய திட்டமிட்ட குடியேற்றங்களை முன்னெடுப்பதற்கு தாம் ஒரு போதும் அனுமதிக்கப் போவதில்லை என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராசா தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது இடம்பெற்று வரும் காடழிப்பு மற்றும் திட்டமிட்ட குடியேற்றங்கள் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

போரால் பாதிக்கப்பட்டுள்ள மக்களை பகடைக்காய்களாகப் பயன்படுத்தும் செயற்பாட்டை




சில அரசியல்வாதிகள் கைவிட வேண்டும்.

அரசுடன், இணைந்து செயற்படுபவர்கள் முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களுக்கு என மீள்குடியேற்ற செயலணி ஒன்றை உருவாக்கி அதற்குப் பெருமளவு நிதியை ஒதுக்கீடு செய்து மீள் குடியேற்றத்தை முன் னெடுப்பது தமிழ்மக்கள் திட்டமிட்டு புறக்கணிக்கப்படுவதை எடுத்துக்காட்டுவதாக உள்ளது.-என்றார். (எ)

## சரியான போசாக்கு - ஆரோக்கியமான சமுதாயம்

- இளம் பெண்கள் இரும்புச் சத்து நிறைந்த உணவுகளை கட்டாயம் உள்ளெடுத்தல் வேண்டும்.
- முதியோர் எண்ணெய் அடங்கிய உணவு வகைகளை ' உள்ளெடுத்தலை குறைத்தல் வேண்டும்.
- முதியோருக்கு நார்ச்சத்துள்ள உணவு வகைகளை அதிகம் வழங்கல் வேண்டும்.
- பிரதான உணவு வேளைகளுக்கு முன்பாகவோ பிக்பாகவோ தேநீர், கோப்பி அருந்துவதை தவிர்த்தல் நன்று.



தகவல்:- சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை. யாழ்.மாநகரசபை.

## நாளை

06.08.2017
ஞாயிற்றுக்கிழமை

நட்சத்திரம் : உத்தராடம் பி.இ 3.14 வரை
திதி : சதுர்த்தசி மு.இ 11.16 வரை
சுபநேரம் : 9.04 – 10.34 வரை
இராகுகாலம் : 4.34 – 6.04 வரை

## குப்பை கொட்ட விதிக்கப்பட்ட தடை மேலும் நீடிப்பு

கொழும்பு, ஓக. 05

கொழும்பில் சேரும் குப்பைகளை முத்துராஜவல பகுதியிலுள்ள காணி ஒன்றில் கொட்ட விதிக்கப்பட்டிருந்த தடை, உயர்நீதிமன்றத்தால் நீடிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த வழக்கின் அடுத்த கட்ட விசாரணைகளை செப்ரெம்பர் 21 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முத்துராஜவல பகுதியில் வசிக்கும் 37 பேர் இணைந்து இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# மஹிந்தவை மீண்டும் ஆட்சிக்கு கொண்டு வர சதி நடவடிக்கைகள்

## அமைச்சர் சஜித் கூறுகிறார்



கொழும்பு, ஓக. 05

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை மீண்டும்ஆட்சிக்குக்கொண்டுவரும் சதி நடவடிக்கைகளை முறியடிப் பதற்காகவே எரிபொருள் விநியோகம் அத்தியாவசிய சேவையாக மாற்றப்பட்டுள்ளது என அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாம் படையினரை அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரமே பயன்படுத்துகிறோம். ஆனால், நாம் அவர்களைக் கூலித் தொழிலாளிகள் போல் பயன்படுத்துகிறோம் என்று பஸில் ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.

அவர்களின் ஆட்சியில் படையினர் எவ்வளவு கேவலமாக நடத்தப்பட்டார்கள் என்பதை அவர் மறந்து விட்டார். ஆனால், நாம் அப்படி நடத்தவில்லை.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை மீண்டும்ஆட்சிக்குக்கொண்டுவரும் சதி நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

அவற்றுள் ஒன்றுதான் பெற்றோலியத் தொழிற்சங்கங்கள் நடத்திய போராட்டம். அவர்கள் எரிபொருள் விநியோகத்தைத் தடைசெய்தனர்.

அதை முறியடித்து எரிபொருள் விநியோகத்தை நாம் அத்தியாவசிய சேவையாக மாற்றியுள்ளோம். இவ்வாறான அத்தியாவசியசேவைகளுக்காக மாத்திரமே நாம் படையினரைப் பயன் படுத்துகிறோம்.

மக்களுக்குச் சேவைகளை வழங்குவதற்காக மாத்திரமே படையினர் களத்தில் இறக்கி விடப்படுகின்றனர் என்பதை மக்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

அதுமாத்திரமன்றி, மஹிந்த ராஜபக்ஷவை மீண்டும் ஆட்சிக்குக் கொண்டுவரும் சதி நடவடிக்கைகளை முறியடிப் பதற்காகவே எரிபொருள் விநியோகம் அத்தியாவசிய சேவையாக மாற்றப்பட்டுள்ளது. -என்றார். (எ)

## கூட்டு எதிர்க்கட்சியின் பிரபலத்துக்காகவே ரவி மீதான நம்பிக்கையில்லா பிரேரணை

### சு.க. இளைஞர் அணித் குற்றச்சாட்டு




கொழும்பு, ஓக. 05

வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராகக் கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பானயோசனை கூட்டு எதிர்க் கட்சியினர் பிரபலத்துக்காக மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இளைஞர் முன்னணியின் தலைவர் சாந்த பண்டார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வர வேண்டிய ஒன்றுதான் என்றாலும் அதற்கான காலம் இன்னும் இருக்கின்றது என்று அவர் கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பிணை முறிப்பத்திர விவகாரம் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை முடிவடைந்த பின்னர், அதன் அறிக்கைக்கு அமைய நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்திருக்கலாம்.- என்றார். (எ)

## புத்தளத்தில் கரை ஒதுங்கிய இந்திய நாட்டுப் படகு!



புத்தளம், உடப்பு பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இரவு இந்திய நாட்டுப் படகு ஒன்று கரை ஒதுங்கியுள்ளது.

30 அடி நீளமும் 05 அடி அகலமும் கொண்ட இந்தப் படகின் ஒரு பகுதி சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது.

அந்தப் படகு கடலில் மிதந்து வந்ததை அவதானித்த மீனவர்கள் உடப்பு பொலிஸாருக்கும், கடற்படையினருக்கும் தகவல் வழங்கியதை அடுத்து அவர்கள் படகை கரை சேர்த்துள்ளனர்.

படகு தொடர்பிலான மேலதிக விசாரணைளை உடப்புபொலிஸாரும் கடற்படையினரும்மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## அனுமதியின்றி மணல் ஏற்றிய மூவருக்கு தண்டம் விதிப்பு

கிளிநொச்சியில் அனுமதிப்பத்திரமின்றி இரண்டு டிராக்டர்களில் மணல் ஏற்றிச் சென்ற மூன்று பேருக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

இரண்டு டிராக்டர்களையும், அதன் சாரதிகளையும் நேற்றுமுன்தினம் கிளிநொச்சிப் பொலிஸார், கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர்.

அத்துடன், அவர்களுக்கு சமுதாயம் சார் சீர்திருத்த கட்டளைச் சட்டத்தின் கீழ் பத்து நாள்கள் சமூக சேவையில் ஈடுபடுமாறும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, அனுமதிப்பத்திரமின்றி டிராக்டரில் மணல் ஏற்றியவருக்கு 30 ஆயிரம் ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளதுடன் மணல் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. (எ)

## கண்டாவளையில் கல்வி அபிவிருத்திக்காக 50 வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படும்

### பிரதேச செயலகம் அறிக்கை

கிளிநொச்சி, கண்டாவளைப் பிரதேசத்தில் கல்வி அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் இவ்வாண்டு ஐம்பது வேலைத்திட்டங்கள் 7 கோடி 77 லட்சம் மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் கண்டாவளைபிரதேசசெயலகம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

கிளிநொச்சி கல்வி வலயத்தின் கண்டாவளைக் கல்விக் கோட்டத்தில் உள்ள 24 பாடசாலைகளில் சுமார் 5 ஆயிரத்து 386 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

அந்தப்பாடசாலைகளில் 348 வரையான ஆசிரியர்கள் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில் அந்தப் பாடசாலைகள் பல்வேறு தேவைப்பாடுகளுடன் காணப்படுகின்றன.

குறிப்பாக குடிதண்ணீர் வசதி, மலசலகூட வசதி, வகுப்பறைக் கட்டடத் தொகுதிகள் இன்மை போன்ற பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் பாடசாலைகள் இயங்கி வந்தன. எனினும் தற்போது பல்வேறு அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை என்ற அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 18 பாடசாலைகளில் வகுப்பறைக் கட்டடங்களை திருத்துதல், 13 பாடசாலைகளில் குடிதண்ணீர் வசதிகளை ஏற்படுத்துதல், 09 பாடசாலைகளுக்கு மின்சார வசதிகளை வழங்குதல் போன்ற செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மேலும், பிரமாண அடிப்படையிலான நன்கொடை நிதியின் கீழ் 04 பாடசாலைகளுக்கு உபகரணங்கள் மற்றும் அபிவிருத்தி வேலைகள் முன்னெடுத்தல் ஆகிய அபிவிருத்தி வேலைகளும் மீள் குடியேற்ற அமைச்சினூடாக 16 பாடசாலைகளுக்கும் கட்டட நிர்மாணம் மற்றும் திருத்தம், தளபாடங்கள் உபகரணங்கள் வழங்குதல் ஆகிய அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.-என்றுள்ளது. (எ)

## 'சீனி இன்றி சுவைப்போம்' கண்காட்சி



தேசிய போஷாக்கு மாதத்தை முன்னிட்டு 'சீனி இன்றி சுவைப்போம்' எனும் கருப்பொருளில் மன்னாரில் கண்காட்சி நிகழ்வு ஒன்று நேற்றுமுன்தினம் இடம்பெற் றது.

மன்னார் மாவட்டம் முசலி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தால் வைத்திய அதிகாரி எம்.ஒஸ்மன் சாள்ஸ் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கண்காட்சியை முசலி பிரதேச செயலாளர் எஸ்.வசந்தகுமார் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார். (எ)

காலைக்கதிர் Kalaikkathir



# தமிழரை அரவணைக்கும் முதலமைச்சரே கிழக்கு மாகாணத்துக்குத் தேவை!



## சீறுகிறார் ஸ்ரீநேசன் எம்.பி.

மட்டக்களப்பு, ஓக. 05

தமிழ் மக்களை அரவணைத்துச் செல்லக்கூடிய முதலமைச்சரே கிழக்கு மாகாணத்துக்குத் தேவை. தமிழ் மக்கள் மத்தியில் வெறுப்பைச் சம்பாதித்துக்கொள்ளும் வகையில் முதலமைச்சர் இருக்கின்றமையை நாங்கள் விரும்பவில்லை.

-இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞா. ஸ்ரீநேசன் தெவித்தார்.

மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் புளியடிமுனை தமிழ்க்கலவன்பாடசாலையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கிழக்கு மாகாணத்தில் இணக்க அரசியல் செய்கிறோம் எனக் கூறிக்கொள்ளும் முதலமைச்சர் நஸீர் அஹமட், பிரதமரை அழைத்து வந்து மட்டக்களப்பு மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பான கூட்டத்தை நடத்தி உள்ளார். அந்தக் கூட்டத்துக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அழைக்கப்படவில்லை. அபிவிருத்தியை மற்றவர்களுக்குத் தெரியாமல் செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

அபிவிருத்திசெய்யும்போது வெளிப் படைத்தன்மை இருக்க வேண்டும். நாங்கள் நாடாளுமன்றத்தில் இருக்கும் போது எங்களுக்குத் தெரியாமல் அவசரமாக அபிவிருத்தி தொடர்பான கூட்டம் நடத்துவதற்கான தேவை என்ன?.

கிழக்கு மாகாணத்தில் அவர் முதலமைச்சராக வருவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிகப் பெரிய பங்களிப்பைச் செய்துள்ளது. தேர்தலில் ஆட்சியமைக்க ஒரு முகத்தைக் காட்டிவிட்டு, அபிவிருத்தி விடயத்தில் வேறு முகங்காட்டுகின்ற பாசாங்குத் தன்மை அரசியலில் இருக்கக் கூடாது. கிழக்கு மாகாண சபையில் உள்ள அமைச்சர்கள் இனம், மதம் மற்றும் சொந்த ஊர் ஆகியனவற்றுக்கு அமைச்சர்களாக இருக்கின்றமையை விடுத்து, மாகாணம் முழுவதும் பணியாற்றக்கூடிய அமைச்சர்களாக மாற வேண்டும்.-என்றார்.

(ச)

## தென்கிழக்குப் பல்கலையில் மோதல்; 9 மாணவர்கள் வைத்தியசாலையில்!

அம்பாறை,ஓக. 05

தென்கிழக்குப் பல்கலைக்கழகப் பொறியல் பீட மற்றும் தொழில்நுட்பவியல் பீடங்களைச் சோந்த இரு மாணவர் குழுக்களுக்கிடையில்ஏற்பட்ட கைகலப்பில், தொழில்நுட்பவியல் பீடத்தைச் சேர்ந்த 9 மாணவர்கள் படுகாயம் அடைந்தனர். இவர்கள் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர் என அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.




ஒலுவில் வளாகத்தில் கடந்த புதன் கிழமை இரவு 10 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பல்கலைக்கழக நிர்வாகம் மற்றும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## பட்டதாரிகளுக்கான நியமன வயதெல்லையை 45 ஆக உயர்த்த கிழக்கு ஆளுநர் இணக்கம்!



### முதலமைச்சர் தெரிவிப்பு

திருகோணமலை, ஓக. 05

கிழக்கு மாகாணத்தில் பட்டதாரிகளுக்கான நியமனம் வழங்கும் வயதெல்லையை 45 ஆக உயர்த்துவதற்கு ஆளுநர் இணங்கி உள்ளார் என அந்த மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் கிழக்கு மாகாண முதலமைச்சருக்கும் ஆளுநர் ரோஹித்த போகொல்லாகமவுக்கும் இடையில் ஆளுநர் இல்லத்தில் பேச்சு ஒன்று இடம்பெற்றது. இதனை அடுத்து, ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்தச் சந்திப்பில் கிழக்கு மாகாணத்தில் கடந்த கால யுத்தம் காரணமாக காலம் தாழ்த்தி தமது பட்டப்படிப்பை முடித்துக் கொண்டுள்ளவர்கள் தொடர்பில் பேசினோம். மேலும், கிழக்கு மாகாணத்தில் 40 வயதைக் கடந்து தமது பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்து தொழில் இன்றி இருக்கும் சுமார் 70 இற்கும் மேற்பட்ட பட்டதாரிகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார்.

வேலையற்ற பட்டதாரிகளை ஆசிரிய சேவையில் இணைத்துக் கொள்வதற்காக கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவால், போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டு நியமனம் வழங்கப்பட உள்ளது.

இதற்காக 40 வயது வரையான பட்டதாரிகளுக்கு மட்டுமே நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு, பொதுச்சேவை ஆணைக்குழு மற்றும் மாகாண கல்வி அமைச்சுக்கு ஆளுநர் ஏற்கனவே அறிவித்திருந்தார்.

இந்த நிலையில், கிழக்கு மாகாண முதலமைச்சர் ஆளுநரோடு மேற்கொண்ட பேச்சை அடுத்து, 45 வயது வரையான வேலையற்ற பட்டதாரிகளையும் ஆசிரியர் சேவையில் இணைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

### அம்பாறையில் வறட்சியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு

## குடிதண்ணீர் விநியோகிப்பதற்கு 10 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு!

அம்பாறை, ஓக. 05

அம்பாறை மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு குடிதண்ணீர் விநியோகிப்பதற்கு, அனர்த்த முகாமைத்துவ அமைச்சால் முதற்கட்டமாக 10 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அம்பாறை மாவட்ட உதவிப் பணிப்பாளர் ஏ.எஸ்.எம். சியாத் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில், திருக்கோவில் மற்றும் அக்கரைப்பற்று, சம்மாந்துறை, ஆலையடிவேம்பு, நாவிதன்வெளி, இறக்காமம், நாமலோயா, லாகுகல, பதியத்தலாவ, மஹாஓயா, உகண போன்ற பிரதேச செயலாளர் பிரிவுகள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன.

வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பௌஸர் மூலம் பிரதேசசபைகள் ஊடாக குடிதண்ணீர் விநியோகிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட மக்களின் தொகைக்கேற்பவும் பிரதேச செயலாளர்களின் கோரிக்கைக்கமையவும் இந்த நிதி வழங்கப்பட்டுள்ளது. தேவை ஏற்படின் மேலும் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.-என்றார்.

(ச)

## வெள்ளம் பாதித்த மக்களுக்கு கிழக்கு மாகாணசபை உதவி!

நாட்டில் கடந்த மே மாதம் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக கிழக்கு மாகாணசபை அவசர தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. அதன் அடிப்படையில் மாகாண ரீதியில் 90 லட்சம் ரூபா நிதியைச் சேகரித்து அந்த மக்களுக்குத் தேவையான நிதி மற்றும் பொருள்களை நேற்று வெள்ளிக் கிழமை மாகாண சபையினர் கையளித்தனர்.



மாத்தறை, தெனியாய மற்றும் பிட்டபெத்தர பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கே இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

இதன்போது, வீடுகளை இழந்தவர்களுக்குக் கட்டடப் பொருள்கள் மற்றும் உயிர் இழந்தவர்களுக்கான உதவிகள் என்பன வழங்கப்பட்டன.



இதில், கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சர் நசீர் அஹமட், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல். முஹம்மட் நஸீர் மற்றும் கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் சரத் அபேகுணவர்த்தன, கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் யூ.எல்.ஏ அஸீஸ், கிழக்கு மாகாண சபையின் உயர் அதிகாரிகள், பிரதேச மக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(ச)

# வெற்றிலை வரியை பாக். அதிகரித்தால் உற்பத்தியாளர்கள் மிகவும் நெருக்கடியில்!

கொழும்பு, ஓக. 05

இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் வெற்றிலைகளுக்குப் பாகிஸ்தான் அரசு அறவிடும் வரியை அதிகரித்துள்ள காரணத்தால் தாங்கள் மிகப் பெரிய நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளனர் என இலங்கை வெற்றிலை உற்பத்தியாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பில் இலங்கை வெற்றிலை உற்பத்தியாளர்களின் சங்கத் தலைவர் இந்திக்க ராஜ பக்ஷ தெரிவித்தவை வருமாறு:-

பாகிஸ்தான் தனது பாவனைக்காகப் பயன்படுத்தும் வெற்றிலைகளில் 80% வீதம் இலங்கையிலிருந்தே இறக்குமதி செய்கின்றது.

தற்போது பாகிஸ்தான் அரசு நடைமுறைப்படுத்திய வரி அதிகரிப்புக் காரணமாக இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்படும் வெற்றிலை உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளது.

பாகிஸ்தானுக்கு ஆண்டுதோறும் 30 ஆயிரம் மெற்றிக் தொன்னுக்கும் மேற்பட்ட வெற்றிலை ஏற்றுமதி செய்யப்படுகின்றது. இதன்மூலம் 50 கோடிக்கும் மேற்பட்ட வருமானம் பெறப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையைத் தீர்த்து வைப்பதற்கு இலங்கை அரசு பாகிஸ்தான் அரசுடன் பேச்சுகளை மேற்கொண்டு தீர்வொன்றை வழங்க வேண்டும் என்று அரசிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.-என்றார்.

இதுதொடர்பில் கருத்து தெரிவித்துள்ள வர்த்தக அமைச்சகம் -



'இலங்கை வெற்றிலை உற்பத்தியாளர்கள் முகம் கொடுத்துள்ள பிரச்சினை தொடர்பாக அமைச்சர் ரிஷாத் பதியுதீன் இலங்கைக்கான பாகிஸ்தான் பிரதிதூதுவரைச் சந்தித்துப் பேச்சுகளை மேற் கொண்டுள்ளார் எனத் தெரிவித்துள்ளது.

இந்தப் பேச்சின்போது இலங்கை வெற்றிலை உற்பத்தியாளர்கள் முகம் கொடுத்துள்ள பிரச்சினை தொடர்பாக பாகிஸ்தான் அரசை தெளிவுபடுத்ததான் நடவடிக்கை எடுப்பேன் என இலங்கைக்கான பாகிஸ்தான் பிரதிதூதுவர் கூறியுள்ளார் என்றும் அந்த அமைச்சகம் மேலும் தெரிவித்துள்ளது.

## பரீட்சை வினாத்தாள் மதிப்பீட்டுப் பணிக்காகப் பாடசாலைகள் மூடப்படும்

ஜி.சீ.ஈ உயர் தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணி நிமித்தம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 7ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை 5 பாடசாலைகள் மூடப்படவுள்ளன என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, 22 பாடசாலைகள் இந்தக் காலப் பகுதியில் பகுதியளவில் மூடப்படும் என்று திணைக்களம் தெரிவித்துள்ளது.

பகுதியளவில் மாத்திரம் மூடப்படும் 22 பாடசாலைகள், 3ஆம் தவணைக்காக வழக்கம் போல் செப்ரெம்பர் மாதம் 6ஆம் திகதி திறக்கப்படும்.

அனைத்து பாடசாலைகளும் எதிர்வரும் செப்ரெம்பர் 21ஆம் திகதி 3ஆம் தவணை கல்வி நடவடிக்கைகளுக்காக திறக்கப்பட்டுவிடும் என்றும் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## உயர்தர பரீட்சை அனுமதி அட்டைகள் கிடைக்காதோர் தொடர்புகொள்ளலாம்

கொழும்பு, ஓக.05

கல்வி பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

உயர்தர பரீட்சை எதிர்வரும் 8 ஆம் திகதி நாடு முழுவதும் உள்ள இரண்டாயிரத்து 230 பரீட்சை நிலையங்களில் ஆரம்பமாகி செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

இந்த நிலையில், இது வரையில் பரீட்சை அனுமதி அட்டைகள் கிடைக்காத பரீட்சார்த்திகள் உடனடியாக பரீட்சை திணைக்களத்தைத் தொடர்பு கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தொலைதூரத்தில் உள்ள பரீட்சார்த்திகள் தொலைபேசி ஊடாகத் தொடர்பு கொள்ளலாம். இதற்காக 1911 அல்லது பாடசாலை பரீட்சைகள் ஒழுங்கமைப்பு கிளையின் 0112 784 208, 0113 188 350, 0113 140 314 முதலான தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. (எ)

## அம்பாந்தோட்டை துறைமுக உடன்பாடு குறித்த விவாதத்தைக் குழப்பியது தூதரகம் ஒன்றே!

### அமைச்சர் தயாசிறி குற்றச்சாட்டு

அம்பாந்தோட்டைதுறைமுக உடன்பாடு தொடர்பாக நாடாளுமன்றத்தில் நடக்க இருந்த விவாதம் குழப்பப்பட்டதன் பின்னணியில், சக்திவாய்ந்த நாடு ஒன்றின் தூதரகமே இருந்தது என்று இலங்கை குற்றம் சாட்டியுள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளைஅறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த அமைச்சரவையின் இணைப் பேச்சாளர் தயாசிறி ஜெயசேகர இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

அம்பாந்தோட்டைத் துறைமுக உடன்பாட்டின் வரைவு ஆவணம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, கடந்த வெள்ளிக்கிழமை விவாதம் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது.

எனினும், கூட்டு எதிரணியினர் அன்று நாடாளு மன்றத்தில் குழப்பம் விளைவித்ததமையால், விவாதம் நடத்தப்படவில்லை.

இதனால், நாடாளுமன்ற விவாதம் நடத்தப்படாமலேயே கடந்த சனிக்கிழமை சீன நிறுவனத்துடன் உடன்பாடு கையெழுத்திடப்பட்டது.

இதுதொடர்பில் நேற்று செய்தியாளர்களிடம் தகவல் வெளியிட்ட அமைச்சரவை இணைப் பேச்சாளர் தயாசிறி ஜெயசேகர,

'உடன்பாட்டில் திருத்தங்களைச் செய்வதற்கான வாய்ப்புகளை கூட்டு எதிரணியினர் தவறவிட்டு விட்டனர்.



குறிப்பிட்ட ஒரு வெளிநாட்டு இராஜதந்திரத் தூதரகத்தில் இருந்து கூட்டு எதிரணியின்உறுப்பினர்ஒருவருக்கு வந்ததொலைபேசி அழைப்பை அடுத்தே, எல்லாக் குழப்பங்களும் ஆரம்பமாகின.

இதனால், திருத்தங்கள் ஏதும் செய்யப்படாமலேயே உடன்பாடு கையெழுத்திடப்பட்டது' என்று கூறினார். (எ)

## இலங்கை விஜயம் செய்கிறார் துருக்கியின் முன்னாள் பிரதமர்



கொழும்பு, ஓக. 05

துருக்கியின் முன்னாள் பிரதமர் அஹமட் டவுடொக்லு இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

அவர், எதிர்வரும் 08 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ள முன்னாள் சபாநாயகர் மர்ஹூம் அல்ஹாஜ் பாக்கிர் மாக்காரின் 20ஆவது நினைவுதின நிகழ்வில் பிரதான உரை நிகழ்த்தவுள்ளார்.

தேசிய ஐக்கியத்துக்கான பாக்கிர் மாக்கார் நிலையத்தால் ஏற்பாடு செய்யப்படும் இந்த நிகழ்வில் 'பல்கலாசாரமே சமாதானத்துக்கான அடிப்படை' எனும் தலைப்பில் துருக்கியின் முன்னாள் பிரதமர் பேராசிரியர் 'அஹமட் டவுடொக்லுவால் சிறப்புரை நிகழ்த்தப்படவுள்ளது.

இலங்கைக்கான தனது விஜயத்தின் போது பேராசிரியர் டவுடொக்லு, சிரேஷ்ட அரச அதிகாரிகள் பலரைச் சந்திக்கவுள்ளார் அதில் பாகிர் மாக்கார் மன்றம் ஏற் பாடு செய்யும் இளைஞர் கலந்துரையாடலிலும் பங்கேற்கவுள்ளார். (எ)

## இலங்கை வருகிறது சீனக்கடற்படையின் மிதக்கும் பெரிய மருத்துவமனைக் கப்பல்!



கொழும்பு, ஓக. 05

சீனக் கடற்படையின் மிக நவீன மருத்துவமனைக் கப்பலான, 'ஆர்க் பீஸ்' நல்லெண்ணப் பயணமாக நாளை இலங்கைக்கு வரவுள்ளது. இந்தக் கப்பல் எதிர்வரும் 9ஆம் திகதி வரைகொழும்புதுறைமுகத்தில் தரித்து நிற்கும் என்று சீன தூதரகம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் 8ஆம் திகதி, இந்த மிதக்கும் மருத்துவமனையில் இலங்கையர்களுக்கு இலவச மருத்துவ உதவிகள் வழங்கப்படவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆர்க்பீஸ்கப்பல், சீனாவால் கட்டப்பட்ட மிகப் பெரிய மருத்துவமனைக் கப்பல் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# தெல்லிப்பழை வைத்தியசாலையில் சைக்கிள் பாதுகாப்பு நிலையம்

## நாளைமறுதினம் திறந்து வைக்கப்படும்

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் நாளை மறுதினம் திங்கட்கிழமை சைக்கிள் பாதுகாப்பு நிலையம் காலை 9 மணிக்கு திறந்து வைக்கப்பட உள்ளது.

வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் யோ.திவாகர் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு அனுசரணையாளர்களாக சைக்கிள் பாதுகாப்பு நிலையம் அமைப்பதற்குலயன் பூமாதேவி மகாதேவா ஞாபகார்த்தமாக லயன் செ.மகாதேவாவும், அமரர் செல்லையா இந்திரஜித் ஞாபகார்த்தமாக தீவகத்தைச் சேர்ந்த பிரபல வர்த்தகரும், இராஜேஸ்வரி திருமண மண்டபத்தினரும் நிதியுதவி வழங்கியுள்ளனர்.

இந்த நிகழ்வில் லயன்ஸ் கழகம் மாவட்டம் 306 $B_1$ இன் 2 ஆவது உதவி மாவட்ட ஆளுநர் தொழிலதிபர் லயன் பி.மகேந்திரன் தம்பதிகளும், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரி சங்கத்தினர், வைத்தியசாலை சமூகத்தினர், லயன்ஸ் கழக உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொள்வர். (இ)

## தினசரி ராசி பலன் 05.08.2017

2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் ஆனித் திங்கள் 21 ஆம் நாள் திரயோத சித் திதி இரவு 8.51 மணி வரை. பின்னர் சதுர்த்தசி. நட்சத்திரம்: பூராட்டம் இரவு 11.35 மணி வரை. பின்னர் உத்தராடம். சித்த யோகம் முழுவதும். ராகுகாலம்: காலை 9.09 மணி முதல் 10.42 மணி வரை. சுபநேரம்: மாலை 3.05 மணி முதல் 4.35 மணி வரை. இன்று பிரதோஷ விரதன். திவசம் செய்யவேண்டிய திதி. ஆடி மாத வளர்பிறை திரயோதசி. பிறந்த நட்சத்திர வழிபாடு: பூராடம்.

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம் :** இனிமையான நாள். குடும்ப உறவு இனிமையாக இருக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் சுபமாக நடைபெறும். இதுவரை பகையாய் இருந்தவர்கள் நட்புடன் பழகுவார்கள். கொடுக்கல், வாங்கலில் இணக்கம் காணப்படும்.

**ரிஷபம் :** யோசனையாக இருக்கும். குடும்பத்தில் வீண் வாக்கு வாதங்கள் உண்டாகும். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகரிக்கும்.

**மிதுனம் :** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகளால் பணப்பற்றாக்குறை ஏற்படும். பயணங்களைத் தவிர்க்கவும். புதிய முயற்சிகளைத் தள்ளிப் போடுவது நன்று.

**கடகம் :** ஆக்கபூர்வ பலன்கள் காணப்படுகின்றன. குடும்பத்தில் நெருக்கம், பாசம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் திறமையால் கௌரவப் பதவிகள் கிடைக்கும்.

**சிம்மம் :** சமபலன்கள் காணப்படும். புதிய தொழில் முயற்சிகளைத் தள்ளிப்போடவும். வேலைப்பளுவும், பொறுப்பும் அதிகரிக்கும். கொடுக்கல், வாங்கலில் அவதானம் தேவை.

**கன்னி :** கவலையான நாள். சுயதொழிலில் ஆதாயம் குறையும். உறவினர்களால் செலவுகள் அதிகரிக்கும். பயணத்தின் போது உடைமைப் பொருள்கள் தொலைந்து போக வாய்ப்புள்ளது. கவனம் தேவை.

**துலாம் :** சமபலன்கள் காணப்படுகின்றன. எடுக்கும் கருமங்கள் தடை, தாமதமாகும். தொழிலில், பிரயாசையும், அலைச்சலும் அதிகரிக்கும். வேலைதேடுவோருக்கு வேலை கிடைப்பது கடினம்.

**விருச்சிகம் :** இன்பமான நாள். குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும். திருமண வாய்ப்புகள் வலியவரும். தொழிலில் உயர்ச்சிகள் கிடைக்கும்.

**தனுசு :** அனுகூலமான பலன்கள் காணப்படுகின்றன. நினைப்பதெல்லாம் நிறைவேறும். வேலைவாய்ப்புகள் வலியவரும். தொழிலில் உயர்ச்சிகள் கிடைக்கும்.

**மகரம் :** துன்பமான நாள். உறவினர்கள், நண்பர்களுடன் வீண்விரோதம் உண்டாகும். கொடுக்கல், வாங்கலில் பிரச்சினை உண்டாகும். வியாபாரத் தொழில் மந்தகதியில் நடக்கும்.

**கும்பம் :** உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. குடும்ப ஒற்றுமை பலப்படும். வியாபாரத்தொழில் முன்னேற்றம் அடையும். பெண்கள் சுயதொழில் மேன்மை அடைவார்கள்.

**மீனம் :** சமபலன்கள் காணப்படுகின்றன. பெண்கள் ஆடம்பரச் செலவுகளைக் குறைக்க வேண்டும். தொழிலில் கடின உழைப்பும், அலைச்சலும் அதிகரிக்கும்.

சந்திராட்டமநாள்: கார்த்திகை 2, 3, 4 ரோகிணி, மிருக சீரிடம் 1, 2 ஆம்கால்கள் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் சுபகருமங்களில் ஈடுபாடு கொள்வதைத் தவிர்க்கவும்.

# மன்னாரில் வீதியோரங்களில் அனுமதியின்றி மதச் சிலைகளை அமைப்பதற்குத் தடை!

## ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தீர்மானம்

மன்னார், ஓக.05

மன்னார் மாவட்ட வீதியோரங்களில் அனுமதியின்றி மதங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சிலைகளை அமைப்பதற்குத் தடை விதிக்க ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது. இதில் வன்னிப் பிராந்திய நாடாளுமன்ற உறுப்பினாகளான சிவசக்தி ஆனந்தன், எம்.எம்.மஸ்தான், அமைச்சர் பா.டெனீஸ்வரன், வட மாகாணசபை உறுப்பினர் ஐ.குணசீலன் ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் மாவட்ட உதவிச் செயலாளர் வீ.பபாகரன் கலந்து கொண்டு பேசுகையில் தெரிவித்தவை வருமாறு:-

மன்னார் மாவட்டத்தில் நானூறுக்கும் மேற்பட்ட சுரூபங்கள் எவ்வித அனுமதியும் இன்றி வைக்கப்பட்டுள்ளன. இவை புகைப்படங்களுடன் ஆவணப்படுத்தப்பட வேண்டும். இவற்றுக்கு இயற்கையாகவோ அல்லது வேறு ஏதாவது மூலம் பாதிப்பு ஏற்பட்டால் இவற்றை புனரமைக்கும் தேவை ஏற்படின் பிரதேச செயலாளரின் அனுமதியுடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

இந்த விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு மாவட்ட ரீதியில் சமாதான ஆலோசனை சபை ஒன்று அமைக்கப்பட வேண்டும் என மன்னார் மாவட்ட செயலகத்துக்குச் சுற்றுநிருபம் கிடைக்கப் பெற்றுள்ளது. இதற்கமைய இந்தக் குழுவில் அரச அதிபர், மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் அனைத்து மதத் தலைவர்கள் ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவிலிருந்தும் இரு பிரதிநிதிகளும் அங்கம் வகிப்பர்.

இந்தத் தீர்மானத்தை மீறி அனுமதியின்றி இங்கு வீதியோரங்களில் சிலைகள் மற்றும் சுரூபங்கள் அமைக்கப்படுமாயின் அவை பொலிஸாரின் உதவியுடன் அகற்றப்படும். சில வேளைகளில் புதிதாக அமைக்கப்படும் கிராமங்களில் சமய ரீதியான வணக்கத் தலங்கள் அமைக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பிரதேச செயலாளர் ஊடாக சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும்.

அங்கு அனுமதி கிடைத்த பின்னர் தான் வணக்கத் தலங்களை அமைக்க முடியும். -என்றார். (ச-112)

# மாந்தை கிழக்கு வீதிப் புனரமைப்புக்கான கிரவலைப் பெற்றுக்கொள்வதில் சிக்கல்

## பிரதேச சபையின் செயலர் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஓக. 05

முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு வீதிகளைப் புனரமைப்பதற்கு கிரவல் பெற்றுக்கொள்வதில் சிரமங்கள் காணப்படுகின்றன என மாந்தை கிழக்கு பிரதேச சபையின் செயலாளர் பா.சிவபாலராஜா தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தைகிழக்கு பிரதேச சபையின் கீழ் உள்ள பெருமளவான வீதிகள் புனரமைக்கப்படாமல் காணப்படுகின்றன.

அந்த வீதிகளால் பயணிப்போர் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். எனவே, அந்த வீதிகளைப் புனரமைத்துத் தருமாறு தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வருகின்றனர். அந்த வீதிகள் அதிகளவானவை பிரதேச சபைக்குச் சொந்தமான வீதிகளாகக் காணப்படுகின்றன.

இவ்விடயம் தொடர்பில் மாந்தை கிழக்கு பிரதேச சபையின் செயலாளர் சிவபாலராஜா குறிப்பிடுகையில்-

'மாந்தைகிழக்கு பிரதேசத்தில் உள்ள கூடுதலான வீதிகள் வருடாந்தம் கிடைக்கப்பெற்ற நிதியொதுக்கீட்டிலிருந்து கணிசமான வீதிகள் புனரமைக்கப்பட்டிருக்கின்றன.

அத்துடன், கனரக இயந்திரங்களைக் கொண்டும் சில வீதிகளைசெப்பனிட்டிருக்கின்றோம். சபைக்கான வருமானம் இன்மையால் பல்வேறு திட்டங்கள் ஊடாகக் கிடைக்கின்ற நிதியைக்கொண்டே புனரமைத்து வருகின்றோம்.

சபைக்கான வருமானம் இல்லை. எனவே, தற்போது வீதிகளைப் புனரமைப்பதற்கான கிரவலை பெற்றுக்கொள்வதில் பெரிய பிரச்சினையாக உள்ளது.- என்றார்.

# திடீர்ச் சோதனையிடப்பட்ட நிறுத்தல் அளவுத் தராசுகள்

## வவுனியா வியாபார நிலையங்களில்

வவுனியா, ஓக. 05

வவுனியாவில் உள்ள வியாபார நிலையங்களில் பயன்படுத்தப்படும் நிறுத்தல் அளவு தராசுகள் நேற்றுத் திடீர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

வடமாகாண அளவைகள், நிறுவைகள், நியமங்கள் அளவீட்டுத்திணைக்களத்தின் ஏற்பாட்டில் வவுனியா நகர்ப் பகுதி வியாபாரநிலையங்களில் அளவு தராசுகளைச் சோதனை செய்யும் நடவடிக்கை இடம் பெற்று வருகின்றது.

மேற்குறிப்பிடப்பட்ட திணைக்களத்தின் சட்ட திட்டத்துக்கு அமைவாக நிறுத்தல் அளவு கருவிகளை பரிசோதித்துப் பதிவு செய்யப்படாத நிறுத்தல், அளவைக் கருவிகளை பயன்படுத்துவோர் மீது சட்ட நடவடிக்கைகளை மேற் கொள்ளப்படவுள்ளன.



இதற்கமைவாக வவுனியா, சந்தையில் உள்ள வட்ட வீதி, பசார் வீதி, முதலாம் குறுக்குத் தெரு, இரண்டாம் குறுக்குத் தெரு போன்ற பல பகுதிகளில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன என்று வடமாகாண அளவைகள், நிறுவைகள், நியமங்கள் அளவீட்டுத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர். (எ-100)

# நடுவரின்றி நடக்காது விடயம்

செல்வரட்ணம் சிறிதரன்

### திம்பு பேச்சுக்களும் பின்னணியும்

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் விடயத்தில் இலங்கை, இந்தியா மற்றும் நோர்வே போன்ற நாடுகளின் வெளி அழுத் தங்களுக்கு உட்பட்டு செயற்பட்டு வந்துள்ளது. இந்த வகையில் இந்தியா நீண்ட காலமாகவே இலங்கை விவ காரத்தில் முக்கிய பங்காற்றி வந்துள்ளது. அதேவேளை நோர்வேயும் விடுத லைப்புலிகளுக்கும் இலங்கை அரசாங் கத்திற்கும் இடையிலான பேச்சுகளில் அனுசரணையாளராகவும் அது செயற் பட்டிருந்தது.

மிதவாத அரசியல் தலைமைகளின் சாத்வீகப் போராட்டங்களும், அரச தரப்பினருடனான நேரடி பேச்சுகளும் ஒப்பந்தங்களும் தோல்வியில் முடிவ டைந்தமையையடுத்து, தமிழ் மக்கள் தனியொரு தேசமாகப் பிரிந்து செல் வதைத் தவிர வேறு வழியில்லை என்ற தீர்மானத்திற்கு வந்தபோது, வட்டுக்கோட்டை தீர்மானத்தின் மூலம் தனிநாட்டு கோரிக்கை பிரகடனப்ப டுத்தப்பட்டிருந்தது. அதேவேளை தந்தை செல்வநாயகத்தின் வழி நடத் தலில் செயற்பட்டு வந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயற் பாடுகள், தந்தை செல்வநாயகத்தின் மறைவையடுத்து, தமிழ் இளைஞர்க ளின் மத்தியில் ஒருவித அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தன. இந்த அதிருப் தியின் காரணமாக ஏற்பட்ட இளை யோரின் எழுச்சி, ஆயுதப் போராட்டச் செயற்பாடுகளுக்கு வித்திட்டிருந்தது.

தமிழ் மக்களின் அரசியல் உரிமை களை வென்றெடுப்பதற்காக ஆயுதப் போராட்டம் தனது நடவடிக்கைகளை சிறுக சிறுக ஆரம்பித்திருந்த சூழலி லேயே 1981 ஆம் ஆண்டு அரசியல் தீர்வுக்காக மாவட்ட சபைகள் அறிமு கப்படுத்தப்பட்டன. அத்துடன் தமி ழர்கள் மீதான தாக்குதலும் நடத்தப் பட்டது, யாழ்ப்பாண நூலகத்திற்கும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த காடையர்கள் அரச ஆதரவுடன் தீ வைத்தார்கள். யாழ் நூலகம் எரிந்து சாம்பராகியது மட்டுமல்லாமல், அந்த சம்பவத்தின்போது நூலகத்தைச் சூழ்ந்த பகுதிகளில் இடம்பெற்ற காடையர்களின் வெறியாட்டத்தில் உயிரிழப்பும் மோசமான சொத்திழப் புக்களும் ஏற்பட்டிருந்தன.

தொடர்ந்து 1983 ஜூலை மாதம் 23 ஆம் திகதி அதிகாலை வேளையில் யாழ்ப்பாணம், திருநெல்வேலியில் இராணுவ வாகனத் தொடரணி ஒன் றின் மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். அந்த சம்பவத் தைச் சாட்டாகக் கொண்டு, ஏற்கனவே அப்போதைய அரச தரப்பினரால் திட்டமிட்டிருந்தவாறு கொழும்பில் தமிழர்கள் தாக்கப்பட்டனர். சொத்துக் கள் சூறையாடப்பட்டன தமிழர்களின் வர்த்தக நிலையங்களும் வீடுகளும் தீக்கிரையாக்கப்பட்டன. கொழும்பில் இடம்பெற்ற இந்தத் தாக்குதல் மலை யகம் உள்ளிட்ட பல்வேறு இடங்க ளுக்கும் பரவியதையடுத்து, அந்தச் சம்பவங்கள் கறுப்பு ஜூலை கலவர மாகப் பெயர் பெற்றது.

இந்தப் பின்னணியிலேயே இலங் கையின் இனப்பிரச்சினைக்கு பேச்சு களின் மூலமாக ஓர் அரசியல் தீர்வை எட்டும் முகமாக அரச தரப்பினரையும், ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டி ருந்த ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈரோஸ், தமிழீழ விடுதலைப்புலிகள், புளொட், ரெலோ ஆகிய ஐந்து அமைப்பக்களு டன் மிதவாத அரசியல் கட்சியாகிய தமிழர் விடுதலைக் கூட்டணியையும் உள்ளடக்கிய தமிழ் தரப்பினரை பூட் டான் நாட்டின் தலைநகராகிய திம்பு நகரில், இந்திய ஒன்றிணைத்திருந்தது.

விட்டுக்கொடுப்புக்களின் ஊடாக இருதரப்பினரும் ஓர் இணக்கப்பாட் டுக்கு வரவேண்டும். அதன் மூலம் இனப்பிரச்சினைக்கு அவர்கள் ஒரு தீர்வை எட்ட வேண்டும் என்பது இந்தியாவின் எதிர்பார்ப்பாக இருந்தது. ஆனால்,அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனவின் சகோதரராகிய ஹெக்டர் ஜெயவர்தன தலைமையி லான அரச தரப்பினரும், தமிழர் தரப் பினரும் உணர்ச்சி வசப்பட்ட நிலை யில் பேச்சுக்களில் ஈடுபட்டமையின் காரணமாக அவர்களால் ஓர் இணக் கப்பாட்டுக்கு வரமுடியாமல் போயின. அதனால் திம்புப் பேச்சுக்கள் தோல் வியில் முடிவடைந்தன.

## தீர்ப்பாளரின்றி தீர்வும் இல்லை

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் தற் போதைய எத்தனங் களும் கூட வெளிச்சக்தி ஒன்றின் நேரடிப் பங்களிப்பு - பங்கு பற்றுதலின்றி - சாத்திய மற்றது என்பதை பிரதி பலிக்கின்றது இக் கட் டுரை. அதன் இரண் டாவது பகுதி இன்று பிரசுரமாகின்றது.

### மாகாண சபை நிர்வாக முறைமை

இருப்பினும் இந்தியா சோர்ந்து விடவில்லை. தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டத்தை எப்படியும் நசுக்கிவிட வேண்டும் என்ற நோக்கத் தில் ‘ஒப்பரேஷன் லிபரேஷன்’ என்ற பெயரில் தீவிரமானதோர் இராணுவத் தாக்குதலை அரச படைகள் முன்னெ டுத்தபோது, இந்தியா தனது பிராந்திய அரசியல் நலன்களை முன்னிட்டு தலையீடு செய்தது.

‘ஒப்பரேஷன் லிபரேஷன்’இராணுவ நடவடிக்கை காரணமாக போர்ச் சூழ லில் சிக்கியிருந்த யாழ்ப்பாண மக்க ளுக்கு, இந்தியா மனிதாபிமான ரீதியில் நிவாரணமாக உணவுப் பொருள்களை கடல் வழியாக அனுப்பி வைத்தது. அந்தக் கப்பல்களை இலங்கையின் கடற்படையினர் இடைமறித்தமையை யடுத்து, வான்வழியாக விமானங்களில் இருந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுப் பொட்டலங்கள் போடப்பட் டன. இந்திய செஞ்சிலுவைச் சங்கத் தின் உதவியுடன் வழங்கப்பட்ட இந்த மனிதாபிமான நடவடிக்கைக்கு ‘ஒப் பரேஷன் பூமாலை’ என இந்தியா பெய ரிட்டிருந்தது.

இராஜதந்திர ரீதியில் பிரச்சினைக ளுக்குத் தீர்வு காண வேண்டும். இரா ஜதந்திர முயற்சிகள் பலனளிக்காவிட் டால், இராணுவ ரீதியிலான நட வடிக் கைகள் தவிர்க்க முடியாதனவாகி விடும் என்று இந்தியா இலங்கைக்கு ஏற்கனவே எச்சரிக்கை செய்திருந்ததன் அடிப்படையிலேயே இலங்கை விவ காரத்தில் இந்தியாவின் தலையீடு அமைந்திருந்தது.

‘ஒப்பரேஷன் பூமாலை’யைத் தொடர்ந்து ஏற்கனவே இடம்பெற்றி ருந்த பேச்சுகளின் அடிப்படை யில் இனப்பிரச்சினைக்கு மாகாண சபை நிர்வாக முறைமையின் கீழ் ஓர் அரசி யல் தீர்வை வழங்க வேண்டும் என்ற அடிப்படையில் இலங்கையும் இந்தி யாவும் 1987 ஆம் ஆண்டு ஓர் ஒப்பந்தத்தை செய்து கொண்டன. அந்த ஒப்பந்தத்தின்படி, மாகாண மட்டத்தில் அதிகாரங்களைப் பகிர்ந் தளிப்பதற்கான வழிமுறைகளை உருவாக்குவதற்காக இலங்கையின் அரசமைப்பில் ஒரு திருத்தம் செய் யப்பட்டது. இலங்கை இந்திய ஒப் பந்தத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட இந்த அரசமைப்புத் திருத்தமே 13 ஆவது அரசமைப்பு திருத்தச் சட்டம் எனப் பெயர் பெற்றிருக்கின்றது.









இந்தியாவின் தலையீடு காரணமா கவே இலங்கை அரச தரப்பினரும் தமிழ்த்தரப்பு அரசியல் சக்திகளும் திம்பு பேச்சுகளில் கலந்து கொண்டன. அந்த முயற்சி வெற்றிபெறாத போதி லும் 1987 ஆம் ஆண்டு இடம்பெற்ற இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் கீழ் இலங்கை அரசமைப்பில் மாகாண சபை நிர்வாக முறைமை குறித்த மாற் றங்களுக்கான திருத்தச் சட்டம் நிறை வேற்றப்பட்டது.

### ஏற்பும் நிராகரிப்பும்

திம்புப் பேச்சுககளில் தமிழ் மக்கள் ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்கப்பட வேண்டும். வடக்கும் கிழக்கும் இணைந்த தமிழர் தாயகமாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும், தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்ற அடிப்படை யில் அவர்களுடைய சுயநிர்ணய உரிமை ஏற்றுக்கொள்ளப்பட வேண் டும், மலையக மக்கள் உட்பட இலங் கையைத் தமது தாயமாக வரித்துக் கொண்டுள்ள அனைத்துத் தமிழர்களும் இந்த நாட்டின் பிரஜைகள் என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்ற விடயங்கள் முன்வைக்கப்பட்டன. ஆனால் முதல் மூன்று விடயங்க ளையும் அரச தரப்பினர் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டனர்.

சுயநிர்ணய உரிமை என்பது, கால னித்துவ முறையில் நிர்வகிக்கப்படு கின்ற பிரதேசங்களில் அல்லது நாடு களில் வாழும் மக்களுக்கே பொருத்த முடையது. தனி அரசாக நிர்வாகம் நடத்துகின்ற நாடுகளில் வாழும் இனக்குழுமங்களுக்கு இது பொருத் தமற்றது என்ற சர்வதேச சட்டமுறை மையைச் சுட்டிக்காட்டி, அரச தரப் பினர் அந்தக் கோரிக்கையை நிராகரித்திருந்தனர்.

ஆனால், இலங்கை- இந்திய ஒப் பந்தத்தின் மூலம் அரசியல் தீர்வுக்காக உருவாக்கப்பட்ட மாகாணசபை மட்டத்திலான தீர்வில், இலங்கையில் வாழும் அனைத்து இனக் குழுமங் களும் சம உரிமையுடையவர்களா கவும், தமது மதம் மற்றும் கலை கலாசார, பண்பாடுகளைப் பேணி நடக்கவும் வழி செய்யப்பட வேண் டும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதேபோன்று தமிழும் அரச கரும மொழியாக அங்கீகரிக்கப்பட வேண் டும் என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட் டது. வடக்கையும் கிழக்கையும் தற் காலிகமாக இணைப்பதற்கு ஒப்புக் கொள்ளப்பட்ட அதேவேளை, சர்வ சனவாக்கெடுப்பு ஒன்றின் மூலம் கிழக்கு மாகாண மக்கள் தாங்கள் வடக்குடன் இணைந்திருப்பதா இல்லையா என் பதைத் தீர்மானித்து, அதற்கேற்ற வகையில் வடக்கையும் கிழக்கையும் இணைப்பது தொடர்பில் நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது ஒப்புக்கொள்ளப்பட்டது.

### புதிய ஏற்பாடுகள்

ஆனால், புதிய அரசமைப்பின் ஊடாகக் கொண்டு வரப்படவுள்ள அரசியல் தீர்வில் பௌத்த மதத்திற்கே முன்னுரிமை என்றும் அந்த மதமே உயரிய அந்தஸ்தைப் பெற்றிருக்கும் என்றும் ஏனைய மதங்கள் தமது உரி மைகளைப் பேண முடியும் என்றும் இதுவரையிலுமான நடவடிக்கைகளில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றது. ஒற்றையாட்சிக்குப் பதிலாக சமஷ்டி என்ற சொல் பயன்படுத்தப்படமாட் டாது. ஆனால், அந்த தன்மைக்கு ஒப்பான வகையில் அதிகாரப் பகிர்வு மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக் கப்பட்டிருக்கின்றது. புதிய ஏற்பாட் டின்படி, வடக்கையும் கிழக்கையும் இணைக்க முடியாது.

ஒற்றையாட்சி என்ற பதத்தைப் பயன்படுத்தாமல் ஒன்றிணைந்த நாடு என்ற கருத்தைக் கொண்ட ஒரு சிங்களச் சொல் பயன்படுத்தப்படும் என்ற வகையில் சட்டரீதியான நடவ டிக்கைகளின்போது சிக்கல்கள் ஏற் படத்தக்க ரீதியிலான முறையில் புதிய அரசமைப்பில் அரசியல் தீர் வுக்கான ஏற்பாடுகள் சரத்துக்களாக முன்வைக்கப்பட்டிருக்கின்றன.

இலங்கையில் முதன்மை இடத்தை பௌத்த மதமே பெற்றிருக்கின்றது என அரசமைப்புச் சட்டம் கூறுகின் றது. அதேவேளை ஏனைய மதங்களும் தமது உரிமைகளைக் கொண்டிருப் பதாகவும் அவற்றை அந்த மதங்க ளைச் சார்ந்தவர்கள் பின்பற்றலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழர் தரப்பும் இலங்கை அர சாங்கமும் நேரடியாக நடத்துகின்ற பேச்சுகளும் சரி, இரண்டு தரப்பினரும் ஒப்புக்கொண்டு செய்யப்படுகின்ற அரசியல் தீர்வுக்கான ஏற்பாடுகளும் சரி, வெளித்தோற்றத்தில் நன்மை யானவையாகத் தோற்றினாலும்கூட, இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வைக் கொண்டு வரும் என கூறு வதற்கில்லை.

வரலாற்றில் இடம்பெற்றுள்ள சம்பவங்களின் அடிப்படையில், அவை இதுவரையில் கற்றுத் தந்துள்ள பாடங்களின் அடிப்படையில், வலு வானதொரு வெளிச்சக்தியின் துணை யின்றி தமிழ் மக்களுக்கு நியாயமா னதோர் அரசியல் தீர்வு கிடைக்கும் என்பது குதிரைக் கொம்பாகவே இருக்கும். ★

காலைக்கதிர்
Kalaikkathir






தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா

**சி.ஐ.ஏ இன் சிரியப் "புரட்சி" க்கு நிதியளிப்பை நிறுத்துவாரா ட்ரம்ப்?**

சிரியாவில் இஸ்லாமியப் போராளிகள் குழுக்களுக்குப் பயிற்சியளித்து, ஆயுதங்கள் வழங்கி மற்றும் சம்பளங்களும் கூட வழங்கிய ஐந்தாண்டுகளுக்கு முந்தைய சிஐஏ இன் உத்தியோகபூர்வ இரகசிய நடவடிக்கையை ட்ரம்ப் நிர்வாகம் நிறுத்துகிறது என்று ஜூலை 19 அன்று வொஷிங்டன் போஸ்டில் முதலில் வெளியான செய்தி, ட்ரம்ப் மற்றும் மாஸ்கோவிற்கு இடையிலான ''உள்கூட்டு'' குறித்த குற்றச்சாட்டுகள் மீது வாஷிங்டனில் நடந்து வரும் கடும் அரசியல் மோதலை இன்னும் கூடுதலாக எரியூட்டியுள்ளது.

www.washingtonpost.com

Trump ends covert CIA program to arm anti-Assad rebels in Syria, a move sought by Moscow

By Greg Jaffe and Adam Entous July 19

President Trump has decided to end the CIA's covert program to arm and train moderate Syrian rebels battling the government of Bashar al&Assad, a move long sought by Russia, according to U.S. officials.

The program was a central plank of a policy begun by the Obama administration in 2013 to put pressure on Assad to step aside, but even its backers have questioned its efficacy since Russia deployed forces in Syria two years later...


The Washington Post
Democracy Dies in Darkness

National Security

Trump ends covert CIA program to arm anti-Assad rebels in Syria, a move sought by Moscow

By Greg Jaffe, Adam Entous
July 19, 2017 at 5:41 PM

Trump is shutting down a secret CIA program in Syria



ஆயுத சேவைகள் குழுவின் குடியரசுக் கட்சித் தலைவர் செனட்டர் ஜோன் மெக்கெயின், மூளை புற்றுநோய் சம்பந்தமான அறுவைச் சிகிச்சைக்குப் பின்னர் குணமாகிக் கொண்டிருந்த நிலையில், அரிஜோனாவில் இருந்து ஓர் அறிக்கை வெளியிட்டார், ''ரஷ்யாவிற்கு எந்தவொரு விட்டுக்கொடுப்பும், சிரியாவிற்கான ஒரு பரந்த மூலோபாயம் இல்லாமல் இருப்பதும், பொறுப்பற்றத் தன்மை என்பதோடு குறுகிய பார்வையையும் கொண்டது'' என்றார்.

வொஷிங்டன்போஸ்ட்கட்டுரையாளரும், ஜோர்ஜ் டபிள்யு. புஷ் இன் தலைமை உரையாசிரியருமான மைக்கேல் ஜேர்சனிடம் இருந்து மிகவும் விஷமத்தனமான ஒரு கண்டனம் வந்தது, ட்ரம்ப் ''சிரியாவில் ரஷ்ய நலன்களுக்குமுழுமையாகஅடிபணிந்து விட்டார்'', ''கௌரவத்தை இழக்கும் விதத்தில், அமெரிக்க பினாமிகளுக்கான உதவிகளை வெட்டுவதன் மூலம்'' துல்லியமாக ஒரு மூலோபாய போட்டியாளரால் விலைக்கு வாங்கப்பட்டு, விற்கப்பட்டு விட்டதைப் போல'' நடந்து கொள்கிறார் என்று ட்ரம்பைக் குற்றஞ்சாட்டினார்.

சிரியாவில் ''கிளர்ச்சியாளர்கள்'' என்றழைக்கப்படுபவர்களுக்கு ஆயுதங் கள் மற்றும் பண விநியோகத்துக்கான பாதையை அடைப்பது, ஏதோவிதத்தில் ரஷ்யாவிடம் மூலோபாயரீதியில் அடிபணிவதைப் பிரதிநிதித்துவம் செய்கிறது என்ற கூற்றுக்கள் அர்த்தமற்றவை. ஹம்பேர்க்கில் நடந்த ஜி20 உச்சிமாநாட்டுக்கு முன்னதாக ட்ரம்ப் அவரது தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜெனரல் எச். ஆர். மெக்மாஸ்டர் மற்றும் சிஐஏ இயக்குநர் மைக் பொம்பியோ உடன் சேர்ந்து எடுத்தார் என்று கூறப்படும் இந்த முடிவு, முன்பே தீர்மானிக்கப்பட்டிருந்த ஒரு முடிவு தான்.

**''சுதந்திர சிரிய இராணுவம்'' சிரியாவில் எந்த முக்கிய பாத்திரம் வகிப்பதிலும் தோல்வியடைந்துள்ளது என்ற கருத்துக்கள் பயன் படுத்தப்பட்டன.**

'' சுதந்திர சிரிய இராணுவம்'' சிரியாவில் எந்த முக்கிய பாத்திரம் வகிப்பதிலும் தோல்வியடைந்துள்ளது என்ற கருத்துக்கள் இதற்காகப் பயன்படுத்தப்பட்டன. ஈரான் தரப்பில் அணி சேர்ந்திருந்த போராளிகள் குழுக்களது ஆதரவு, மற்றும் செப்ரெம்பர் 2015 இல் இருந்து ரஷ்ய விமானப்படையின் ஆதரவு ஆகியவற்றுடன் சிரிய அரசு படைகள், ''கிளர்ச்சியாளர்களை'' ஒவ்வொரு முக்கிய நகர்ப்புற மையங்களில் இருந்தும் வெளியேற்றி, அவர்கள் ஒருவரோடு ஒருவர் கடுமையான உட்பூசல்களில் ஈடுபட்டு வந்த இட்லிப் மாகாணத்தின் புறநகர்ப் பகுதிகளுக்குள் விரட்டியடித்துள்ளன.





சிரிய அரசு டிசெம்பர் 2016 இல் கிழக்கு அலெப்போவை மீண்டும் கைப்பற்றியதானது, சிஐஏ ஆதரவிலான சன்னி இஸ்லாமிய போராளிகள் குழுக்களை வொஷிங்டனின் பினாமிகளாகப் பயன்படுத்தி, ஆட்சி மாற்றத்திற்கான ஒரு போரை நடத்தும் அமெரிக்க மூலோபாயத்தின் இறுதித் தோல்வியை எடுத்துரைத்தது.

இந்தக் குற்றகரமான மூலோபாயம், 2011 இல் லிபிய அரசாங்கத்தைக் கவிழ்த்து, சட்டவிரோத கும்பல்களைக் கொண்டு அதன் தலைவர் மௌம்மர் கடாபியைப் படுகொலை செய்வதில் போய் முடிந்த அந்த ஆட்சி மாற்றத்துக்கான அமெரிக்கப் போரே அடுத்து தொடங்கப்பட்டதாகும். இஸ்லாமிய போராளிகளும் மற்றும் பெரும் எண்ணிக்கையிலான ஆயுதங்களும் கிழக்கு லிபியத் துறைமுக நகரமான பெங்காசியிலிருந்து சிரியாவிற்குள் அனுப்பப்பட்டன.

இது, 2013 வாக்கில், சவூதி அரேபியா மற்றும் ஏனைய வலதுசாரி வளைகுடா எண்ணெய் முடியாட்சிகள், மற்றும் துருக்கியுடனும் சேர்ந்து, சிஐஏ ஆல் சிரியாவிற்குள் பாய்ச்சப்பட்ட, நியூயோர்க் டைம்ஸுக்கு ஓர்அமெரிக்க அதிகாரி கூறியவாறு, ''ஆயுதங்களின் வெள்ளப்பெருக்கு என்பதாக மாறியிருந்தது. பத்தாயிரக்கணக்கான வெளிநாட்டு இஸ்லாமியப் போராளிகளும் ஓர் இரத்தந்தோய்ந்த வகுப்புவாத உள்நாட்டு போருக்குள் அனுப்பப்பட்டார்கள், இதில் பாதிக்கப்பட்டவர்களின் இப்போதைய எண்ணிக்கை, உயிரிழப்புகளில் நூறாயிரக்கணக்கிலும் அகதிகளாக இடம்பெயர்த்தப்பட்டவர்களில் மில்லியன் கணக்கிலும் உள்ளது. சர்வதேச எல்லைகளைத் தாண்டி வருவதற்கு மேற்கத்திய உளவுத்துறை முகமைகளது உதவிகளைப் பெற்றிருந்த இதே கூறுபாடுகளில் சில, ஐரோப்பாவில் பயங்கரவாததாக்குதல்களை நடத்தத் திரும்பின.

**அமெரிக்க ஆயுதங்கள் மற்றும் பணத்தைப் பெறத் தகுதி பெற்றிருந்த சுமார் 40 ''மிதவாத கிளர்ச்சி'' ''போராளிகள் குழுக்களுடன் சி.ஐ.ஏ ''நெருக்கமாக'' இருந்ததாக் கூறப்படுகிறது**




அமெரிக்க ஆயுதங்கள் மற்றும் பணத்தைப் பெறத் தகுதி பெற்றிருந்த சுமார் 40 ''மிதவாத கிளர்ச்சி'' போராளிகள் குழுக்களுடன் சி.ஐ.ஏ ''நெருக்கமாக'' இருந்ததாக கூறப்படுகிறது. யதார்த்தத்தில், இந்தக் குழுக்களில் பெரும்பான்மை அல்-நுஸ்ரா முன்னணி போன்ற கூறுபாடுகளில் இருந்து பெரிதும் வித்தியாசப்பட்டவை கிடையாது என்பதோடு, இவை இறுதியில் சிரிய அல் குவைதா துணை அமைப்புகளுடன் கூட்டணி சேர்ந்தன அல்லது அவற்றின் அமெரிக்க ஆயுதங்களை அந்த அமைப்புகளிடம் ஒப்படைத்தன.

சிஐஏ ஆதரவிலான ''கிளர்ச்சியாளர்களின்'' தோல்வி, வெறுமனே ரஷ்யா மற்றும் ஈரான் விநியோகித்த அதிகரித்த வெடிமருந்துகளால் ஏற்பட்ட ஒரு சம்பவமல்ல, மாறாகச் சிரிய மக்களின் பரந்த அடுக்குகள் இந்தப் போராளிகள் குழுக்களுக்கு விரோதமாக இருந்தன. இந்த அடுக்குகள், அசாத் ஆட்சியின் ஒடுக்குமுறை மற்றும் ஊழலுக்கு இடையிலும், அதைக் குறைந்த தீமையாகக் கண்டன.

(கேள்வி தொடரும்)

# சுதந்திர வேட்கை



**அத்தியாயம் - IV**

## மூத்த தளபதிகளுக்கு ஏற்பட்ட அவலம்



முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.

55




வல்வெட்டித்துறையின் பெயர் பூத்த குடிகளில் ஒருவர் குமரப்பா! விடுதலைப் புலிகளின் மூத்த போராளி; அவருடைய குடும்பம் பெரியது. வல்வெட்டித்துறையிலேயே வாழ்ந்தார். எமது சென்னை வாழ்க்கைக் காலத்தில் இருந்தே - அதாவது எழுபதுகளில் இருந்தே - எம்மோடு நட்புப் பூண்டவர். எண்பதுகளின் தொடக்க காலத்தில் கடற் பொறியியல் கற்க அயர்லாந்து சென்றார். அங்கிருந்து எம்மைச் சந்திக்க அடிக்கடி லண்டன் வருவார். தமிழ் மக்களுக்கு எதிராக 1983 இலே கலவரங்கள் இடம்பெற்றதும், படிப்பை உதறிவிட்டு, எம்மைத் தொடர்ந்து சென்னை வந்தவர், போராட்டத்தில் திரும்பவும் நேரே ஈடுபட யாழ்ப்பாணம் சென்றார். அங்கிருந்து மட்டக்களப்புக்கு பிரதேசப் பொறுப்பாளராக அனுப்பி வைக்கப்பட்டார். அங்கேதான் தமது மனைவி ரஜனியைக் கண்டு காதல் வயப்பட்டார். ஒப்பந்தம் கைச்சாத்தாகி, நல்லிணக்கம் காணப்பட்ட ஆரம்ப நாள்களில் குமரப்பாவைத் திருமணம் புரிய ரஜனி வல்வெட்டித்துறைக்கு வந்து சேர்ந்தார். சென்னையில் இருந்து அரசியல் அலுவலாக பாலா யாழ்ப்பாணம் சென்றபோது, அந்தத் தருணத்தை வாய்ப்பாக எடுத்த குமரப்பா, தமது திருமண முதற்சாட்சியாகக் கலந்து கொள்ளுமாறு பாலாவை அழைத்தார். திருமணம் நடந்தபோது நான் சென்னையில் இருந்தேன். எனவே ரஜனியை நான் அப்போது சந்திக்கவில்லை. நான் வல்வெட்டித்துறை வந்ததும், குமரப்பா செய்த முதல் வேலையில் ஒன்று, தமது இளம் மனைவியை எனக்கு அறிமுகம் செய்தமைதான். தமது புதுமணப் பெண்ணை எமது வீட்டுக்கு அவர் அழைத்து வந்தபோது பூரித்துப்போனேன். ஏனோ தெரியாது.ரஜனியைச் சந்தித்த அந்தக் கணம், இன்னமும் என் மனதில் தெளிவாக பசுமரத்தாணி போலப் பதிந்திருந்தது. அதற்குக் காரணம் என்ன? வெண்நிலாவொளி, குமரப்பாவின் முகத்தில் பட்டுத் தெறித்தபோது மகிழ்ச்சிப் பூரிப்புடன் இருந்த அந்த இளம் முகத்தில் ஒரு கணம் பளிச்சிட்டது அழகா? அல்லது ஒருவர் மீது ஒருவர் கொண்ட காதலை வெளிப்படுத்தும் வெட்கமா? அன்று வெள்ளி நிறைந்த இரவு. கதகதப்பாகவும் அமைதியாகவும் இருந்தது. குமரப்பாவும் ரஜனியும் ஓர் இரட்டைக் கதிரையில் அமர்ந்திருந்தார்கள். அவருடைய கரம் அவருடைய தோளை அணைத்தபடி இருந்தது. அந்த மாப்பிள்ளை தனது மணப் பெண்ணை உற்றுப் பார்த்தபோது அவர் பூத்த முறுவல் இப்பொழுதும் என் நினைவில் நிற்கிறது. ஆனாலும் குமரப்பா யாழ்ப்பாணத் தளபதி பொறுப்பை வகித்ததால் தமது இளம் மனைவியுடன் அதிக நேரம் செலவிட இயலவில்லை. பாலா, கிரமமாக குமரப்பாவுடன் யாழ்ப்பாணத்துக்குப் போய் வந்து கொண்டிருந்தார். குமரப்பா இல்லாத வேளை, நான் அடிக்கடி அவர்களுடைய குடும்ப வீட்டுக்குச் சென்று ரஜனியைச் சந்திப்பேன். எல்லாமே அமைதியாகவும் குதூகலமாகவும் நடைபெற்றுக் கொண்டிருந்தன. கொடுந்துயர் அவர்களைத் தாக்கும் என்றோ, குமரப்பாவின் உயிரைப் பறிக்கும் என்றோ, ரஜனியின் இதயத்தைச் சிதறடிக்கும் என்றோ எவர் தான் எதிர்பார்த்தார்?.

மாலை ஐந்தரைபோல, நான் ரஜனியைச் சந்திக்கச் சென்றேன். கடற்கரையில் உலாவச் செல்வது என்பது தான் திட்டம். குமரப்பா அப்போது வீட்டில் இருந்தார். ஆறு மணிக்குத் தாம் வெளியே போக இருக்கிறார் எனக் கூறினார். தாம் புறப்படுவதற்கான ஆயத்தம் செய்யப் போவதால், நாம் உலவச் செல்லவேண்டும் என்று அவர் வற்புறுத்தினார். ஆனால், நாம் விரைவாக உலவிவிட்டுத் திரும்பினோம். புதிதாகத் திருமணமான அவர்களைத் தனியே விட்டு நான் கண்ணியமாக அங்கிருந்து அகன்றேன். வழியில் திருகோணமலைத் தளபதி புலேந்திரன் ஒரு பெரிய மோட்டார் சைக்கிளில் வேகமாகச் செல்வதைக் கண்டேன். தாம் ஓட்டும் அந்த வண்டியின் பலமும், தம் முகத்தில் அறையும் காற்றும் அவருக்குத் தெம்பூட்டுவனவாகத் தெரிந்தன. குமரப்பா செல்லும் அதே திக்கில் தான் புலேந்திரனும் செல்கிறார் என்பதும் சில நிமிடங்களில் அவர்கள் சந்திக்கப் போகிறார்கள் என்பதும் எனக்குத் தெரியாது. ஒழுங்கை ஒன்றில் நான் எனது சைக்கிளில் திரும்பும்போது புலேந்திரன் என்னைக் கண்டார். முகமெல்லாம் பல்லாக, பளிச்சென்று சிரித்தபடி, கையை அசைத்த வண்ணம் வீதியால் கடந்து சென்றார். குமரப்பாவின் திருமணத்துக்குச் சில வாரங்கள் முன்னதாகத்தான் புலேந்திரன் திருமணம் புரிந்திருந்தார். தமிழ்நாடு திருப்போரூர்முருகன்கோவிலில்சுபாவை அவர் திருமணம் புரிந்தபோது அந்த வைபவத்தில் நாமும் கலந்து கொண்டோம். இந்தக் கோவிலில் தான் சில ஆண்டுகளுக்கு முன்னதாக பிரபாகரன் திருமணம் நடைபெற்றது.



மறுநாள் பருத்தித்துறைக் கடலில் வைத்து, குமரப்பாவும் புலேந்திரனும், வேறு பதினைந்து போராளிகளும் சென்ற படகை சிறிலங்கா கடற்படை வழிமறித்துப் பிடித்திருப்பதாக பாலா எனக்குத் தெரிவித்தார். பலாலி இராணுவத் தளத்தில், சிறிலங்காவினதும் இந்தியாவினதும் இராணுவப் பாதுகாவலில் அவர்கள் வைக்கப்பட்டு இருந்தார்கள். எனக்கு அது வியப்பாகவும் குழப்பமாகவும் இருந்தது; ஆனால், அவ்வளவு கோபமூட்டவில்லை. பொருட்படுத்தத் தேவையற்ற சம்பவம் இதுவென்றும், விரைவிலேயே அவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்றும் கருதினேன். யாழ்ப்பாணத்தில் நிலைமை அமைதியாகவும் சாதாரணமாகவும் இருந்தது. போர் ஓய்வும் நடைமுறையில் இருந்தது. அமைதிப்படை அமைதியைப் பேண, சிங்களப் படைகள் தங்கள் பாசறைகளில் அடங்கி இருந்தன. அது தவிர இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் கட்டுப்பாடுகளுக்கு அமைவாக இந்தியாவிடம் ஆயுதங்கள் ஒப்படைக்கப்பட்டதை அடுத்து, விடுதலைப் புலிப் போராளிகளுக்குப் பொதுமன்னிப்பும் வழங்கப்பட்டிருந்தது. இப்படியான நிலைமையில், அந்தக் கடல் கைதை அடுத்து பாரதூரமாக ஏதும் நடக்கக் கூடும்என்றுஎவரும்எதிர்பார்க்கவில்லை. குமரப்பாவும், புலேந்திரனும், விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளாக அமைதிப்படை அதிகாரிகளுக்கு நன்கு அறிமுகம் ஆனவர்கள். ஆகவே, அவர்களுக்குத் தீங்கு எதுவும் நேராது இந்தியாக்காரார் பார்த்துக்கொள்வர் என்று நாம் நம்பினோம். அவர்கள் கைது செய்யப்பட்டதன் நோக்கம் இந்திய அதிகாரிகளுக்குத் தெளிவுபடுத்தப் பட்டதும், அவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்று கருதினோம். பதறிப்போன குமரப்பாவின் இளம் மனைவிக்கு, என் மூலமாக இதே விளக்கத்தையே பாலாவழங்கியிருந்தார். ஆனால், பலாலித் தளப் பாதுகாவற்கூடத்துக்கு மறுநாள் சென்றுவிட்டுத் திரும்பும்போது, பாலா கலவரமடைந்தே காணப்பட்டார். துப்பாக்கி நீட்டியபடி சிங்களப் படையினர் மூர்க்கமாகச் சூழ்ந்து நிற்க, குற்றவாளிகளைப் போல அவர்கள் வைக்கப்பட்டிருந்தமை பாலாவைக் கலவரப்படுத்தியிருந்து. கட்டடத்துக்கு வெளியே இந்திய இராணுவ அதிகாரிகளும் ஒரு சிறிய படையணியினரும் தங்கியிருந்தனர். விடுதலைப் புலிப் போராளிகளை விசாரணைக்காகக் கொழும்புக்கு அனுப்பிவைக்க வேண்டும் என்று சிறிலங்கா அரசு கடுமையான பிடிவாதத்தோடு நிற்பதாக இந்திய அமைதிப்படைத் தளபதி ஹர்க்கிரத் சிங், பாலாவிடம் கூறினார். இந்தச் சம்பவங்களின் புதிய திருப்பம் பாலாவுக்கு அதிர்ச்சி அளித்தது. அவர் உடனடியாக இந்திய தூதுவர் டிக்சிற் அவர்களோடு தொடர்பு கொண்டார். தமது இராஜதந்திர வல்லாண்மையைப் பயன்படுத்தி, புலிப் போராளிகளை விடுவிக்க வேண்டும் என்று பாலா கேட்டார். எமது போராளிகளில் சிலர் மூத்த தளபதிகளாகவும் போர்க் கள நாயகர்களாகவும் இருக்கின்றமையால்அவர்களுக்கு ஏதாவது தீங்கு நேரும் பட்சத்தில், விளைவுகள் விபரீதமாக இருக்கும் என்றும் டிக்சிற் அவர்களுக்கு எச்சரிக்கை விடுத்தார். டிக்சிற் அவர்களும் போராளிகளை விடுவிக்க தம்மாலான அனைத்தையும் புரிவார் என்று பாலாவுக்கு உறுதியளித்தார்.

(தொடரும்...)

# அமெ. வெற்றிக் கிண்ணத்தைத் தனதாக்கியது கனேடிய 'செம்பகம்' இளையோர் அணி!

## 15 நாடுகள் கலந்து கொண்ட உதைபந்தாட்டப் போட்டியில்!!



அமெரிக்காவின் மினிசோட்டா மாநிலத்தின் பிலேயின் நகரில் நடை பெற்ற 33 ஆவது அமெரிக்க கோப்பை கால்பந்தாட்டப் போட்டியில் 14 வயது ஆண்கள் பிரிவின் வெள்ளிப் பிரிவின் வெற்றிக் கிண்ணத்தை கனடாவில் இருந்து சென்ற செம்பகம் இளையோர் அணி தனதாக்கி சாதனை படைத்துள்ளது.

அமெரிக்காவின் மினிசோட்டா மாநிலத் தின் பிலேயின் நகரில் 1985 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது தான் இந்த அமெரிக்க கோப்பை கால் பந்தாட்ட வெற்றிக் கிண்ண போட்டிகள்.

33 ஆவது தொடர்வருடமாக நடைபெறும் இந்தப் போட்டிகள் மேற்குலகில் நடைபெறும் பெரும் கால்பந்தாட்ட போட்டியாகும். இந்தப் போட்டிகள் அங்கு அமைந்துள்ள தேசிய விளையாட்டரங்க திடல்களிலேயே நடைபெறுகின்றன. இவ்விளையாட்டுத் திடலில் 54 உதைபந்து விளையாட்டுத் திடல்கள் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

9 - 19 வயது வரை ஆண்கள் பெண்கள் பிரிவுகளாகவும் சில வயதெல்லைகளில் இரண்டு பிரிவுகள் என 38 வெற்றிக் கிண்ணப் போட்டிகள் நடைபெறுகின்றன.

இவ்வருட போட்டிகளில் அமெரிக்காவின் 17 மாநிலங்களில் இருந்தும் 15 நாடுகளில் இருந்தும் 1168 அணிகள் கலந்து கொண்டன. இதில் மொத்தம் 16 ஆயிரம் விளையாட்டு வீரர்கள் கலந்துகொண்டனர்.

3கோடி 30 லட்சம் அமெரிக்க டொலர் வருவாயை ஈட்டும் போட்டியாகக் கருதப்படும் இந்தப்போட்டியில் முதற் தடவையாக 14 வயது ஆண்கள் பிரிவில் கனேடிய தமிழர் விளையாட்டுத்துறையின் செம்பகம் அணியும் கலந்து கொண்டது. (எ)

# டென்மார்க் நகரில் ஜூலை படுகொலை தின நிகழ்வு



இலங்கையில் *1983* ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஜூலை தமிழினப் படுகொலையின் *34* ஆம் ஆண்டு நிறைவையொட்டி கவனவீர்ப்பு நிகழ்வு டென்மார்க்கின் Aarhus நகரில் அண்மையில் இடம்பெற்றது.

டென்மார்க் டெனிஸ் தமிழ் அமைப்புகளின் ஒன்றியத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த கவனவீர்ப்பு நிகழ்வில் தமிழின அழிப்பை எடுத்துரைக்கும் கண்காட்சியும் அது தொடர்பான துண்டுப் பிரசுரங்களும் வழங்கப்பட்டன.

இந்தக் கண்காட்சியை டெனிஸ் மற்றும் வேற்றினத்த வர்களும் மிகவும் ஆர்வத்துடன் பார்வையிட்டுச் சென்றனர். (எ)





# சுவிஸ் விஷ்ணு துர்க்கை அம்மன் தேர்த்திருவிழா

சுவிற்ஸர்லாந்து நாட்டில் உள்ள விஷ்ணு துர்க்கை அம்மன் ஆலயத்தின் தேர் திருவிழா நிகழ்ச்சியில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் பங்கேற்று அம்மனின் அருளைப் பெற்றனர்.

சூரிஸ் விஷ்ணு துர்க்கை அம்மன் ஆலயத்தின் கொடியேற்றும் நிகழ்ச்சி அண்மையில் கோலாகலமாக ஆரம்பிக்கப்பட்டது.

தொடர்ச்சியாக 12 நாள்கள் நடைபெறும் இவ்விழாவின் ஒரு பகுதியாக கடந்த வாரம் தேர்த் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு சுவிஸின் பல மாநிலங்களில் இருந்து ஆயிரக்கணக்கான தமிழர்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர். (எ)

# பிரான்ஸில் அரியாலை ஐக்கிய கழகம் நடத்திய கிரிக்கெட் போட்டி



பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுத் தமிழர் விளையாட்டுத் துறையின் ஆதரவில் அரியாலை ஐக்கிய கழகம் அமரர்கள் சுப்பிரமணியம் கௌசிகன், சுப்பிரமணியம் இதயராஜ், பஞ்சரத்தினம் ஜனார்த்தனன் ஆகியோரின் நினைவாக 5 ஆவது தடவையாக நடத்திய கிரிக்கெட் போட்டி கடந்த 30 ஆம் திகதி Chateau de vincennes பகுதியில் விறுவிறுப்பாக இடம்பெற்றது.

பிரான்ஸின் 16 கழகங்கள் பங்குபற்றிய இந்தப் போட்டியில், முதலிடத்தை ஸ்கந்தா விளையாட்டுக் கழகமும், இரண்டாம் இடத்தை றொக் பைற்றர்ஸ் விளையாட்டுக்கழகமும், மூன்றாம் இடத்தைப் பாடும் மீன் விளையாட்டுக் கழகமும் பெற்றுக் கொண்டன.

காலைக்கதிர் Kalaikkathir



# லொத்தர் சீட்டு தரகுப் பணம் தரத் தவறினால் நாடு தழுவிய ரீதியில் தொழிற்சங்கப் போராட்டம்

## முகவர்கள் சங்கம் நிதி அமைச்சுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 05

லொத்தர் சீட்டொன்றுக்கு தங்களுக்கு வழங்க வேண்டிய 50 சத தரகுப்பணம் (கமிஷன்) தரப்படாவிட்டால் மேலதிக அறிவித்தல்கள் எதுவுமின்றி நாடு தழுவிய தொழிற்சங்கப் போராட்டம் ஒன்றில் ஈடுபடப்போகின்றோம் என இலங்கை லொத்தர் முகவர்கள் சங்கம் நிதி அமைச்சுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் அந்தச் சங்கத்தின் பொதுச் செயலாளர் பீ.எஸ்.எஸ்.மதரசிங்க தெரிவித்தவை வருமாறு:-

லொத்தர் சீட்டொன்றுக்கு எங்களுக்கு 50 சதம் கமிஷனாக வழங்கப்படும் என்று 2015இல் உறுதியளிக்கப்பட்ட போதும் இதுவரை அது கிடைக்கவில்லை. இது தொடர்பில் நாங்கள் இவ்வருடம் ஜனவரி மாதம் நிதி அமைச்சின் செயலாளரைச் சந்தித்துப் பேசிய போது அவர் இதை நிறைவேற்றுவதாக வாக்குறுதியளித்தார். எனினும், அவரது வாக்குறுதியும் நிறைவேற்றப்படவில்லை.

பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் நாங்கள் இந்த வியாபாரத்தைச் செய்து வருகின்றோம். எங்களது விற்பனைக் கூடங்களை அகற்றப்போவதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை மிரட்டிக் கொண்டிருக்கின்றது.

கடந்த இரண்டு வருடங்களில் எத்தனையோ புதுப்புது டிக்கட்டுகளை லொத்தர் சபை அறிமுகம் செய்துள்ளது. அவற்றால் முன்னைவிட பல மடங்கு வருமானம் அவர்களுக்குக் கிடைத்தபோதிலும் எங்களுக்கு வழங்க வேண்டிய அற்ப சொற்ப கமிஷனை வழங்க மனம் வரவில்லை.

எனவே, எங்களது கோரிக்கை நிறைவேறாவிட்டால் எதிர்வரும் செப்ரெம்பர் முதலாம் திகதி முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவோம். -என்றார்.

இது தொடர்பில் தேசிய லொத்தர் சபையின் தலைவி திருமதி ஷைமிலா பெர்ணாண்டோ கருத்துத் தெரிவிக்கையில்,

'லொத்தர் முகவர்களின் வேலைநிறுத்தம் பற்றி இதுவரை தங்களுக்குத் தகவல் வரவில்லை. அவர்களுக்கு 50 சத கமிஷன் வழங்குவோம் என ஒருபோதும் நாங்கள் வாக்குறுதி கொடுக்கவில்லை' என்று கூறினார். (வ)

## தங்க பிஸ்கட்டுகளுடன் பொலிஸ் கான்ஸ்டபிள்கள் இருவர் கைது!

ஒரு கோடி 4 லட்சம் ரூபா பெறுமதியான 16 தங்க பிஸ்கட்டுக்களை பொலிஸூக்கு அறிவிக்காமல் தம்மகத்தே வைத்திருந்த இரு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் மன்னார் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் பேசாலை கடல் பகுதியில் இருந்து இந்தியாவுக்கு கொண்டு செல்லப்படவிருந்த அந்த 16 தங்க பிஸ்கட்டுகள் தொடர்பாக பேசாலை பொலிஸ் கான்ஸ்டபிள் இருவருக்கு தகவல் கிடைத்துள்ளது.

அதனைத்தொடர்ந்து பொலிஸ் இரகசியப் பிரிவினர் என்று தம்மை அறிமுகப்படுத்திக் கொண்ட பொலிஸார் தங்க பிஸ் கட்டுகளை பறிமுதல் செய்தனர்.

# நிலையான அபிவிருத்திக் கட்டமைப்பின் கீழ் ஐ.நாவுடன் இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்து



கொழும்பு, ஓக. 05

ஐக்கிய நாடுகளின் நிலையான அபிவிருத்திக் கட்டமைப்பின் கீழ், 2018ஆம் ஆண்டு முதல் 2022ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியில் இலங்கையின் நீண்டகால அபிவிருத்திக்கு உதவிகளை வழங்கும் வகையிலான ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தம், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்களுக்கான பிரதி அமைச்சர் ஹர்ஷ டி சில்வா முன்னிலையில், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சின் செயலாளர் எம்.ஐ.எம்.ரபீக் மற்றும் இலங்கைக்கான ஐக்கிய நாடுகளின் வதிவிடப் பிரதிநிதி ஊனா மெக்விலி ஆகியோருக்கு இடையே கைச்சாத்திடப்பட்டுள்ளது.

ஐ.நாவின் இவ்வேலைத் திட்டத்தின் கீழ், நாட்டு மக்களிடையே காணப்படும் ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்கான தேசிய முயற்சிகளுக்கு ஆதரவு வழங்கப்படுவதுடன், அனைத்து மக்களது வாழ்விலும் நேர் மறையான மாற்றம் ஏற்படுத்தப்படும் என்பது சுட்டிக்காட்டத்தக்கது. (எ)

## 'புதுசு' — தொகுப்பு அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக. 05

'புதுசு' - தொகுப்பு அறிமுகம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நல்லூர் சங்கிலியன் தோப்பு யூரோவில் கேட்போர் கூடத்தில் எழுத்தாளர் சி.ரமேஷ் தலைமையில் இடம்பெறும்.

நிகழ்வில் எழுத்தாளர்கள் அ.யேசுராசா, தி.செல்வமனோகரன் கருத்துரைகள் வழங்குவர். (இ)

## நல்லூரில் நாளைமுதல் சின்மயா மிஷனின் ஆன்மீக நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஓக. 05

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்தத் திருவிழாவை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷனால் ஆன்மிக நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன.

நாளை ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் 21 ஆம் திகதி திங்கட்கிழமை வரை இரவு 7.15 மணி தொடக்கம் 8 மணிவரை சின்மயா மிஷன் மண்டபத்தில் பல்வேறு தலைப்புகளில் நிகழ்வுகள் இடம்பெறும்

'எனது மனம் எனது பலம்' என்னும் கருப்பொருளிலான கண்காட்சியும் மாலை 4 மணி தொடக்கம் 9 மணி வரை சின்மயா மிஷனில் இடம்பெறும்.

இதேவேளை, திருவிழாக் காலத்தில் முற்பகல் 10.45 மணி தொடக்கம் 11.45 மணி வரை சுவாமி உள்வீதி உலா வரும் போதும், மாலை 6 மணி தொடக்கம் 7 மணி வரை சுவாமி வெளிவீதி உலா வரும்போதும் ஆராதனைகள் இடம்பெறும். (ச)









ஐக்கிய இராஜியத்தின் யாழ்.முஸ்லிம் சங்கத்தினரால் கடந்த முதலாம் திகதியிலிருந்து இஸ்லாமிய கலை, கலாசார பாரம்பரிய, விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. நாளை மறுதினம் 7 ஆம் திகதி வரை இந்த நிகழ்வுகள் தொடர்ந்து நடைபெறவுள்ளன. யாழ்.ஒஸ்மானியா மஹ்மூத் மண்டபத்தில் முன்பள்ளிச் சிறார்கள், மதுரசா மாணவர்கள், அஹதிய்யா மாணவர்களுக்கான கலாசார நிகழ்வும், யாழ்.ஜின்னா மைதானத்தில் பல்வேறு விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டிகளும் இடம்பெறுகின்றன. இறுதி நிகழ்வாக மண்கும்பான் வெள்ளைக் கடற்கரை பள்ளிவாசலில் விருந்துபசாரமும் இடம்பெறவுள்ளது. (இ-19)

காலைக்கதிர் Kalaikkathir



# தமிழக அரசைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்; மாவட்ட நிர்வாகிகளுக்கு அவசர அழைப்பு!

சென்னையில் எதிர்வரும் 10 ஆம் திகதி தமிழக அரசை கண்டித்து ஓ.பன்னீர் செல்வம் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது. நேற்று முன்தினம் தமிழகம் முழுவதும் உள்ள மாவட்ட நிர்வாகிகளுக்கு சென்னை வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி தலைமையில் அ.தி.மு.க. அம்மா அணியாகவும், முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தலைமையில் அ.தி.மு.க. புரட்சித் தலைவி அம்மா அணியாகவும் அ.தி.மு.க. தொண்டர்கள் செயற்பட்டு வருகிறார்கள்.

இதன் காரணமாக இரட்டை இலை சின்னம் முடக்கப்பட்டது. அதனை மீட்க இரு அணிகளும் போட்டி போட்டு ஆவணங்களைத் தேர்தல் திணைக்களத்தில் தாக்கல் செய்துள்ளன. இரு அணிகளும் ஒன்று சேர்ந்தால்தான் மீண்டும் இரட்டை இலை கிடைக்கக் கூடிய சூழல் உள்ளது.

இதனால் எடப்பாடி பழனிச்சாமி அணியும், ஓ.பன்னீர் செல்வம் அணியும் இணைவதற்கான பேச்சு நடத்த முடிவு செய்யப்பட்டது. ஆனால், ஓ.பி.எஸ். அணியின் இரண்டு பிரதான கோரிக்கைகளை எடப்பாடி பழனிச்சாமி அணியினர் ஏற்காததால் பேச்சில் சுமுக முடிவு எட்டப்படவில்லை.

கடந்த 4 மாதங்களாக அணிகள் இணைப்பு குறித்து பல்வேறு தகவல்கள் வெளிவந்த போதிலும் இரு அணிகளும் தொடர்ந்து தனித்து செயற்பட்டு வருகின்றன. இரு அணிகளும் இணைய வாய்ப்பு இல்லை என்று சமீபத்தில் ஓ.பன்னீர்ச்செல்வம் தெரிவித்தார்.

## அதிரடியாகக் களத்தில் பன்னீர்!!



இந்த நிலையில் ஓ.பி.எஸ்.இன் அ.தி.மு.க. புரட்சித்தலைவி அம்மா அணியினர் எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அரசை எதிர்த்து போராட்டத்தை நடத்தப் போவதாக அறிவித்துள்ளனர். குடிதண்ணீர்ப் பிரச்சினை, டெங்கு காய்ச்சல் உள்ளிட்ட மக்கள் பிரச்சினையை முன்வைத்து தமிழகம் முழுவதும் ஆர்ப்பாட்டம் நடத்தத் திட்டமிட்டுள்ளனர்.

அதன் முதல் கட்டமாக சென்னையில் வருகிற 10 ஆம் திகதி தமிழக அரசை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

அவை தலைவர் மதுசூதனன் தலைமையில் நடக்கும் ஆர்ப்பாட்டத்துக்கு ஓ.பன்னீர செல்வம் முன்னிலை வகிக்கின்றார்.

ஓ.பன்னீர்செல்வம் அணியினர் சென்னையில் போராட்டம் நடத்தும் இடம் இன்னும் முடிவாகவில்லை. சேப்பாக்கம் விருந்தினர் மாளிகை, வள்ளுவர் கோட்டம் ஆகிய இரு இடங்களில் ஏதாவது ஒன்றில் போராட்டம் நடத்த அனுமதி கேட்டுப் பொலிஸாரிடம் கடிதம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், எந்த இடம் அனுமதிக்கப்படும் என்று தெரியவில்லை.

தமிழக அரசை கண்டித்து இதுவரை ஓ.பி.எஸ். பல்வேறு கருத்துக்களை வெளியிட்டுள்ளார். ஆனால், தற்போது தான் முதன் முதலாக தமிழக அரசை எதிர்த்துக் கண்டன ஆர்ப்பாட்டத்தை ஓ.பி.எஸ். அணியினர் கையில் எடுத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ப)



# டில்லியில் தமிழக விவசாயிகள் 19ஆவது நாளாகப் போராட்டம்

கடன் தள்ளுபடி, காவிரி மேலாண்மைத் திணைக்களம் அமைத்தல் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்கத் தலைவர் அய்யாக்கண்ணு தலைமையில் டில்லி ஜந்தர் மந்தர் பகுதியில் தமிழக விவசாயிகள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்த போராட்டம் நேற்று 19ஆவது நாளாக நீடித்தது. இவர்களுடன் புதுச்சேரி மாநில விவசாயிகள் சிலரும் இணைந்துள்ளனர். ஒவ்வொரு நாளும் நூதன முறையில் போராட்டம் நடத்தி வரும் அவர்களில் சிலர், நேற்று கைகளை தரையில் ஊன்றி, தங்களை கால்நடைகளைப் போன்று பாவனை செய்தவாறு ஜந்தர் மந்தர் வீதியில் அங்குமிங்கும் சென்றனர்.

அவர்களது பின்னால், அய்யாக்கண்ணு உள்ளிட்டோர் கோஷமிட்டவாறே நடந்து சென்றனர். அய்யாக்கண்ணு தனது கைகளில் தற்கொலை செய்துகொண்ட விவசாயிகளின் இரு மண்டை ஓடுகளை ஏந்தியபடி சென்றார்.

கழுத்தில் எலும்புகளை மாலையாக தொங்க விட்டிருந்தார். மத்திய அரசு, விவசாயிகளின் கோரிக்கைகளை ஏற்காமல் விவசாயிகளை கால்நடைகளாக அலைய வைத்துவிட்டது, என்று இந்த போராட்டத்துக்கு அய்யாக்கண்ணு விளக்கம் அளித்துள்ளார்.

# இனி ஒரு சிலை செய்வோம் அதை எந்நாளும் காப்போம்:



## கமலஹாசன் தெரிவிப்பு

மெரீனாவில் இருந்து சிவாஜி கணேசன் சிலை அகற்றப்பட்டதற்கு பல்வேறு அரசியல் பிரமுகர்கள் மற்றும் நடிகர், நடிகையர் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். இந்த நிலையில் நடிகர் கமல்ஹாசன் சிவாஜி சிலை அகற்றப்பட்டது குறித்து ட்விட்டரில் கருத்துத் தெரிவித்துள்ளார்.

அதில் சிவாஜி, ரசிகர் மனதிலும் நடிக்க நினைத்த தமிழன் மனதிலும் பதிந்தவர். இனி ஒரு சிலை செய்வோம் அதை எந்நாளும் காப்போம் அரசுக்கு அப்பால் என் அப்பா என்று கமலஹாசன் பதிவிட்டுள்ளார்.

உலகம் முழுக்க வாழும் தமிழர்களின் மனதில் தம் நடிப்பால் நிலையான இடத்தைப் பிடித்தவர் நடிகர் திலகம் சிவாஜி கணேசன். நடிப்புக்கு இலக்கணம் வகுத்த சிவாஜி கணேசன் கடந்த 2001 ஆம் ஆண்டு மரணம் அடைந்தார்.

திரை உலகில் சிவாஜி கணேசன் செய்த மகத்தான சாதனைகளையும், சேவைகளையும் போற்றும் வகையில் அவருக்கு சென்னையில் மணிமண்டபம் கட்டப்படும், சிலை நிறுவப்படும் என்று தமிழக அரசு அறிவித்தது. அதன்படி கடந்த 2006 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியின் போது சிவாஜி கணேசனுக்கு சென்னை மெரீனா கடற்கரையில் முழு உருவ வெண்கலச் சிலை நிறுவப்பட்டது.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் சிவாஜி சிலையை இரவோடு இரவாக சிவாஜியின் சிலை மணிமண்டபத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு அடையாறில் உள்ள சிவாஜி கணேசன் மணி மண்டபத்தில் நடிகர் திலகம் சிலை பாதுகாப்பாக நிறுவப்பட்டுள்ளது.

விரைவில் மணிமண்டபம் திறக்கப்பட்டு, இந்த சிலையையும் திறக்க தமிழக அரசு முடிவு செய்துள்ளது. (ப)

# இலங்கைச் சிறைகளில் உணவு இன்றித் தவித்தோம்!



## தமிழகம் திரும்பிய மீனவர்கள் தெரிவிப்பு

இலங்கைச் சிறைகளில் உணவு கிடைக்காமல் தவித்தோம் என்று நேற்று முன்தினம் காரைக்கால் திரும்பிய தமிழக மீனவர்கள் தெரிவித்தனர் எனத் தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த மே , ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் கடலுக்கு மீன்பிடிக்கச்சென்ற காரைக்கால் மற்றும் தமிழக மீனவர்கள் 92 பேர் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு இலங்கை சிறைகளில் அடைக்கப்பட்டனர். அவர்களது படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டன. அதைத் தொடர்ந்து மீனவர்களை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று புதுச்சேரி மற்றும் தமிழக அரசின் சார்பில் மத்திய அரசுக்குத் தொடர்ந்து கோரிக்கை வைக்கப்பட்டது.

மத்திய அரசும், இந்திய தூதரகம் மூலம் மீனவர்களை விடுவிக்க நட வடிக்கை மேற்கொண்டது. அதைத் தொடர்ந்து இலங்கை சிறைகளில் அடைக்கப்பட்டு இருந்த மீனவர்களில் முதற் கட்டமாக 77 பேரை நல்லெண்ண அடிப்படையில் விடுவிக்க இலங்கை அரசு பரிந்துரை செய்தது.

அதை ஏற்று மன்னார் மற்றும் ஊர்காவற்றுறை நீதிமன்றங்கள் 77 மீனவர்களையும் விடுதலை செய்து கடந்த ஜூலை 28 ஆம் திகதியன்று உத்தரவிட்டது. அதைத் தொடர்ந்து வவுனியாசிறையில் அடைக்கப்பட்டிருந்த 11 மீனவர்களும், யாழ்ப்பாணம் சிறையில் அடைக்கப்பட்டிருந்த 66 மீனவர்களும் விடுதலை செய்யப்பட்டனர்.

காரைக்கால் திரும்பிய மீனவர்கள் கூறியவை வருமாறு:-

நாங்கள் இந்திய எல்லை பகுதியில் மீன் பிடித்துக்கொண்டிருந்தோம். அப்போது இலங்கை கடற்படையினர் இந்திய எல்லைக்குள் புகுந்து எங்களை கைது செய்தனர். ஆனால், அவர்கள் நாங்கள் எல்லை தாண்டி வந்து மீன் பிடித்தோம் எனக் கூறி எங்களைக் கைது செய்கின்றனர் என அறிவித்தனர். நாங்கள் இலங்கை சிறையில் இருந்த போது உணவு கிடைக்காமல் தவித்தோம். எங்களுக்கு சரி யான முறையில் உணவு வழங் கப்படவில்லை.- என்று தெரி வித்துள்ளனர். (ப)

# அமெரிக்கா விதித்த புதிய தடை பொருளாதாரப் போருக்கு சமம்!

ரஷ்யாவுக்கு எதிராக அமெரிக்கா விதித்த பொருளாதாரத் தடை பொருளாதாரப் போருக்கு சமமானது.

-இவ்வாறு ரஷ்ய பிரதமர் மெட்வடேவ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ரஷ்யா தலையிட்டது என்ற குற்றச்சாட்டின் பேரில், அந்த நாட்டின் மீது புதிய பொருளாதாரத் தடைகளை விதிக்க அமெரிக்க நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. நாடாளுமன்றம் நிறைவேற்றிய அந்தத் தீர்மானத்தை ஜனாதிபதி நிராகரிக்கவோ, திருத்தவோ முடியாது என்ற அம்சத்துடன் அது நிறைவேற்றப்பட்டது. ஜனாதிபதி ட்ரம்ப் அதனை ஏற்றுக் கையெழுத்திட்டார்.

இந்த நிலையில், இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே ரஷ்யப் பிரதமர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

புதிய ஜனாதிபதியின் கீழ் அமெரிக்காவுடனான உறவுகள் மேம்படும் என்று நம்பினோம். ஆனால், அந்த எதிர்பார்ப்பு நிறைவேறப்போவதில்லை. ரஷ்யாவுக்கு எதிரான இந்தத் தடை நடவடிக்கைகளால் மோசமான பின் விளைவுகள் ஏற்படும் என்று எச்சரிக்க விரும்புகிறேன். இந்தத் தடை மூலம் ரஷ்யாவில் முழு வீச்சில் பொருளாதாரப் போர் தொடுக்கப்பட்டுள்ளது .

மேலும், இந்தப் பொருளாதாரத் தடைச் சட்டத்தில் ஜனாதிபதிக்கு உள்ள நிராகரிப்பு அதிகாரம் பறிக்கப்பட்டிருக்கின்றமை வேதனைக்குரியது. அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தனது தனி அதிகார உரிமைகளை நாடாளுமன்றத்திடம் இழந்துவிட்டார். அமெரிக்க ஜனாதிபதி இழிவுபடும் விதமாக, அவரது அதிகார வலிமை நாடாளுமன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றமை ட்ரம்ப் அரசின் பலவீனமான நிலையைக் காட்டுகின்றது.-என்றார்.

இதேவேளை, ரஷ்யா உட்பட 3 நாடுகளுக்கான பொருளாதாரத் தடைத் தீர்மானத்தை ஏற்றுக் கையெழுத்திட்ட பின்னர் ட்ரம்ப் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-



## ரஷ்ய பிரதமர் தெரிவிப்பு

வெளியுறவுத்துறை விவகாரங்களில் அமெரிக்க ஜனாதிபதிக்கு இறுதி அதிகாரங்களை எமது அரசமைப்பை இயற்றியவர்கள் அளித்துள்ளனர்.

இந்தத் தீர்மானம் அந்த அதிகாரங்களைப் பறிக்கிறது. இது மிகவும் பலவீனமானது; இதனை நிறைவேற்றுவதற்கு அவசரம் காட்டியமையால் அரசமைப்புக்குப் புறம்பான பிரிவுகள் இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அதன் மூலம், ஜனாதிபதி என்ற முறையிலும் ரஷ்யாவுடன் பேச்சு நடத்தித் தீர்வு காண முடியாத நிலை எழுந்திருக்கிறது.

பேரங்களும் பேச்சுக்களும் நடத்தித்தான் நான் பெரும் கோடீஸ்வரன் ஆனேன். அமெரிக்க நாடாளுமன்றம் செய்ய முடியாததை நான் செய்வேன். வெளி நாடுகளுடன் எனது பாணியில் பேச்சு நடத்தி அமெரிக்காவுக்குச் சாதகமான சூழலை ஏற்படுத்துவேன். -என்று அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (ச)

# காதலரை தற்கொலைக்கு தூண்டிய பெண்ணுக்கு சிறை!

அமெரிக்காவில் காதலனைத் தற்கொலைக் குத் தூண்டும் வகையில் குறுஞ்செய்திகள் அனுப்பிய பெண்ணுக்கு 15 மாதம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் மசாசூசெட்ஸ் பகுதியை சேர்ந்தவர் கான்ராட் ரோய். இவரது காதலி மிச்செலி கார்டர் (வயது -20).

இவரது காதலர் கான்ராட் ரோய், நச்சு வாயுவைப் பயன்படுத்தி தற்கொலை செய்து கொண்டார். இந்தச் சம்பவம் கான்ராட் ரோய் குடும்பத்தினரைக் கடும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது. குடும்பத்தினர் தற்கொலைக்கான காரணத்தை ஆராய்ந்தனர்.

அப்போது மிச்செலி கார்டர் தனது காதலர் கான்ராட் ரோய்க்கு தற்கொலையை தூண்டும் வகையில் குறுஞ்செய்திகள் அனுப்பியிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

அந்த குறுஞ்செய்தியில் அவர் எவ்வாறு தற்கொலை செய்து இறக்கலாம் என்ற தகவல்களைத் தன் காதலருக்கு அனுப்பி உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# ஏமனில் தற்கொலைத் தாக்குதல்; 6 படையினர் உடல் சிதறிச் சாவு!

சனா, ஓக. 05

ஏமனில் பயங்கரவாதிகள் மேற்கொண்ட தற்கொலைத் தாக்குதலில் பாதுகாப்புப் படையினர் 6 பேர் உயிரிழந்தனர்.

ஏமன் நாட்டின் ஷாப்வா மாகாணத்தில் அமைந்துள்ள பாதுகாப்புப் படையினரின் சோதனைச் சாவடிக்கு அருகிலேயே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இந்தத் தாக்குதலை அல்குவைதா பயங்கரவாத இயக்கத்தின் ஆதரவு பெற்ற பயங்கரவாதிகளே நடத்தி உள்ளனர் என அந்த நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் தாக்குதலை அடுத்து அந்தப் பகுதி மக்களிடையே பதற்றம் அதிகரித்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.



ஏமன் தெற்கு மாகாணங்களில் அல்குவைதா பயங்கரவாதிகள் மீண்டும் தங்கள் தாக்குதல் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தத் தொடங்கியுள்ளனர். சவுதி அரேபியா தலைமையிலான கூட்டுப் படைகள் ஏமனில் உள்ள அல்குவைதா மற்றும் ஹூதி பயங்கரவாதிகளுக்கு எதிராக நடத்தி வரும் தாக்குதல்களில் இதுவரை 8 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# எயிட்ஸ் தடுப்பு மருந்து இங்கிலாந்தில் விற்பனை!

எயிட்ஸ் நோயைத் தடுப்பதற்கான மருந்து தொடர்பில் பிரித்தானிய உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்டுவந்த வழக்குநிறைவுபெற்றுள்ளது.

இந்நிலையில், இங்கிலாந்து பொதுச் சுகாதார சேவை நிலையங்களில் இந்த மருந்தை எதிர்வரும் காலங்களில் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுச் சுகாதார சேவை நிலையத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எச்.ஐ.வி. பாதிப்புக்குள்ளானசுமார் 10 ஆயிரம் பேருக்குச் சிகிச்சை அளிப்பதற்கு போதுமான அளவு மருந்துகள் தற்போது உள்ளன என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.


எச்.ஐ.வி. தடுப்பு மருந்துக்கான விலைகள், 30 வில்லைகளுக்கு 355.73 பவுண்ட் என பொதுச் சுகாதார சேவையால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்த மருந்து ஏற்கனவே ஸ்கொட்லாந்தில் விற்பனையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# இங்கிலாந்தில் மருத்துவர் மீது 118 பாலியல் குற்றச்சாட்டுகள்!

இங்கிலாந்து நாட்டில் வசித்து வரும் இந்திய வம்சாவளி மருத்துவரான மணிஷ் ஷா மீது 118 பாலியல் குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என லண்டன் மாநகரப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர் மீது சுமத்தப்பட்டுள்ள பாலியல் குற்றச்சாட்டுடன் தொடர்புடைய சம்பவங்கள் 2004 ஆம் ஆண்டு ஜூன் மாதத்துக்கும், 2013 ஆம் ஆண்டு ஜூலை மாதத்துக்கும் இடையே நடந்துள்ளன. இவரால் 54 பேர் பாதிப்புக்குள்ளாகி உள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.



# டுபாய் ஒளிக்கோபுரத்தில் நேற்றுத் திடீர் தீ விபத்து!

டுபாயில் உள்ள 79 மாடிகள் கொண்ட உயரமான கட்டடங்களில் ஒன்றான ஒளிக்கோபுரத்தில் (Torch tower) நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

டுபாயில் உள்ள மெரினா பகுதியில் சுமார் ஆயிரத்து 105 அடி உயரத்தில் இந்தக் கட்டடம் அமைந்துள்ளது. இந்த உலகில் மிகவும் உயரமான கட்டடங்களில் ஒன்றாகும்.

கட்டடத்தின் 9 ஆவது மாடியில் பற்றிய தீ, தொடர்ந்து எரிந்து அடுத்தடுத்து பரவியது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீ விபத்தில் ஏற்பட்ட சேதம் தொடர்பில் தகவல் எதுவும் இதுவரை வெளியாகவில்லை என என முதல் கட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் கட்டடம் கடந்த 2011ஆம் ஆண்டில் திறக்கப்பட்டது. இங்கு ஏற்கனவே 2015 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் தீ விபத்து ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

சிட்டி ஓபன் டென்னிஸ்:

## நடப்பு சம்பியனை வீழ்த்தி யூகி பாம்ப்ரி அசத்தல்



வொஷிங்டனில் நடைபெற்றுவரும்சிட்டி ஓபன்டென்னிஸ் தொடரில் 6ஆம் நிலை வீரரான காயல் மோன்பில்ஸ் ஐ வீழ்த்தி யூகி பாம்ப்ரி அசத்தியுள்ளார்.

அமெரிக்காவின்வொஷிங்டனில் சிட்டி ஓபன் டென்னிஸ் தொடர்நடைபெற்று வருகிறது. இதன் 2ஆவது சுற்றில் உலகத் தரவரிசையில் 200 ஆவது இடத்தில் இருக்கும் இந்தியாவின் யூகி பாம்ப்ரி, 22ஆவது இடத்தில் இருக்கும் பிரான்ஸ் வீரர் காயல் மோன்பில்ஸ் ஐ எதிர்கொண்டார்.

இந்தத் தொடரின் நடப்பு சம்பியனும், 6 ஆம் தரநிலை வீரருமானகாயல்மோன்பில்ஸூக்கு எதிராக தொடக்கம் முதலே பாம்ப்ரி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வந்தார். முதல் செட்டை 6:3 எனக் கைப்பற்றினார். ஆனால், 2ஆவது செட்டை 4:6 என இழந்தார். என்றாலும் சுதாகரித்துக்கொண்ட யூகி பாம்ப்ரி 3ஆவது செட்டை 7:5 எனக் கைப்பற்றி காயல் மோன்பில்ஸூக்கு அதிர்ச்சி தோல்வி கொடுத்தார்.

இந்த வெற்றியின் மூலம் யூகி பாம்ப்ரி காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



# ஹத்துருசிங்க இலங்கை அணிக்கல்லர் 2019 வரை பங்களாதேஷ் அணிக்கே!

இலங்கை அணியின் முன்னாள் வீரரும், பங்களாதேஷ் அணியின் பிரதான பயிற்சிவிப்பாளராகத் தற்போது கடமையாற்றி வருபவருமான சந்திக ஹத்துருசிங்க, எதிர்வரும் 2019ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ணப் போட்டிகள் வரை பங்களாதேஷ் அணியின் பிரதான பயிற்றுனராக கடமையாற்றவுள்ளார் என உறுதிப்படுத்தியுள்ளார்.

இம்மாத இறுதியில் ஆஸ்திரேலிய அணி, பங்களாதேஷில்சுற்றுப்பயணம்மேற்கொண்டு 2 டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ளது. இந்நிலையில் குறித்த தொடரில் பங்கேற்கவுள்ள 20 இளம் வீரர்க ளைக் கொண்ட பங்களாதேஷ் அணி வீரர்க ளுக்கான பயிற்சி முகாம் தற்போது டாக்காவில் நடைபெற்று வருகின்றது.


இதில், நேற்றுமுன்தினம் நடைபெற்ற பயிற்சிகளின் பின்னர் இலங்கை அணியின் பயிற்றுவிப்பாளராக பதவியேற்பது தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு சந்திக ஹத்துருசிங்க கருத்து வெளியிடுகையில், அயராத முயற்சி மற்றும் வீரர்களின் அர்ப்பணிப்பால் தற்போது எமது அணி சிறந்த நிலையில் உள்ளது. உலகின் பிரபல அணிகளுக்கு எதிராக நாங்கள் வெற்றிகளைப் பெற்றோம். அதிலும் குறிப்பாக டெஸ்ட் கிரிக்கெட்டில் நாம் முன்னேற்றம் கண்டுள்ளோம். எமது அடுத்த இலக்கு ஆஸ்திரேலிய அணியுடனான டெஸ்ட் தொடரை வெல்வதாகும்.

அதன் பிறகு தென்னாபிரிக்க சுற்றுப் பயணத்தில் எமது அணி சிறப்பாக விளையாடுவதற்கும் நாம் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம். எனவே, அணியில் உள்ள சிரேஷ்ட மற்றும் இளம் வீரர்களுடன் தொடர்ந்து கடமையாற்றுவதால் அணியை மேலும் வெற்றிப் பாதைக்குக் கொண்டு செல்ல முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. உலக கிரிக்கெட்டில் தற்போது பயிற்றுவிப்பாளர் பதவிக்கு அதிக கேள்வி நிலவி வருகின்றது. ஆனாலும், பங்களாதேஷ் அணியுடனான எனது சேவை 2019ஆம் ஆண்டு வரை தொடரும் எனவும் தெரிவித்துள்ளார்.

# காலிறுதியில் பிரணாய் சவுரப்

நியூஸிலாந்தில் உள்ள ஒக்லாந்து நகரில் நியூஸிலாந்து கிராண்ட் பிரிக்ஸ் கோல்ட் பட்மிண்டன்போட்டிகள்நடந்து வருகின்றன. இதில் நேற்று முன்தினம் நடந்த காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில், இந்திய வீரரான பிரணாய், ஹொங்கொங்கின் வீ நானை எதிர்த்து ஆடினார். இப்போட்டியில் பிரணாய் 21:18, 21:19 என்ற நேர் செட்களில் வெற்றி பெற்றார். காலிறுதிப் போட்டியில் சீன தைபேயைச் சேர்ந்த 11ஆம் நிலை வீரரான லின் யு சின்னை எதிர்த்து பிரணாய் ஆடவுள்ளார்.

நேற்று நடந்த மற்றொரு போட்டியில்இந்திய வீரர்களான சவுரப் வர்மாவும், பாருப்பள்ளி காஷ்யப்பும் மோதினர். இப்போட்டியில் சவுரப் வர்மா, 21:18, 13:21, 21:16 என்ற செட்கணக்கில் வெற்றிபெற்றுள்ளார்.



# யாழ்.பாரதி பாலர் கல்விப் பூங்கா சிறார்களின் விளையாட்டு விழா 2017







யாழ்.மானிப்பாய் பாரதி பாலர் பாடசாலை கல்விப் பூங்கா சிறார்களின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா கடந்த திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் பாரதி சனசமூக நிலையத்தலைவர் கா. யோகலிங்கம் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட வட மாகாண சபையின் உறுப்பினர் என். விந்தன் கனகரட்ணம் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தார்.

மேலும், இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக



மானிப்பாய் வலி. தென். மேற்கு பிரதேசசபை முன்னாள் தவிசாளர் யு. ஜெபநேசன், ஆனந்த வைரவ ஆலய குரு கா. இராஜேஸ்வரக் குருக்கள், யாழ். வர்த்தக வேளாண்மை தொழில்துறை நிறுவுனர் தேவமணி செல்வராஜா, ஜே138 கிராம உத்தியோகத்தர் ஆ.அருணன், ஜே/139 கிராம உத்தியோகத்தர் திருமதி ரி. அனுசலா, ஜே/138பொருளாதார உத்தியோகத்தர் ஆ.செனீரா, முன்னாள்சிறுவர்மேம்பாட்டு உத்தியோகத்தர் ஆ. பத்மராஜ், முன்பள்ளி இணைப்பாளர் யோ.கேமநளினி மற்றும் ஜே/138ஓய்வுபெற்ற குடும்ப நல உத்தியோகத்தர் து. மல்லிகாதேவி ஆகியோரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.



# ரவி சாஸ்திரி உலகக் கோப்பையை வெல்ல வாழ்த்துக்கள்! சவுரவ் கங்குலி சூசகம்

20 ஆண்டுகள் ஆடிய பெருந்தலைகள் சாதிக்காததை கோஹ்லி தலைமையில் குறுகிய காலத்தில் சாதித்து வருகிறோம் என்று பயிற்சியாளர் ரவிசாஸ்திரி தெரிவித்துள்ளார்.

இது பற்றி முன்னாள் இந்திய வீரர் கங்குலி கூறும்போது:

உள்ளபடியே கூற வேண்டுமெனில், ரவிசாஸ்திரி கருத்து குறித்து நான் கூறுவதற்கு ஒன்றுமில்லை. அவருக்கு வாழ்த்துக்களைக் கூறுகின்றேன். 2019 உலகக் கோப்பை வரை அவருக்கு சில பணிகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவர் கோப்பையை வென்று தன் பணியை செவ்வனே முடிப்பார் என்ற நம்பிக்கை உள்ளது.

ஆனாலும், பாகிஸ்தானுக்கு எதிராக 15 ஆண்டுகளுக்குப் பிறகு பெற்ற வெற்றி, 2007இல் இங்கிலாந்தில் பெற்ற வெற்றி ஆகியவற்றை மறந்து விட்டீர்கள். நான் ஒப்பிட்டு பேசவில்லை. மீண்டும் அவருக்கு என் நல் வாழ்த்துக்கள். அணி நன்றாகச் செயற்பட வேண்டும். வரும் ஆண்டுகளில் அவரும் சிறப்பாகப் பணியாற்றுவார் என்று நம்புகிறேன்.

விராட் கோஹ்லி அணித்தலைவராக முன்னேறியுள்ளார். நல்ல அணித்தலைவருக்கான அம்சங்கள் அவரிடம் உள்ளன. அவரிடம் தாகம் உள்ளது. அவரே ஓர் அருமையான வீரர். அவரது திறமைகள் மீது சந்தேகமில்லை என்று தெரிவித்துள்ளார்.



# 622 ஓட்டங்களுடன் இந்தியா! இலங்கை 2 விக்கெட்டுக்கு 50!!

கொழும்பு, ஓக. 05

இலங்கைக்கு எதிரான இரண்டாவது டெஸ்டின் இரண்டாம் நாளான நேற்று தனது வலுவான நிலையை மேலும் ஸ்திரப்படுத்தியது இந்தியா.



இந்தியா - இலங்கை அணிகள் மோதும் 2ஆவது டெஸ்ட் போட்டி கொழும்புஎஸ்.எஸ்.சி.மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்தியா முதல் நாள் ஆட்ட முடிவில் புஜாராமற்றும்ரஹ்னே ஆகியோரின் சதத்தால் 3 விக்கெட் இழப்பிற்கு 344 ஓட்டங்களைக் குவித்தது.

தொடக்க வீரர்களான தவான் 35 ஓட்டத்திலும், லோகேஷ் ராகுல் 57 ஓட்டத்திலும், கோஹ்லி 13 ஓட்டத்திலும் ஆட்டமிழந்தார்கள். புஜாரா 128 ஓட்டத்துடனும், ரஹ்னே 103 ஓட்டத்துடனும் களத்தில் இருந்தனர்.

நேற்று 2ஆம் நாள் ஆட்டம் நடந்தது. இருவரும் ஆட்டத்தை தொடங்கினார்கள். 92ஆவது ஓவரில் இந்தியா 350 ஓட்டத்தினைத் தொட்டது. அதே ஓவரில் புஜாரா ஆட்டம் இழந்தார். கருணாரத்ன வீசிய அந்த ஓவரில் புஜாராவுக்கு எல்.பி.டபிள்யூ. முறை ஆட்டமிழப்பு கேட்கப்பட்டது. ஆனால் நடுவர் ஆட்டமிழப்பைக் கொடுக்க மறுத்தார்.

இதையடுத்து இலங்கை மேன்முறையீட்டைப் பயன்படுத்தியதன் மூலம் புஜாரா 232 பந்தில் 133 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். ரஹ்னே - புஜாரா ஜோடி 4ஆவது விக்கெட்டுக்கு 217 ஓட்டங்களைக் குவித்தது.

அடுத்து ரஹ்னே உடன் அஸ்வின் ஜோடி சேர்ந்தார். இந்தியாவின் ஓட்ட எண்ணிக்கை 413 ஓட்டங்களாக இருக்கும்போது ரஹ்னே 132 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டம் இழந்தார்.

அதன்பின் வந்த அஸ்வின் உடன் சகா ஜோடி சேர்ந்தார். 2ஆவதுநாள்மதிய உணவுஇடைவேளை வரை இந்தியா 5 விக்கெட் இழப்பிற்கு 5 விக்கெட் இழப்பிற்கு 442 ஓட்டங்களை எடுத்திருந்தது. அஸ்வின் 47 ஓட்டங்களுடனும், சகா 16 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

மதிய உணவு இடைவேளை முடிந்து ஆட்டம் தொடங்கியதும் 121.4 ஓவரில் இந்தியா 450 ஓட்டங்களைத் தொட்டது. அஸ்வின் 91 பந்துகளில் 5 பவுண்டரி, 1 சிக்சருடன் அரைசதம் அடித்தார். தொடர்ந்து விளையாடிய அஸ்வின் 54 ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்தார்.

அடுத்து சகா உடன் ஹர்திக் பண்டையா ஜோடி சேர்ந்தார். பாண்டியா 20 பந்தில் 20 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டம் இழந்தார். தொடர்ந்து சகா உடன் ஜடேஜா ஜோடி சேர்ந்தார். சஹா சிறப்பாக விளையாடி 113 பந்துகளில் அரைசதம் அடித்தார். இதற்கிடையே இந்தியா 134.3 ஓவரில் 500 ஓட்டங்களைத் தொட்டது. முதலில் நிதானமாக விளையாடிய ஜடேஜா, பின்னர் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

149ஆவது ஓவரின் கடைசி பந்தை ஜடேஜா பவுண்டரிக்கு விரட்ட இந்தியா 550 ஓட்டங்களைத் கடந்தது. 2ஆவது நாள் தேநீர் இடைவேளை வரை இந்தியா 7 விக்கெட் இழப்பிற்கு 553 ஓட்டங்களை எடுத்திருந்தது.

தேநீர் இடைவேளைக்குப் பின்னர் 158 ஓவர்களில் 9 விக்கெட்டு இழப்புக்கு 622 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் இந்தியா முதல் இன்னிங்ஸை முடித்துக் கொண்டது. சகா 67 ஓட்டங்களுடனும், ஷமி 19 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். ஜடேகா 70 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

அடுத்து தனது முதலாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை நேற்றைய ஆட்டமுடிவில் 20 ஓவர்களில் 2 விக்கெட் இழப்புக்கு 50 ஓட்டங்களை எடுத்திருந்தது. திமுத் கருணாரத்ன 25 ஓட்டங்களுடனும் உபுல் தரங்க ஓட்டம் எதுவும் பெறாமலும் ஆட்டமிழந்தனர். (உ)

# சொந்த நாட்டுக்குத் திரும்பினார் பிரபல இந்திய வீரர்



மருத்துவ பரிசோதனை செய்து கொள்வதற்காக இலங்கையிலிருந்து ரோகித் சர்மா இந்தியாவுக்குத் திரும்பியுள்ளார்.


இலங்கைக்கு சென்றுள்ள இந்திய கிரிக்கெட் அணி முதலில் மூன்று டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. தொடரின் இரண்டாவது டெஸ்ட் போட்டி தற்போது கொழும்பில் நடைபெற்று வருகின்றது.

இத்தொடருக்கான இந்திய அணியில் ரோகித் சர்மா இடம் பெற்றுள்ளார். ஆனால் விளையாடும் 11 பேர் கொண்ட அணியில் அவருக்கு இடம் கிடைக்கவில்லை. இந்நிலையில் மருத்துவ சிகிச்சைக்காக ரோகித் சர்மா நேற்று இந்தியாவின் மும்பை நகரத்துக்கு திரும்பியுள்ளார். இது குறித்து இந்திய கிரிக்கெட் சபை தெரிவிக்கையில், கடந்த வருடம் தனக்கு ஏற்பட்ட காயத்துக்காக ரோகித் சர்ம சத்திரசிகிச்சை செய்து கொண்டார்.

அதற்கான மருத்துவ பரிசோதனையை மேற்கொள்ள நேற்று மும்பை திரும்பியுள்ளார். பரிசோதனை முடிந்து ஒரே நாளில் இன்று மீண்டும் இலங்கைக்கு அவர் திரும்பி விடுவார் என்று தெரிவித்துள்ளது.

# இளைஞர்களுக்கு டி.என்.பி.எல். கிரிக்கெட் வரப்பிரசாதம்:

## மனம் திறந்த பிரெட்லீ



தமிழக இளைஞர்களுக்கு டி.என்.பி.எல். கிரிக்கெட் தொடர் வரப்பிரசாதமாக உள்ளது என்று ஆஸ்திரேலியா அணியின் முன்னாள் வீரர் பிரெட் லீ கூறியுள்ளார். தமிழ்நாட்டு கிரிக்கெட் சங்கம் சார்பில் தமிழ்நாடு பிறீமியர் லீக் கிரிக்கெட் போட்டிகளின் 2ஆவது பருவ விளையாட்டுக்கள் சென்னை, திருநெல்வேலி, திண்டுக்கல் போன்ற மாவட்டங்களில் நடந்து வருகின்றன.

இந்தப் போட்டிகளை பிரபலப்படுத்த ஆஸ்திரேலியாவின் முன்னாள் வீரர் பிரெட் லீ தமிழகத்துக்குச் சென்றடைந்துள்ளார். இந்தப் பகுதியில் மாநில, தேசிய அளவில் சிறந்த கரபந்து வீரர்கள் இருப்பதை அறிந்து அவர்களை ஊக்கப்படுத்த இங்கே வந்தேன்.

அதே போல டி.என்.பி.எல். கிரிக்கெட் போட்டிகள் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இது கிராமப்புற இளைஞர்களுக்கு வரப்பிரசாதமாக அமையும் என்று தெரிவித்துள்ளார்.

# பார்சிலோனாவில் இருந்து வெளியேறும் நெய்மர்!

பிரேசில் நாட்டின் தலைசிறந்த உதைபந்து வீரராக திகழ்ந்து வருபவர் நெய்மர். இவரை கடந்த 2013ஆம் ஆண்டில் இருந்து பார்சிலோனா அணிக்காக விளையாடி வருகிறார். மெஸ்சி, சுவாரஸ் மற்றும் நெய்மர் ஆகியோரின் சிறந்த ஆட்டத்தால் பார்சிலோனா வெற்றிமேல் வெற்றிகளைக் குவித்து வந்தது.

மெஸ்சி மற்றும் சுவாரஸ் ஆகியோர் கோல் அடிக்க நெய்மரின் ஆட்டம் உறுதுணையாக இருக்கும். சிறந்த வீரரான நெய்மரை மற்ற அணிகள் பல கோடி ரூபா கொடுத்து வாங்க தயாராக இருந்தது. இதனால் பார்சிலோனா அணி, நெய்மருடன் புதிய ஒப்பந்தம் போட்டது. அதன்படி 2021ஆம் ஆண்டு வரை பார்சிலோனா அணிக்காக விளையாடுவேன் என்று ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்.




மெஸ்சி பிரியாவிடை

இந்நிலையில், இந்த வருடம் தற்போது அணி மாற்றுப் பணி நடந்து வருகின்றது. பிரான்ஸ் நாட்டின் முன்னணி கிளப்பான பாரிஸ் செயன்ட்-ஜெர்மைன், நெய்மரை வாங்க ஆசைப்பட்டது. நெய்மருக்கு அதிக அளவில் சம்பளம் தருவதாக ஆசை வார்த்தை கூறியது. இதனால் நெய்மர் பார்சிலோனா அணியில் இருந்து வெளியேற முடிவு செய்துள்ளார். இதுகுறித்து பார்சிலோனா அணி நிர்வாகத்திடம் தெரிவித்துவிட்டார்.

இந்நிலையில் கடந்த நான்கு ஆண்டுகளாக தன்னுடன் விளையாடி வந்த நெய்மர் அணியில் இருந்து பிரிந்து செல்வது மெஸ்சிக்கு கடினமாக உள்ளது. அவருக்கு வீடியோ மூலம் பிரியாவிடை செய்தி அனுப்பியுள்ளார். அந்த செய்தியில் 'நண்பா நெய்மர், உன்னுடன் விளையாடிய வருடங்கள் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தன. அதிக அதிஷ்டம் பெற்று உன்னுடைய வாழ்க்கை அடுத்த நிலைக்கு உயர வாழ்த்துக்கள். மீண்டும் சந்திப்போம்' என்று தெரிவித்துள்ளார்.

# வாள்வெட்டுச் சந்தேக நபர்களை பொலிஸ் காவலில் விசாரிக்க அனுமதி

யாழ்ப்பாணம்,ஓக.5

கொக்குவிலில் பொலிஸார் மீது வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டவர்கள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட இருவரையும் 48 மணித்தியாலங்கள்பொலிஸ்தடுப்புகாவலில் வைத்து விசாரணை செய்ய நீதி மன்றம்அனுமதிவழங்கியுள்ளது.

நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் நேற்று யாழ்.நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோதே அவர்களைத் தடுத்து வைத்து விசாரணை செய்ய நீதிமன்று அனுமதி வழங்கியது. (ம)

# சைட்டம் எதிர்ப்பு பேரணிக்கு தடை உத்தரவு

'சைட்டம்' தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிராக பல்கலைக்கழக மாணவர்களால் முன்னெடுக்கப்படும்பேரணிக்கு கொழும்பு நீதிமன்றம் நேற்று தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

கண்டியில் இருந்து கடந்த திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்ட எதிர்ப்புப் பேரணி நேற்று முன்தினம் கடவத்தையில் நிறுத்தப் பட்டு, நேற்றுக்காலை மீண்டும் கொழும்பு கோட்டையை நோக்கி முன்னெடுக்கப்பட்டது.

இந்தநிலையிலேயே மேற்படி போராட்டம் அரச அலுவலகங்களுக்குள் பிரவேசித்தல் மற்றும் போக்கு வரத்துக்கு இடையூறுகளைவிளைவித்தல் போன்ற நடவடிக்கைகளுக்கு எதிராகவே நீதிமன்றம் இந்தத் தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தனித்தா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று மாலை 'காலைக்கதிர்' நாளிதழுக்கு விசனத்துடன் தெரிவித்தார்.

"கூட்டமைப்பில் இணைந்து செயற்படுவதையே நாம் எப்போதும் விரும்புகிறோம். கூட்டமைப்பை உடைப்பதா,இல்லையா என்பது தமிழரசுக் கட்சியின் கைகளில்தான் தங்கியுள்ளது.

"அக்கட்சிகளின்போக்குநமது ஐக்கியத்துக்கு சாதகமானதாக இல்லை.

"உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில்இலங்கைத்தமிழரசுக் கட்சியினர்தம்பாட்டில்செயற்படத் தொடங்கிவிட்டனர். ஏற்கனவே பிரதேச மட்டங்களில் தத்தமது பிரதேசங்களின் வேட்பாளர்களைத் தெரிவுசெய்யும் நடவடிக்கைகளை அவர்கள் தனியாகத் தொடங்கிவிட்டனர்.

"பலவிடயங்களில்அவர்களது போக்கு தனியாகவே உள்ளது.

"ஆகவே வரும் உள்ளூராட்சித் தேர்தலை நாங்கள் எல்லோரும் சேர்ந்து கூட்டாக எதிர் கொள்வதா அல்லது தனித்து எதிர் கொள்வதா என்பது தமிழரசின் கைகளில்தான் உள்ளது.

"அவர்களை நாம் ஆரம்பித்துள்ள இந்தப் பாதையில் தனித்துப் புறப்பட்டால் பிரிந்து நின்று கேட்பதைத் தவிர எமக்கு வேறு மார்க்கம் இருக்கப்போவதில்லை" - என்றார் சித்தார்த்தன். (உ)

## கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதல்வர் விக்னேஸ்வரனின் கடிதம் ஒன்று தமக்குக் கிடைத்தமையை நேற்று மாலை சம்பந்தன் உறுதிப்படுத்தினார்.

கட்சித் தலைவர்கள் கூட்டம் மிக விரைவில் கூட்டப்படும் என்றும் அப்போது அவர் கூறினார்.

அதன் பின்னர் நேற்றிரவு அவரின் உதவியாளர் ஒருவர் கூட்டமைப்பின்பங்காளிக்கட்சித் தலைவர்களைதொலைபேசியில் அழைத்து சனியன்று (இன்று) மாலை 4.30 மணிக்கு முதல்வரின் இல்லத்தில் நடைபெறும் கூட்டத்துக்கு சமுகம் தரும்படியான அழைப்பைத்தெரியப்படுத்தினார்.

கொழும்பில் இருந்து சம்பந்தன் இன்று காலையில் யாழ்ப்பாணம் வந்து சேருவார் மாலையில் மேற்படி கூட்டத்தில் அவர் பங்கு பற்றுவார்.

இறுதிநேரத்தில் இக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டமையால் பங்காளிக் கட்சித் தலைவர்கள் அதில் பங்குபற்றாவிட்டாலும் சம்பந்தன் - விக்கிசந்திப்பு இன்று மாலையில் நடைபெறும் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்வில் 40 வருடங்களை நிறைவுசெய்த பிரதமர் ரணிலுக்கு வாழ்த்துத் தெரிவிக்கும் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார் அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:

"1977 இல் அரசியலுக்குள் பிரவேசித்தரணில்விக்கிரமசிங்க நுண்ணறிவும், துணிவும், பொறுமையும், நிதானமும் கொண்டவராக அரசியல் தலைவருக்கு இருக்கவேண்டிய குணாம்சங்களைக் கொண்டவராகத் திகழ்கின்றார்.

நேர்மையாகச் செயற்படக் கூடிய அரசியல்வாதி அவர். முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவுக்கு எதிராக குற்றப் பிரேரணை கொண்டுவரப்பட்ட சந்தர்ப்பத்தில் அதைத் தெளிவாகக் காணக்கூடியதாக இருந்தது. நெருக்கடியான சூழ்நிலைகளிலும் கொள்கைப்பற்றுடனும், தன்னம்பிக்கையுடனும் கட்சியை வழிநடத்தி இறுதியில் வெற்றியின் வழிக்கு இட்டுச் சென்றார்.

குறிப்பாக, விடுதலைப்புலிகள் முன்வைத்த இடைக்கால அரசு கோரிக்கையை அவர் ஏற்றிருந்தால் 2005 இல் ஜனாதிபதியாகிருப்பார். எனினும், நாட்டின் நலனை முன்னிறுத்தி அதை அவர் நிராகரித்தார். உலக நாடுகளிலிருந்தும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டன. எனினும், மக்கள் நலனை முன்னிறுத்தி அவர் செயற்பட்டார்.

கடந்த அரசில் (மஹிந்த அரசில்) நான் அமைச்சராக இருந்தேன். யுத்த வெற்றியை அடிப்படைவாத முறையில் கொண்டாடினர். இனங்களுக்கிடையில்குரோதத்தைத் தூண்டினார்கள். பிரஜைகளுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. அந்த அரசில் அமைச்சராக இருந்ததையிட்டு கவலையடைகின்றேன்.

அவற்றுக்கெல்லாம் எதிராக எதிர்க்கட்சியில் இருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குரலெழுப்பி இன ஒற்றுமையை மையப்படுத்தி செயற்பட்டார். அவருக்கு எமது கட்சி மற்றும் மக்கள் சார்பில் வாழ்த்துகளும் பாராட்டுகளும் தெரிவித்துக் கொள்கின்றேன்" என்றார்.

## ஈ.பி.ஆர்.எல்.எவ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மிகக் குறைவாகவே தென்பட்டன.

நேற்றிரவு கடைசி நேரத்தில் இக்கூட்டம் பற்றி அறிவிக்கப்பட்டதால் இந்தக் கூட்டத்தில் ரெலோ, புளொட் ஆகியனவும் பங்குபற்றமாட்டா என்றே எதிர்பார்க்கப்பட்டது.

புளொட் தலைவர் சித்தார்த்தன் கொழும்பில் உள்ளார். நேற்றிரவு இந்தக் கூட்ட அறிவித்தல் வழங்கப்படுவதான செய்திகிட்டிய நேரத்தில் இருந்து அவரது தொலைபேசி இயங்கவில்லை. அதனால் அவருடன் தொடர்புகொள்ள முடியவில்லை. அவர்இன்று மாலைக்குள்யாழ். திரும்பும் சாத்தியமோ, அவர் சார்பில் அவரது கட்சிப் பிரதிநிதி எவரும் இன்றைய கூட்டத்தில் பங்குபற்றும் வாய்ப்புகளோ இல்லை என புளொட் வட்டாரங்கள் தெரிவித்தன.

ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதனுடனும் நேற்றிரவு தொடர்பு கொள்ள முடியவில்லை. அக்கட்சியின் பொதுச் செயலாளரான சிறிகாந்தாவுக்குநற்றுநள்ளிரவுவரை இன்றைய கூட்டம் பற்றிய தகவல் ஏதும் கிட்டவில்லை. அதனால் அக்கட்சியும்இன்றையகூட்டத்தில் பங்குபற்றும்சாத்தியம்மிகமிகக் குறைவு என்றே கூறப்பட்டது.

தமிழரசுக் கட்சித் தலைவர் மாவைசேனாதிராசா இன்றைய கூட்டத்துக்குத் தமக்கு நேற்று முன்னிரவில்தான் அறிவித்தல் கிடைத்தது என்றும், அதனையடுத்துத் தாம் கொழும்பிலிருந்து இரவோடு இரவாக யாழ். திரும்பிக் கொண்டிருக்கின்றார்என்றும்நேற்றிரவுதெரிவித்தார்.

"இன்றையகூட்டத்தில்என்ன விடயம் பேசப்படவிருக்கின்றது என்பதுகுறித்துசம்பந்தன்ஐயாவிடம் இனித்தான் நான் கேட்க இருக்கிறேன்." - என்றார் அவர்.

ஆனால் ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரனோஇந்தக்கூட்டஅழைப்புக் குறித்துக் காட்டமாகக் கருத்துக் கூறினார்.

"கூட்டமைப்புஒருங்கிணைப்புக் குழு புதிய அரசமைப்பு உட்பட பல முக்கிய விடங்கள் குறித்து பேசுதவதற்காகக் கூட வேண்டியுள்ளது. ஆனால் அதற்கு எல்லாம் அந்தக் கூட்டத்தைக் கூட்டாத சம்பந்தர், இப்போது முதல்வரின் விடயத்தில் தலையிடுவதற்காக இந்தக் கூட்டத்தைக் கூட்டிறார்.

"இது முதல்வரின் விடயம். அரை சுதந்திரமாக இயங்க விடுங்கள் என்பதுதான் எமது நிலைப்பாடு. அதில் தலையீடு செய்வது குறித்து ஆராயும் கூட்டத்தில் நாம் பங்குபற்றுவது முறையற்றது.

"ஊழல்செய்தவர்களையும், குற்றமிழைத்தவர்களையும் விசாரணைசெய்துதண்டிப்பதற்காக முதல்வர் நடவடிக்கை எடுக்க முயல்கிறார். அதைத் தடுப்பதற்கு சம்பந்தன் எத்தனிக்கின்றமை வெட்கக் கோடானது. அதற்குநாம்துணைபோக மாட்டோம்.

"புளொட்டுக்குரிய சுழற்சி முறை ஆசனத்தை மிக மிக இரகசியமாக தமிழரசுக் கட்சி சூறையாடியமை குறித்துப் பேச சம்பந்தன் தயாரில்லை. புதிய அரசமைப்பு உட்பட முக்கியமான - அவசரமான - பல விடயங்கள் குறித்தெல்லாம் நாம் பேசவேண்டியுள்ளது. அவற்றை எல்லாம்பேசாமல், முதல்வரின் சுயாதீன விடயத்தில் தலையிடுவது குறித்து பேச எங்களை அழைக்கின்றார்கள்.

"எங்களைக் கேட்காமல் தானே முதல்வருக்கு எதிராக நம்பிக்கையில்லாமல் பிரேரணை கொடுத்தார்கள்! இதற்கு மட்டும் நாம் எதற்கு?" - என்று பொரிந்து தள்ளினார் சுரேஷ் பிரேமச்சந்திரன். (உ)

## மீண்டும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என நான் கூறமாட்டேன் எனவும் தெரிவித்தார்.

மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக தேரர்களை நேற்று சந்தித்து ஆசி பெற்றுக்கொண்ட மகேஷ் சேனநாயக்கா அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறுகையில் -

பொலிஸ்மா அதிபர் கூறுகின்றமை போன்று தமிழீழ விடுதலைப் புலிகளினால் வடக்கில் மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படுவதற்கு இடமளிக்கப் போவதில்லை.

வடக்கில் சில இளைஞர் குழுக்கள் சமூக விரோத செயல்களில் ஈடுபடுகின்றனர். அதன் அர்த்தம் முழுமையான விடுதலைப் புலிகள் அல்ல. ஆனாலும், இது போன்றசமூகவிரோதசெயல்களை எதிர்கொள்ளப் படையினராகிய நாம்தயாராகவேஇருக்கின்றோம்.

எனினும், பொலிஸ்மா அதிபர் கூறுவதில் சில உண்மைகள் இருக்கலாம். எது வந்தாலும் நாம் எதிர்கொள்வோம். நாட்டில் சட்டத்தை சரியான முறையில் அமுல்படுத்த வேண்டும். என அவர் தெரிவித்தார்.

யுத்தக் குற்றம் தொடர்பாக கருத்து வெளியிட்ட இராணுவத் தளபதி மகேஷ் சேனநாயக்க, யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் படையினர் யாரும் குற்றம் செய்யவில்லை என்றார். எனினும், படையினர் குற்றம் செய்திருந்தால் தண்டனை அனுபவித்தாக வேண்டும் எனவும் அவர் கூறினார்.

இதேவேளை, அண்மையில் யாழ்ப்பாணத்தில் கருத்து வெளியிட்ட பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர, நாட்டில் பயங்கரவாதம் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட நிலையில் எங்கோ ஒரு மூலையில் பயங்கரவாதம் முளைத்துக்கொண்டுதான் இருக்கின்றது எனக் கருத்து வெளியிட்டார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (ம)

## சமஷ்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முரணாகநாட்டின்பிரிவினையைக் கோரிச்செயற்படுவதால் அதனை தடை செய்வது உட்பட அதற்கு எதிரான உரிய நடவடிக்கைகளை எடுக்கு மாறு உத்தரவிடக் கோரி 2014 ஆம் ஆண்டில் ஆறு மனுக்கள், உயர் நீதிமன்றத்தின்விசேடஏற்பாடுகள்நியாயாதிக்கத்தின்கீழ்தாக்கல்செய்யப்பட்டன.

அதில் ஒரு மனு மீதான தீர்ப்பே நீண்ட விசாரணைக்குப் பின்னர் நேற்று வழங்கப்பட்டது.

இந்தவழக்கில்முதலில்இலங்கைத்தமிழரசுக்கட்சியின்பொதுச் செயலாளர் மாவை சேனாதிராசா எதிர்மனுதாரராகக்குறிப்பிடப்பட்டிருந்தார். பின்னர் அப்பதவிக்கு துரைராஜசிங்கம் நியமிக்கப்பட்டமையை அடுத்து மனுவிலும் எதிர்மனுதாரர் பெயரை மாற்றுவதற்கு நீதி மன்றம் அனுமதித்திருந்தது.

இந்த வழக்கில் எதிர்மனுதாரரான இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் ஆஜரான ஜனாதிபதிசட்டத்தரணிஎம்.ஏ.சுமந்திரன், இலங்கைத்தமிழரசுக்கட்சிசமஷ்டித் தீர்வையே கோருகின்றது என்றும் - சமஷ்டிக் கோரிக்கை பிரிவினை அல்ல என்றும் தெரிவித்திருந்தார்.

அதனை ஏற்று நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பை வழங்கியது.

( இத்தீர்ப்புப் பற்றிய மேலதிக விவரங்கள் இன்றைய ஆசிரிய தலையங்கத்திலும் இடம் பெற்றுள்ளன. (உ)

## தமிழ்க்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த அறிக்கையின் விவரம் வருமாறு:-

தமிழரசுக் கட்சி தவிர்ந்த கூட்டமைப்பின் ஏனைய மூன்று அங்கத்துவக் கட்சிகளும் கடந்த புதன் கிழமை வவுனியாவில் மாவட்ட மட்டத்தில் நடத்திய சந்திப்புதொடர்பில்சிலவிடயங்களைத் தெளிவு படுத்த வேண்டியுள்ளது.

இச்சந்திப்பு தொடர்பில் செய்தி ஊடகங்களில் நேற்றுமுன்தினமும்,நேற்றும்வெளிவந்திருக்கும் செய்திகள் காரணமாகவே இத் தெளிவுபடுத்தல்தேவைப்பட்டிருக்கின்றது.

குறித்த சந்திப்புக்கு எமது கட்சி யான ரெலோவும் அழைக்கப்பட்டிருந்த நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்பில் பல் வேறு விடயங்கள் அங்கு பேசப் பட்டுள்ளன.

இக்கூட்டத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட் மற்றும் ரெலோ ஆகிய மூன்று கட்சிகளோடு சில சிவில் அமைப்புக்களும் சேர்ந்து ஒருதனி அணியாகசில அரசியல் நடவடிக்கைகளை மாவட்ட மட்டங்களில் முன்னெடுக்க தீர்மானிக் கப்பட்டிருப்பதாக வெளிவந்திருக்கும் செய்திகள் உண்மை நிலைமைக்கு மாறானவை.

எமது கட்சியைப் பொறுத்த மட்டில், தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெற்றிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேரிலேயே, அதன் அங்கத்துவக் கட்சிகள் நான்கும் பரஸ்பரம் புரிந்துணர்வோடும் ஒற்றுமையோடும் செயற்படுவதே இன்றையகாலத்தின்கட்டாயத்தேவை என்ற நிலைப்பாட்டில்நாம் உறுதியாக உள்ளோம்.

கூட்டமைப்புக்குள் பல்வேறு பிரச்சினைகளும் சர்ச்சைகளும் நீடித்து வருவது எல்லோருக்கும் தெரிந்த விடயம். இவை அனைத்தும் தமிழ்த் தேசியத்தின் நலனுக்காக, ஜனநாயகக் கோட்பாடுகளின் வழியில் கூடிய விரைவாக தீர்த்து வைக்கப்பட வேண்டும் என்றே நாம் விரும்புகின்றோம்.

கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுவைக் கூட்டி நான்கு கட்சிகளும் மனந்திறந்து விவாதிப்பதன்ஊடாகநிகழ்காலத்தின் சவால்களை ஒற்றுமையாக நாம் அனைவரும் சந்திக்க முடியும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

இதற்குப் பதிலாக, கூட்டமைப்பில்தமிழரசுக்கட்சியைத்தவிர்த்து, ஏனைய மூன்று கட்சி களும் கூட்டமைப்புக்குள்ளேயே ஒரு தனி அணியாக செயற்படு வது என்பது எம்மால் ஏற்கப்பட முடியாதநிலைமையாகும். தமிழ் மக்களும் அதனை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

கூட்டமைப்பின்செயற்பாடுகள் தொடர்பில் அதன் அங்கத்துவக் கட்சிகள் சந்தித்து விவாதிப்பது என்பது கட்சிகளின் தலைமைத்துவ மட்டத்தில் மேற்கொள்ளப் படவேண்டிய நடவடிக்கையே தவிர,மாவட்டமட்டத்தில்கையாளப் படக்கூடிய ஒரு விவகாரம் அல்ல என்பதையும் இச்சந்தர்ப்பதில் நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

# வவுனியா வாக்காளர் எண்ணிக்கை மாறுபாட்டை தெளிவுபடுத்துங்கள்!

## சிவசக்தி ஆனந்தன் தேர்தல் ஆணைக்குழுத் தலைவருக்குக் கடிதம்



வவுனியா, ஒக.05

வவுனியாமாவட்டத்துக்கு உட்பட்ட பிரிவுகளில் வாக்காளர் எண்ணிக்கையில் காணப்படும் மாறுபாடு தொடர்பாக உரிய விளக்கம் அளிக்குமாறு கோரி தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரியவுக்கு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் அவசர கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

வவுனியா வடக்கு பிரதேசசெயலாளர்பிரிவிலுள்ள வாக்காளர்கள் இடாப்புக்கும் வவுனியா வடக்கு பிரதேச சபையின் கீழுள்ள வாக்காளர் இடாப்புக்கும் இடையில் ஏற்பட்டுள்ள வாக்காளர்கள் வித்தியாசம் தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

குறிப்பாக, வவுனியா வடக்குபிரதேசசபைக்கு வவுனியா தேர்தல்கள் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ள 2016 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் பட்டியலில் 11 ஆயிரத்து 747 பேரும், வவுனியா வடக்கு பிரதேச செயலாளருக்கு வழங்கப்பட்ட வாக்காளர்கள் பட்டியலில் 8ஆயிரத்து 577 பேரும் பதிவு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

இந்த இரு பட்டியலுக்கிடையில் 3 ஆயிரத்து 170 வாக்காளர்கள் வித்தியாசப்படுவதற்கான காரணத்தை தெளிவுபடுத்தி உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன்.


அதேநேரம், முல்லைத்தீவு மாவட்டத்தின் வெலிஓயா கிராமத்திலுள்ள வாக்காளர்கள், நெடுங்கேணி பிரதேச சபை வாக்காளர்கள் பட்டியலுடன் இணைக்கப்பட்டுள்ளதாக அறிகிறேன். அத்துடன்,2015 ஆம் ஆண்டு வெடி வைத்தகல் கிராம சேவையாளர் பிரிவில் 18 பேரே வாக்காளர்களாகப் பதிவு செய்யப்பட்டிருந்தார்கள். தற்போது இந்தக் கிராம சேவையாளர் பிரிவில் திடீரென வாக்காளர் எண்ணிக்கை 758 பேராக அதிகரிக்கப்பட்டுள்ளனர் என்ற அறியவருகிறது.

இந்த விடயம் தொடர்பாக நாம் ஏற்கனவே எல்லை மீள் நிர்ணயக் குழுவுக்கு முறைப்பாடு செய்துள்ளேன். இது தொடர்பாக மக்கள் பிரதிநிதிகளாகிய நாம் மாவட்ட மற்றும் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டங்களில் முன்னிலைப்படுத்தி,அதற்கான விளக்கத்தை வழங்குமாறு கோரப்பட்டபோதும் அதற்கான பதில் இன்று வரை யாராலும் எமக்கு வழங்கவில்லை.

அந்தப் பிரதேச மக்களின் இந்த கேள்விகளுக்கு நாம் பதிலளிக்க வேண்டியவர்களாக இருக்கின்றமையால் இதற்கான விளக்கத்தை எனக்கு வழங்கி உதவுமாறு தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.- என்றுள்ளது.

அந்தக் கடிதத்தின் பிரதி வவுனியா மாவட்ட செயலாளர் றோகன புஸ்பகுமாரவுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-100)

# அமெரிக்க தூதுக் குழுவினர் ராணுவத் தளபதியுடன் சந்திப்பு



கொழும்பு, ஒக. 05

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள அமெரிக்காவின் இராணுவ தூதுக்குழுவினர் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனநாயக்கவை சந்தித்துப் பேச்சுகளில் ஈடுபட்டுள்ளனர்.

கொழும்பிலுள்ள இராணுவத் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் இராணுவத் தளபதி, கடந்த ஐந்து வருட காலமாக ஐக்கிய அமெரிக்காவுடனான அமைதி காக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வரும் செயற்பாடுகள் தொடர்பாக விளக்கமளித்துள்ளார்.இதன்போது, இராணுவ பதவிநிலை அதிகாரிகள், ஐக்கிய அமெரிக்காவின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆலோசகர் யூனா பெனாண்டஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (எ)

# பூவரசங்குளம் பிரதேச வைத்தியசாலையின் நோயாளர் விடுதிக்கு நேற்று அடிக்கல்



வவுனியா, ஒக.05

வவுனியா, பூவரசங்குளம் பிரதேச வைத்தியசாலை நோயாளர் விடுதிக்கான அடிக்கல் வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்தால் நேற்று நடப்பட்டது.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சரின் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியிலிருந்து 180 லட்சம் ரூபாநிதியில் இவ் நோயாளர் விடுதி அமைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் ப.சத்தியசீலன், இணைப்பாளர் பா.சிந்து ஜன், சுகாதார அமைச்சின் அலுவலக உத்தியோகத்தர்கள், தாய் சேய் நல பொறுப்பதிகாரி வைத்தியர் எம்.ஜெயதரன், பூவரசங் குளம் பிரதேச வைத்தியசாலையின் வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (எ- 100)

## இணுவிலில் முன்பள்ளி விளையாட்டு விழா

இணுவில் சிறுவர் உலகம் முன்பள்ளியின்விளையாட்டுப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இணுவில் மருத்துவமனை மன்ற தென்னிந்தியத்திருச்சபை ஆலயத்துக்கு அருகில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வுக்கு யாழ்ப்பாணப் பல் கலைக்கழக கனினிப்பிரயோக உதவியாளர் எஸ்.கோவேந்தன் முதன்மை விருந்தினராகவும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட செயலக மனித வள அபிவிருத்தி உதவியாளர் ஆர். பொன்னம்பலம் மற்றும் இணுவில் மத்தியகல்லூரி ஆரம்பப் பிரிவு உதவி அதிபர் பி.அருமைநாதன் ஆகியோர்கலந்து கொள்ளவுள்ளனர்.

## வல்வையில் நாளை பரிசளிப்பு விழா

உலகளாவிய ரீதியில் நடத்தப்பட்ட சிதம்பராக் கணிதப் போட்டி 2017 இன் இலங்கையில்நடத்தப்பட்டபோட்டியின் வெற்றியாளர்களுக்கான பரிசளிப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வல்வை முத்துமாரிஅம்மன் திருமண மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

ஓய்வு நிலை அதிபர் திருமதி சு.தவமலர் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் வடமாகாண முதலமைச்சர் சி.வீ.விக்கினேஸ்வரன் பிரதம விருந்தினராகவும் வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் சிறப்பு விருந்தினராகவும் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.இரவீந்திரன், வடமாகாண கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர் சி.நந்தகுமார் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (இ)

## சுன்னாகம் லயன்ஸ் புதிய நிர்வாகம் திங்களன்று பதவியேற்பு

சுன்னாகம், ஒக.05

சுன்னாகம்லயன்ஸ் கழகத்தின புதிய நிர்வாக பதவியேற்பு நிகழ்வு நாளைமறுதினம் திங்கட்கிழமை மு.ப 10.30 மணிக்கு தெல்லிப் பழை துர்க்கை அம்மன் ஆலயத்துக்கு அருகில் உள்ள தெல்லிப் பழை லயன்ஸ் கழக மண்டபத்தில் நடைபெறும்.

லயன்ஸ் கழகத் தலைவர் லயன் நா. தயாரூபன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக லயன்ஸ் கழகம் மாவட்டம் 306பி1 இன் 2 ஆவது உப மாவட்ட ஆளுநர் தொழிலதிபர்லயன் பி.மகேந்திரன் லயன் சங்கீதா தம்பதிகள்,சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை பெண் நோயியல் மகப்பேற்று வைத்திய நிபுணர் ந.சரவணபவ ஆகியோர் கலந்து கொள்வர்.

கழகத்தின் புதிய தலைவராக லயன் ஆர்.சிவநாயகமும் செயலாளராக லயன் சி.ஹரிகரனும் பொருளாளராக லயன் த.தேவராஜனும், அங்கத்துவப் பணிப்பாளராக லயன் செ.மகாதேவாவும், நிகழ்ச்சித்திட்டப் பணிப்பாளராக லயன் ந.சண்முகவேலும் பதவியேற்பர். (இ)

## "மகப்பேறின்மை" சிறப்புக் கருத்தமர்வு தெல்லிப்பழையில்

தெல்லிப்பழை, ஒக.05

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் ''பெண் நோயியலும் மகப்பேறின்மையும்'' சிறப்புக் கருத்தமர்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு, தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்துக்கு அருகில் உள்ள தெல்லிப்பழை லயன்ஸ் கழக மண்டபத்தில் நடைபெறும்.

சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் நா.தயாரூபன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் கருத்துரையை தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை பெண் நோயியல் மகப்பேற்று வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி ந.சரவணபவ வழங்குவார்.

ஆர்வலர்கள் அனைவரையும் கருத்தமர்வில் பங்குகொண்டு சிறப்பிக்குமாறு சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினர் தெரிவித்துள்ளனர். (இ)

## விஞ்ஞான ஆசிரியருக்கு செயலமர்வு


யாழ்.கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் விஞ்ஞான பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான புதிய பாடத்திட்டம் தொடர்பான செயலமர்வு அடுத்த வாரம் நடைபெறவுள்ளது.

அடுத்த வருடம் தரம் 9 இற்கு அமுல்படுத்தப்படவுள்ள புதிய பாடத்திட்டம் குறித்த செயலமர்வு கோட்ட ரீதியாக யாழ்.சென்.மேரிஸ் வித்தியாலயத்தில்இடம்பெறவுள்ளது.

இதற்கமைய யாழ்ப்பாண கோட்ட ஆசிரியர்களுக்கு எதிர்வரும் 8,9 ஆம் திகதிகளிலும் நல்லூர், கோப்பாய் கோட்ட ஆசிரியர்களுக்கு 11,12 ஆம் திகதிகளிலும் மற்றும் 15,16 ஆம் திகதிகளிலும் நடைபெறவுள்ளது. தரம் 11 இன் மூன்றாம் தவணைக் கல்வி நடவடிக்கைகளில் பாதிப்பை ஏற்படுத்தாமல் இருப்பதற்காகவே விடுமுறைக் காலத்தில் செயலமர்வு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது என பாடத்துக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir






# ஜனாதிபதியும், பிரதமரும் தொடர்ந்தும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்!

## ரணிலுக்குப் புகழாரம் சூட்டி சபையில் சம்பந்தன் உரை

கொழும்பு, ஓக.05

"தேசிய இனப்பிரச்சினையும், பொருளாதாரப் பிரச்சினையும் ஒன்றோடொன்று தொடர்புபட்டுள்ளன. ஆகவே, இவ்விரண்டு பிரச்சினைகளுக்கும் உரிய வகையில் தீர்வுகண்டு நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக ஜனாதிபதியும், பிரதமரும் தொடர்ந்தும் இணைந்து செயற்பட வேண்டும்."

– இவ்வாறு பிரதான எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கோரிக்கை விடுத்தார்.

அத்துடன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை துணிச்சல்மிக்க அரசியல் தலைவரெனப் பாராட் டிய அவர், தமிழ் மக்களின் சார்பாக வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொண்டார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாழ்த்துகளைத் தெரிவிக்கும் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:–

"சிரேஷ்ட அரசியல்வாதியான ரணில் விக்கிரமசிங்க நான்காவது தடவையாகவும் பிரதமராகப் பதவி வகிக்கின்றமையுடன், 40 வருடங்களாகத் தொடர்ச்சியாக நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்து வருகின்றார்.

1977ஆம் ஆண்டில் நாம் இருவரும் தெரிவாகியிருந்தாலும் நாடாளுமன்றத்தில் தொடர்ச்சியாக அங்கம் வகிப்பதற்குரிய வாய்ப்பு பிரதமர் ரணிலுக்குக் கிட்டியது. 1983ஆம் ஆண்டு நான் எம்.பி. பதவியை இழக்க நேரிட்டது. அப்போதைய அரசியல் நிலைமைகளின் பிரகாரம் எமது கட்சி உறுப்பினர்கள் எம்.பி. பதவிகளைத் தற்காலிகமாகத் துறந்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினராக, பிரதி அமைச்சராக, அமைச்சராக, பிரதமராக இருந்து நாட்டு மக்களுக்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சேவையாற்றியுள்ளார். எதிர்க்கட்சித் தலைவராகவும் அவர் செயற்பட்டுள்ளார்.

அவரை இலகுவில் குழப்பமடையச் செய்ய முடியாது. துணிச்சல் மிக்கவர். பரந்துபட்ட அறிவும் இருக்கின்றது. எதிராளிகளைத் துணிச்சலுடன் கையாள்வார். நாடாளுமன்ற ஜனநாயகத்தை மதித்துச் செயற்படும் அவருக்கு அனைத்துலக மட்டத்திலும் வரவேற்பிருக்கின்றது.

2015 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைப் பொது வேட்பாளராக நியமிக்கும் முடிவையும் எடுத்து நாட்டுக்காக விட்டுக் கொடுப்பை அவர் செய்திருந்தார். இப்படி அவரின் சிறப்பியல்புகளைக் கூறிக் கொண்டே போகலாம்.

அதேவேளை, தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப் படவேண்டும். நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்படுவதற்கு 30 வருட கால ஆயுதப்போராட்டமும் ஒரு காரணியாக இருந்தது. தேசிய இனப்பிரச்சினையும், தேசிய பொருளாதாரமும் ஒன்றுடனொன்று தொடர்புபட்டவை. ஆகவே, பயனுள்ள தீர்மானங்களை எடுக்கவேண்டும்.

இலங்கைக்கு உலகின் நல்லெண்ணமும் கிடைத்துள்ளது. அது மேம்படுத்தப் படவேண்டும். எனவே, உள்நாட்டு, வெளிநாட்டு முதலீடுகளை அதிகரித்து குறிக்கோள்களை அடைவதற்காக பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக பிரதமரும், ஜனாதிபதியும் இணைந்து செயற்பட வேண்டும். – என்றார்.

# வடக்கே யாழிலும் வவுனியாவிலும் ரயில் கடவைகளில் விபத்துக்கள்

## அறுவர் படுகாயம்; பேருந்து, கார் கடும் சேதம்









வடக்கே வவுனியாவிலும் யாழ்ப்பாணத்திலும் பாதுகாப்பற்ற ரயில் கடவைகளில் நேற்று இடம்பெற்ற இரு விபத்துக்களில் ஆறு பேர் படுகாயமடைந்தனர். இ.போ.ச. பேருந்து ஒன்றும் கார் ஒன்றும் மோசமாகக் சேதமடைந்தன.

### வவுனியாவில்

வவுனியா மதவாச்சியில் இருந்து மன்னார் நோக்கிப் பயணித்த ரயில் பிற்பகல் 4 மணியளவில் செட்டிகுளம் பகுதியில் உள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவையில் இ.போ.ச பயணிகள் பேருந்து ஒன்றை மோதிப் பந்தாடியது.

செட்டிகுளத்தில் இருந்து பயணிகளுடன் மெனிக்பாம் நோக்கிச் சென்ற மேற்படி பேருந்து செட்டிகுளத்தில் பாது காப்பற்ற ரயில் கடவையைக் கடக்க முற்பட்டபோது வேகமாக வந்த ரயில் பேருந்தை மோதித் தள்ளியது. இந்த விபத்தில், பேருந்துச் சாரதி உட்பட அதில் பயணம்செய்த ஆறு பேர் படுகாயமடைந்தனர்.

பேருந்தின் சாரதி கவலைக்கிடமான நிலையில் செட்டிகுளம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக் காக வவுனியா வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டார். ஏனையோரில் சிலர் செட்டிகுளம் வைத்தியசாலையிலும் வவுனியா வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

### மக்கள் போராட்டம்

இந்த விபத்தைத் தொடர்ந்து ரயில் நிறுத்தப்பட்டது. அதை முற்றுகையிட்ட மக்கள் தொடர்ந்து பயணிக்க அனுமதிக்கவில்லை. பாதுகாப்பற்ற ரயில் கடவைக்கு தீர்வு கிடைக்கும் வரை ரயிலை பயணிக்க விடுவதில்லை என மக்கள் தெரிவித்தனர். இதனால் அப் பகுதியில் அமைதியின்மை ஏற்பட்டது.

சம்பவ இடத்திற்குச் சென்ற செட்டிகுளம் பொலிஸார், நிலமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தமையுடன், ரயில்வே திணைக்களத்துடன் பேசி, அந்த இடத்தில் பாதுகாப்புக் கடமைக்கு இரு பணியாளர்களை நியமிப்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்வார்கள் என உறுதியளித்தமையைத் தொடர்ந்து மக்கள் போராட்டத்தைக் கைவிட்டனர்.

### யாழ். ஆத்திசூடி வீதியில்

இதேவேளை, யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரிக்கு பின் புறமாக, ஆத்திச்சூடி விநாயகர் ஒழுங்கையிலுள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவையில் நேற்றுப் பகல் அதிசொகுசு கார் ஒன்றை ரயில் மோதித்தள்ளியது. இந்த விபத்தில் பெண் வைத்தியர் ஒருவர் மயிரிழையில், அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்.

நேர் எதிர்த்திசையில் வந்த காரும் ஓட்டோ ஒன்றும் மேற்படி பாதுகாப்பற்ற ரயில் கடவையில் ஒன்றையொன்று விலத்திச் செல்ல முற்பட்டன. அதன் போது காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற விசேட அதிசொகுசு ரயில் கடவையை நெருங்கியுள்ளது.

ஓட்டோவை சாரதி சடுதியாக பின்னோக்கி நகர்த்தினார். ஆனால், காரை அவ்வாறு நகர்த்த முடியாத நிலையில், அதைச் செலுத்திச் சென்ற பெண் வைத்தியர் உடனடியாகவே கதவைத் திறந்துகொண்டு வெளியே ஓடினார். அடுத்த கணமே ரயில் காரை மோதிப் பந்தாடியது. இதனால் கார் மோசமாகச் சேதமடைந்தது.

பாதுகாப்பற்ற ரயில் கடவைகளில் அடிக்கடி இடம்பெறும் விபத்துக்களால் பொதுமக்களுக்கு உயிராபத்துக்கள் ஏற்பட்டு வரும் நிலையில், ரயில்வே திணைக்களம் அது தொடர்பாக எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என மக்கள் குற்றம்சாட்டியுள்ளனர். (ம–100)

யாழ். மண்ணில் முதன் முறையாக
சினிமா பாடல்களுடன்

பிரபல தென்னிந்தியப் பாடகர்
கலைமாமணி
உன்னிகிருஷ்ணன்
உத்ரா உன்னிகிருஷ்ணன்
இணைந்து வழங்கும்

500/=, 1000/=
டிக்கெட் கொள்வனவு செய்பவர்களுக்கு ஆசன வசதி உண்டு.

இன்னிசை பாடிவரும்...

மாபெரும்
திரை இசை நிகழ்ச்சி

மாலை 6.00 மணிக்கு
இம் மாதம்
ஓகஸ்ட் 12 இல்





நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு: K.T.பிரசாத்

யாழ். ஸ்ரான்லி வீதி லிங்கம் கூல்பார் முன்பாக உள்ள மைதானம் (வெலிங்டன் தியேட்டர்)

Event Management C.A.C
Tel: 077 550 4910

டிக்கெட்டுக்கள்: 300/= 500/= 1000/=

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.08.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.